ஆனந்த போதினி

தொகுதி 21 பகுதி 3

ஜூன் 1935

JL
m 211. N1SAB
N35.21.3
20399

இ42

ஜாதகாமிருத பலவிமர்சம் என்னும்

சோதிட கணிதாமிருத சாகரம்.

கற்கக் கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

என்ற மூதுரை வாக்கியப்படி எவ்விதக் கல்வியாயினும் குற்றமறக் கற்றுத் தெளிவதே நம்மோர் கடமையாகும். அதுபற்றியே வேத புருஷனுடைய அங்கங்கள் ஆறினுள் நேத்திர அங்கமாகிய, சோதிட சாஸ்திரமானது நம்மவர் எளிதிலறியும் வண்ணம் ஆரம்பசோதிடர் முதல் பஞ்சாங்க கணித ஆராய்ச்சிவரையில் துர்பிக்ஷகாலமுண்டாகும் விபரம், சர்வதேச அக்ஷாம்சம் செய்யும் முறை, சாஸ்திர உபயாதிகள். வர்கோத்தமம். தசவர்க்கம் பிரிக்குமுறை, வக்கிர. ரிஜு அஸ்தமயமறிதல். துவாதசாம்ச சக்கிர நிர்ணயம், உச்சாதி கிரகசங்கியை, கேந்திர திரிகோணதிஸ்தானங்கள், பார்வைஸ்தான பலம், திரிகரண சக்கிரமறியும் விதம், மற்றும் ஜாதக கணிதத்திற்காய்வேண்டிய லக்னஸ்புடம்—நக்ஷத்திரஸ்புடம், பாவகஸ்புடம், கிரகங்களில் ஆட்சி, உச்சநட்பு நீச்சம்பகை முதலியபலம்; மண்டல சமயசார பருவம், மனையை யளந்து ஆயம் சொல்லும் மார்க்கம்; ஆரூடபாவம், விஷயத்தை யறிந்தபிறகு முடியும் முடியாதெனக் கூறும் வகை; காலசக்கிரம், அஷ்டக வர்க்கம், கோசாரம்; லக்னபாவம்; சகோதரபாவம்; மாதுருபாவம்; புத்திரபாவம்; ரோக பாவம்; களத்திரபாவம்; ஆயுள்பாவம்; பிதுர் பாவம்; தொழில், லாபம், விரய முதலியவைகளும்; ருதுகால பலாபல விளக்கும் மார்க்கமும் பலன் முதலியவைகளையும் செவ்வனே விளக்கி சோதிட வித்வசிகாமணிகளின் வேண்டுகோளால், சாஸ்திர சம்பந்தமான குதர்க்க வார்த்தைகளை பவருடன் சாஸ்திரசம்பந்தமான உண்மையைத் தெள்ளிய நடையினலெடுத்துக் காட்டும் புராதன கணிதசாஸ்திர மூலமாய் ஒவ்வோர் விஷயங்களுக்கும் சந்தேக நிவர்த்தியாக, போ ான காரணங்களுடன் எடுத்துக்காட்டி, ஜாதகாமிருதபலவிமர்சம் என்னு ஜாதககணிதசாகரம் என்னும் புதுப்பெயர் சூட்டி உலக பரோபகாரமா- குறைந்தவிலையில் தயார் செய்திருக்கிறோம். இந்நூலிலேயுள்ள விஷயங்கள் பெரும்பாலும் சாஸ்திர சம்பந்த சந்தேகங்கள் நிவர்த்தி செய்யவும் உள்ளபடி உண்மைப் பலன் சொல்லவும் ஏதுவாகும். சோதிடர்கள் பொதுவாய் ஜனன கால லக்ஷணங்களை சந்தேகமின்றி எடுத்துச்காட்டவும் யோகாவயோகங்களும் அவையுண்டாகுங் காலங்களும் தமிழ் வாசிக்கத் தெரிந்தவர் இப்புத்தகத்தைக் கொண்டே கணிதம் செய்யத்தக்க எளியநடையிலெழுதியுள்ளதாகையால் இப்புத்தகத்தைக் கையாள்வோர் பெரிதும் பயன்படுவாரென்பதற்கு சிறிதேனுமையமில்லை.

இப்புத்தகத்தி லடங்கிய விஷயங்கள்.

1. நட்சத்திர விவரணம்.
2. விவாக பொருத்த நக்ஷத்திரங்கள்.
3. ஜன்ம நட்சத்திர பலன்.
4. இராசி.
5. இராசிகளில் சாஸ்திராதிகள்.
6. ஜன்ம லக்கின பலன்.
7. கிரகங்கள்.
8. அவைகட்குள் சத்துரு மித்திரத்துவம்.
9. தாத்கால சத்துருமித்திரத்துவம்.
10. காரகத்துவம்.
11. சுப, பாபிகள்.
12. கேந்திர திரிகோணதிஸ்தானங்கள்.
13. ஆட்சி, உச்சாதிகள்.
14. உச்சாதி கிரகஸங்கியை.
15. இராசிக்கு சுப, பாபி.
16. பார்வை.

17. ஸ்தான பாவங்கள்.
18. பாவ ஸ்தானங்கள்.
19. வக்கிராதி.
20. பலன்கள்.
21. சாத்வீகாதி காலங்கள்.
22. நவாம்ச சக்கிர நிர்ணயம்.
23. அந்திய நவாம்ச இராசிகள்.
24. வர்க்கோத்தமம்.
25. திரேகாண சக்கிர நிர்ணயம்.
26. ஹோரா சக்கிர நிர்ணயம்.
27. திம்சாம்ச சக்கிர நிர்ணயம்.
28. த்வாதசாம்ச சக்கிர நிர்ணயம்.
29. குளிகைகால ஸ்தான நிர்ணயம்.
30. லக்கின நிச்சயம்.
31. ஸ்திரி புருஷ லட்சணம்.
32. கால ஹோரை.
33. ஜன்ம கால லட்சணம்.
34. த்விக்கிரக யோகம்.
35. திரிக்கிரக யோகம்.
36. குசகாதி யோகங்கள்.
37. ஸங்கியா யோகங்கள்.
38. தரித்திராதி யோகங்கள்.
39. ஆசிரிய யோகங்கள்.
40. விசேஷ யோகங்கள்.
41. ஊமை.
42. அந்தகத்துவம்.
43. பதிதபாவம்.
44. புஷ்டியம்சம்.
45. ஸ்திரி ஜாதகம்.
46. ஸ்திரி நடக்கை.
47. களத்திர பாவம்.
48. புத்திர பாவம்.
49. அபுத்திர பாவம்.
50. சுவீகாரம்.
51. வியாதி.
52. பாலாரிஷ்டம்.
53. அற்பாயுர்பாவம்.
54. மத்தியாயுர்பாவம்.
55. தீர்க்காயுர் பாவம்.
56. நிர்யாண விஷயம்.
57. மாரகம் கொடுப்பவர்கள்.
58. தசைகள்.
59. நட்சத்திர தசை.
60. அதன் புக்த்தியாதிகள்.
61. ஹூமாசாதிகள்.
62. நடசத்திர தசைகளின் புத்தி காலங்கள்.
63. சக்கர தசைகள்.
64. சக்காதசா காலங்களும் நாட்டிகை.
65. சக்கர புத்திகள்.
66. தசாபலன்களின் விதிகள்.
67. தசாபலன்.
68. கோசரம்.
69. அஷ்வர்க்க சந்திரபிந்து.
70. கோசர பலம்.
71. அந்தபலன் தரும் சமயம்,
72. கோசர வேதை.
73. அஷ்ட வர்க்கம்.
74. அதன் விதிகள்.
75. கண்டதிரிய விவரம்.
76. விவாக பொருத்தங்களின் விவரம்.
77. பொருத்தங்களின் லட்சணம்.
78. விவாகத்திற்கு தோஷங்கள்.
79. முகூர்த்தங்கள்,

இதன் விலை ரூபா 1—8—0

ஸ்திரீ புருஷ ஜாதகத் திறவுகோல்

ஜோதிடரை விரும்பாமலே ஒவ்வொருவரும் தாம் தாமே ஜாதக கணிதம் பண்ணவும், 9 கிரகங்களை 12 இராசிகளில் அடைத்து ஆட்சி புச்சம் இவை களைக் கண்டு பலாபலன் சொல்லவும், இராசியில் 7 கிரகங்கள் ஒன்றாகக் கூடி யிருப்பினும், இரண்டு மூன்று கிரகங்கள் சேர்ந்திருப்பினும் வேறு விதமாக மாறி மாறியிருப்பினும் அவைகட்கு அனுபவமாகப் பலன் தெரிந்து சொல்ல வும் இதனால் தெரிந்துகொள்ளலாம். இதன் விலை அணு 8.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

காதலருக்கு இன்பந்தரும் நூதன நூல்
அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஆனந்த சாஸ்திரம்
வெளியாயிற்று!

இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

(நான்காம் பதிப்பு)

அழகிய சிகப்பு கலிகோ பைண்டு செய்யப்பட்டு கண்
ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன் படங்களுடன்

400-பக்கங்களுக்குமேல் அழகிய பெரிய வெயிட்
பேபரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1—8—0

இது காதலர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; போகானந்தத்தை விரும் பும் பூமான்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம்.

இது காதல் இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்வாழ்க் கையை நல்வாழ்க்கையாக நடத்திப் பேரானந்தக் கடலில் மூழ்கி நற்சந்ததி யைப் பெற்று, மறுமைப் பயனையும் அடைதற் கேதுவாயிருக்கும்படி பற்பல இன்பமார்க்கங்கள் நிறைந்த இந்நூல் இப்போது இனிய தமிழ்நடையில் வெளி வரப்பெற்றிருக்கிறது. இதில் நமது பூர்வீக கொக்கோக சாஸ்திரத்தின்சாரம்

ங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேக தத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, அரபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரென்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்ப வாழ்க்கையின் இரகசிய முறைகளும், அதற்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன் பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப் படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம்புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமுற்று அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலாமென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடைய வேண்டிய இன்பத்தையும, மறுமை இன்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஷை தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

இல்லற இன்ப விஜயம்

"இது எங்கே யிருக்கிறது? என்ன ரூபமுடையது? இதை எப்படி உபயோகித்து ஆண் மக்களும் பெண் மக்களும் உலக இன்பத்தை அனுபவிக்க வேண்டும்?" என்று பலர் இக் கேள்விகளைக் கேட்கலாம்.

உண்மைக் காதல் ரசத்தை விரும்பும் உத்தமர்களே! சுகானந்தத்தை விரும்பும் சகோதர சகோதரிகளே! "இல்லற இன்ப விஜயம்" என்னும் சிறந்த இன்பரச பொக்கிஷம், ஆனந்தக் களஞ்சியம் சென்னை 'ஆனந்தபோதினி' ஆபீஸில் தமிழ்நாட்டுச் சுகவாசிகளின் அதிர்ஷ்டவசத்தால் விற்பனைக்குத் தயாரித்து வைக்கப்பட்டிருக்கிறது; இஃதோர் அருமையான தமிழ்ப் புத்தகம்; இதைப் படித்து ஆண் பெண்கள் அனுபவிக்கத் தக்க இன்ப வகைகள் அத்தனையும் பிரத்தியக்ஷமாகக் கண்டு பேரானந்தத்தை அடையலாம்.

இதன் விலை ரூபா 1—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1.

தமிழ் மெட்டீரியா மெடிக்கா

என்னும் அருமையான வைத்திய நூல்

MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துக் கலவை வினா முறைகளைத் தமிழில் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குவது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிடவேண்டுமென்பதை இந்நூல் நன்குகக் கூறுகின்றமையால் இதை ஓர் 'ஆபத்துக் குதவும் தோழன்' என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அனுபவம் மிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கூடிய வரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். இதன் விலை ரூபா 3.

ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.

புதிய நாவல்! பெருகும் ஆவல்!!

சற்குணவல்லி

அல்லது

சித்தூர் இளைய ஜமீன்தாரணி.

(ஸ்ரீ. எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது.)

இதில் தர்மசீலன் என்னும் கதாநாயகன் முதலில் ஆனந்தசுந்தரி என்னும் மாதை மணக்கிறான். இவளோ கணவனை மதியாத மாபாதகி, சிற்றின்ப ஆனந்தத்தையே மதித்து அன்னிய ஆடவருடன் அடிக்கடி உறவாடுகொடு நீலியாகி கொண்டவனை விட்டு கண்டவனுடன் திடீரென்று மறைந்து விட்டாள். தர்மசீலன் மிகவும் யோக்கியன். பிறகு அவன் மேல் காதல் கொண்ட கோடீஸ்வரி சற்குணவல்லி என்னும் சித்தூர் இளைய ஜமீன்தாரணி அவனை உள்ளன்புடன் மணக்கிறாள். இவளோ கற்பின் அணிகலம், பொறுமையின் பொற்கொடி, பொறுமையின் பொக்கிஷம், நிறையுடைமை நங்கை, வீரத் தெய்வம். கணவனைக் கடவுளென மதித்தவள். தர்மசீலன் முதல் மனைவியைக் கொன்றுவிட்டு மறு மணம் செய்துகொண்டான் என்னும் ஆபாண்டமான பழி, சந்தர்ப்ப சாக்ஷியங்களால் அவனைப் பலவித பரிசோதனைகளுக்கும், ஆபத்துகளுக்கும் உட்படுத்திற்று. இருந்தாலும் சற்குணவல்லி அவன் மீது வைத்த பிரியம் மாறவில்லை. கடைசியில் ஆனந்தசுந்தரி திடீரென்று ஒரு நாள் தோன்றி தன் நடக்கைக்குத் தக்க தண்டனையைத் தானே ஏற்று தன் கணவன் மீது சுமத்தப்பட்ட வீண் பழியை விளக்கி, ஆவி நீத்தாள். இதில் இருவித மாதர் நடத்தை விளக்கப்பட்டிருப்பதோடு பலவித நீதிகள் தெள்ளிய எளிய இனிய நடையில் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தும்படி எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் இதை வாசித்து இருமைப் பயனைத் தேடி இன்புறுவார்களாக.

இதன் விலை ரூபா 1—8—0.

கைவல்ய நவநீத வசனம்.

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமீ முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருளைத் தழுவிப் பல மகான்கள் பல நூற்களை இயற்றி யிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இதன் நடை செய்யுளாகவும் மிகவும் கடினமாயிருப்பதால் எவரும் எளிதில் வாசித்துணரும்படி இதை வசனமாக எழுதி வெளியிடப்பட் டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம். விலை ரூபா 1—8—0.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஆசிரியரின்றி ஆங்கிலத் தெரிந்துகொள்ளும் ஆனந்த

ஆங்கில பாஷா போதினி.

(நான்காம் பதிப்பு) விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூ. 1—8—0.

எம். ஏ., எல். டி. பட்டம் பெற்ற ஆங்கில போதகாசிரியராகிய திருவாளர் எம். ஷண்முகசுந்தர முதலியாரவர்களால் இயற்றப்பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும், சிறந்த அமைப்புகளோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

500-பக்கங்களுக்குமேல் திக்கு காகிதத்தில் அச்சிடப்பட்டு சீமை காலிகோ பைண்டு செய்யப்பட்டது.

நற்பல கதைகளும், பாரதக் கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திரங்களுக்கமும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான அழகிற் சிறந்த 16-ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இக்காலத்தில் இங்கிலீஷ் இராஜ பாஷையாயிருப்பதால் அதை எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாயிருக்கின்றது. அப்படிப் படியாதவர், பல சங்கடங்களை அடைகின்றனர். ஆதலின், அத்தகையினர் கற்றுக்கொள்வதற் குதவியாயிருக்கும்படி ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்கு எளிதிற் போதிக்கும் அரிய போதனாமுறை நூலாகிய இது பலர் வேண்டுகோளுக்கிணங்க வெளிப்படுத்தப் பெற்றிருக்கின்றது.

இதனைச் சிரத்தையுடன் படிப்பவர் பணச் செலவில்லாமலும், வேறெவ்வித கஷ்டமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். ஆயிரக்கணக்கான பணஞ் செலவு செய்து 10 வருஷம் படிப்பதனால் எவ்வளவு ஆங்கில தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40-நாளில் இப் புத்தகத்தின் உதவியைக்கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதிவிரைவில் படித்துக்கொள்ளலாம். மனிதன் தானே சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத் தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப் பெற்றிருக்கின்றன.

இதில் இதுவரை வெளிவராத நூதன பாடமுறைகளெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு ரூபா முதல் 10 ஆயிரம் ரூபாவரை சம்பளப்பட்டிக் கணக்கு, வட்டிக்கணக்கு, ஒவ்வொரு தேசத்திலும் ஏற்படும் மணி வித்தியாசம், அன்னிய தேச நாணய மதிப்பு முதலியனவெல்லாம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

மேற்படி தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

ஔவையார் அருளிச்செய்த

பெட்டகம்.

புதிதாய் அச்சிடப்பட்டு வெளிவந்துவிட்டது. விலை அணா 2.

கற்கோட்டை

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது.

இந்த அற்புதமான நாவல் ஏற்கனவே நமது பத்திரிகையில் தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப் பட்டு வந்ததாகும். இதன் விசேஷத்தையறிந்து நமது சந்தாநேயர்களில் அநேகர் இதைப் புத்தகமாய் முடித்துத்தர வேண்டுமென்று பன்முறை கேட்டுக் கொண்டபடியால் இது வெளியிடப் பட்டது. ஸ்ரீமான் முதலியாரவர்களுடைய நாவல்களை வாசித்துள்ள நம் தமிழ நாட்டார்க்கு இக்காவலின் சுவையையும் அழகிய கதைப் போக்கையும் நாம் எடுத்துக் காட்டவேண்டியது அநாவசியம் என்றே நினைக்கின்றோம். அவர் எழுதிய நாவல்களுள் இதுவே தலை சிறந்ததாகும். இதன் விசேஷ அம்சங்களைச் சுருக்கமாய்க் கீழே குறிப்பிடுகின்றோம்.

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்துகொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். இதில் தேசப்ரஷ்டமடைந்த சில உயர்குல மகுட வர்த்தனர்கள் தலை மறைந்து வசிக்கும்போது, நெஞ்சு திடுக்கிடும் விபரீதங்களில் சிக்கிக் கொள்வதும், அவற்றினின்றும் தப்பித்துக்கொள்ள அவர்கள் செய்யும் வீர தீர சாமர்த்தியச் செயல்களும் சொல்லொணா வியப்பையும் சோகத்தையும் வீரரசத்தையும் மூட்டும். சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும் துணிகரமான தீரச் செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க் காதல் கொண்ட உத்தம ஸ்திரீகள் தம் காதலர் பொருட்டாய்! எவ்வளவு வரையில் ஆடவருக்குச் சமமாய் நடந்து கொள்ளச் சக்தியுடையவர்களாயிருக்கிறார்களென்பதை நன்கு விளக்கும். இக் கதையிலுள்ள முக்கிய விசேஷமென்னவென்றால், இதிலுள்ள கதா பாத்திரங்களில் ஒவ்வொருவருடைய நடக்கைகளும் அவற்றின் பயன்களும் மானிடர்க்கு இன்றியமையாததான ஒவ்வொரு நீதியை அத்தாட்சியோடு புகட்டுகின்றன.

இது தெளிவான இனிய நடையில், ஆங்காங்கு நாம் உணரவேண்டிய முக்கிய விஷயங்களையெல்லாம் விளக்கிக் காட்டி எழுதப்பட்டிருக்கிறது. இதில் நூலாசிரியர் திருவுருவப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூபா 2—0—0.

"ஆனந்தபோதினி" சந்தாதாரர்களுக்கு

விலை ரூபா 1—8—0.

ஞானவல்லி இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மானஜாதை விளக்குவது, நீதியைப் போதிப்பது. இதன் விலை அணா 8

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

கடந்த வருடங்களைக்காட்டிலும் இவ்வருடப் பஞ்சாங்கத்தில் அனேக விஷயங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இவ்வருடம் கிறிஸ்துவ பண்டிகைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

100 பக்கங்கள் கொண்ட **யுவ வருஷத்திய**

(நேத்திர ஜீவநக்ஷத்திராதி சாந்திர லௌரமான)

சர்வமுகூர்த்த

"ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கம்"

நமது வானசாத்திரக் கணிதத்திலும், ஆங்கில வானசாத்திரக் கணிதத்திலும் திறமை வாய்ந்த, ஸ்ரீமான் C. G. இராஜன் பி. ஏ. (B. A. Mathematics) அவர்களால் இப் பஞ்சாங்கம் சுத்தமாகக் கணிக்கப்பட்டது.

சிறுவர்களும், ஸ்திரீகளும் சுலபமாக அறிந்து கொள்ளும்படி திதி நக்ஷத்திரங்களின் நாழிகையோடு, மணி நிமிஷமும் பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இதில் பஞ்சாங்கத்தில் இருக்க வேண்டிய, நேத்திரம், ஜீவன், அமிர்தாதி யோகங்கள், விவாக சக்கிரம், அகஸ் இராசியிருப்பு, விரதாதி விசேஷங்கள், தசாபுத்தி, கிரக சாரங்கள், தசவிதப்பொருத்தங்கள், சகுனங்கள் முதலியவைகளோடு, நவநாயகர்கள் பலன் முதலிய வேறு விஷயங்களும் சேர்க்கப்பட்டு சோதிடர்களும் மற்றவர்களும் எளிதில் அறிந்து கொள்ளும்படி சோதிட பொது விஷயங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவ்வருஷம் விசேஷமாக ஜோதிடர்களுக்கு மிகவும் உபயோகமாயுள்ள நட்சத்திர ஓரை, சந்திர உதையம், கிரக உச்சம், நவக்கிரக திரயன சுத்த ஸ்புடமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இது ஜோதிடர்களுக்கு கிரக ஸ்புடம் செய்ய உபயோகமாகும்.

பஞ்சாங்கம் 1-க்கு விலை அணு 2.

6-பஞ்சாங்கங்கள் 0—8—0. 12-பஞ்சாங்கங்கள் 0—14—0.

தனி பஞ்சாங்கம் வேண்டுவோர் விலையோடு தபால்கூலி ½ அணு சேர்த்து தபால் பில்லைகளாக அனுப்பவும்.

25 பஞ்சாங்கங்கள் வேண்டுவோர் ரூ. 1—10—0 முந்தி அனுப்பிவிட்டு தங்களுக்கு சமீபமான ரயில்வே ஸ்டேஷன் தெரிவித்தால் பார்சலாக அனுப்பிவிடுவோம். ரயில் சார்ஜ் நீங்கள் கொடுத்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

☞ எமது பஞ்சாங்கமும் புஸ்தகங்களும் எல்லா ஊர் புத்தக வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

தனலக்ஷ்மி கம்பெனியார் வெளியிடும் 6-ம் நெ. 28-ம் நெ. பஞ்சாங்கங்களும் எமது அச்சுக்கூடத்திலேயே நல்ல விதத்தில் பதிப்பிக்கப்பெற்றிருக்கின்றன.

பஞ்சாங்கம் 1-க்கு அணு ½.

6-பஞ்சாங்கம் அணு 2½. 12-பஞ்சாங்கம் அணு 4

ஷை வருஷத்திய தேவுங்கு நிம்மகேட்ட பஞ்சாங்கம்.

1-க்கு அணு ½. 6-க்கு அணு 2½. 12-க்கு அணு 4.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நே. 167, மதராஸ்.

உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 21 | யுவஹு புரட்டாசிமீ கஉ 1935 செப்டம்பர்மீ 17உ | பகுதி 3

கடவுள் வணக்கம்.

இடைந்திடைந் தேங்கி மெய்புளகிப்ப
எழுந்தெழுந் தையநின் சரணம்
அடைந்தனன் இனி நீ கைவிடேல் உனக்கே
அபயமென் றஞ்சலி செய்துன்
உடைந்துடைந் தெழுது சித்திரப் பாவை
ஒத்து நான் அசைவற நிற்பத்
தொடர்ந்து நீ எனையாட் கொள்ளுநாள் என்றோ
சோதியே ஆதிநாயகனே. (1)

ஆதியாய் நடுவாய் அந்தமாய்ப் பந்தம்
யாவுமற் றகம்புற நிறைந்த
சோதியாய்ச் சுகமா யிருந்தவெம் பெருமான்
தொண்டனேன் சுகத்திலே இருக்கப்
போதியா வண்ணம் கைவிடல் முறையோ
புன்மையேன் என்செய்கேன் மனமோ
வாதியா நின்ற தன்றியும் புலன்சேர்
வாயிலோ தீயினுங் கொடிதே. (2)

207699

பெரிய வண்டங்க ளெத்தனை அமைத்ததிற் பிறங்கும்
உரிய பல்லுயி ரெத்தனை அமைத்தவைக் குறுதி
வருவ தெத்தனை அமைத்தனை அமைத்தருள் வளர்க்கும்
அரிய தத்துவ எனக்கிந்த வண்ணமே னமைத்தாய்?

வாதனையோ டாடு மனப்பாம்பு மாயவொரு
போதனைதந் தையா புலப்படுத்த வேண்டாவோ? (4)

1. இதனால் தம்மையாட்கொள்ளு நாளை அறிய விரும்புகின்றார்.

(இ-ள்) ஒளியே! முதல்வனே! விலகி விலகி அழுது உடல் புளகாங்கிதங் கொள்ளப் பலகால் எழுந்து அழகனே! தேவரீர் பாதங்களை அடைந்தேன். இனிமேல் அடியேனைக் கைவிடாதே! தேவரீரிடத்திலேயே அடைக்கலம் என்று விண்ணப்பம் செய்து கும்பிட்டு மனம் நெகிழ்ந்து நெகிழ்ந்து எழுதிய சித்திரப் பாவைபோல் அடியேன் அசையாதபடி நிற்கத் தேவரீர் அடியேனை விடாது பற்றி அடிமையாகக் கொள்ளும் நன்னாள் எந்நாளோ? என்க.

இடைதல், வங்குதல், மெய்புளகித்தல், எழுதல் முதலியன கருவிகளைப் பொய் என்று அறிந்தவிடத்தும், திருவருளுதித்தவிடத்தும் அடியார்கட்கு வருங்குணங்கள். "உடைந்துடைந்து..........நானசைவற நிற்ப" என்றது அடிக்கடி நிற்றலும், இருத்தலும், கிடத்தலும் முதலிய அங்க சேஷ்டைகளின்றிச் சித்திரத்தை அசைவற நிறுத்தினாற்போல் மோன சமாதி கூடியிருத்தலேயாம்.

2. இதனால் மனவாதனையைப் பற்றிக் கூறுகின்றார்.

(இ-ள்) முதலாய், இடையாய், கடையாய்ப் பற்றுக்களெல்லாம் நீங்கி அகத்தும் புறத்தும் பரவிநின்ற ஒளிப்பிழம்பாய் ஆனந்தமாய் எழுந்தருளியிருந்த எம்பெருமானே! அடிமையாகிய நான் இன்பநிலையி லிருக்குமாறு போதியாவகை சோரவிடுதல் முறையாமோ? புன்மையினுடைய அடியேன் என் செயக் கடவேன்? மனமோ வருந்தாநின்றது. அல்லாமலும் விஷயங்கள் சேர்தற்குரிய பொறியோ நெருப்பினைக் காட்டிலும் கொடிதாயிருக்கின்றது என்க.

மனமானது ஒரு கண்ணாடி போலிருந்து பிரபஞ்ச காரியங்களைத் தன்னிடத்திற் பிரதிபலிக்கச் செய்து தன்னை மயக்கும் தன்மை வாய்ந்திருத்தலின் "மனமோ வாதியா நின்றது" என்றனர். புலனே மனத்தினைத் தன் வழிப் படுத்தி உலகியல் விவகாரங்களில் ஈடுபடுத்தி அலைக்கச் செய்யுமாகலானும், புலன் காரணமாகவே பொறி, பூதம், கரணம் முதலியவைகள் விரியுமாகலானும் தீமையான விளைவு அனைத்திற்கும் காரணமா யிருத்தலானும் "புலன்சேர் வாயிலோ தீயினுங் கொடிதே" என்றனர்.

3. இதனால் எல்லாம் படைத்துக் காக்கும் இறைவன் தம்மைப் புறக்கணித்து நிற்பதற்குக் காரணம் அறிய விரும்புகின்றார்.

(இ-ள்) பெரியனவாகிய அண்டங்கள் எத்தனை அமைத்து, அவ்வண்டத்துள் விளங்குகின்ற உரியனவாகிய பல்வகை உயிர்கள் எத்தனை வகுத்து, அவைகட்கு உறுதி பயப்பனவாகிய பொருள்கள் எத்தனை வகுத்தாய்? இவ்வாறு வகுத்து அவற்றினிடத்து அருளைப் பெருக்குகின்ற அரிதாகிய உண்மைப் பொருளே! அடியேனுக்கு இந்தப் பிரசாரம் ஏன் அமைத்தனை என்க.

4. இதனால் மனமடங்கும் வழி என்ன என்று மயங்குகின்றார்.

(இ-ள்) ஐயனே! விஷய வாசனையுடனே கூடியலைகின்ற மனம் என்னும் பாம்பு மடிய எனக்கு உன் திருமந்திரத்தினைப் போதித்து அதனை எனக்கு அறிவுறுத்த வேண்டாவோ? என்க.

ஆனந்தபோதினி

யுவ வரு

புரட்டாசி மீ 1உ

பலியை நிறுத்த உயிர்த்தியாகம்!

தருமங்களில் தலை சிறந்தது அஹிம்ஸா தருமம்; தன்னுயிர் போனாலும் மன்னுயிர் போகும் வினையை மேற்கொள்ளக் கூடாது; உயிர்கட்குத் தொண்டு செய்தலே பிறவிப்பயன்— என்னும் உயரிய தத்துவங்கள் செறிந்து கிடக்கும் நமது நாட்டில் இன்னும் கொலையும் புலையும் சாஸ்திரங்களின் பேராலும் தெய்வங்களின் பேராலும் நடைபெற்றுக்கொண்டிருப்பது வருந்தத்தக்கதாகும். எல்லாச் சமயங்களும் அருளறவொழுக்கத்தையே அடிப்படையாக வைத்து வற்புறுத்துகின்றன. சைவம், வைஷ்ணவம் முதலிய சமயங்களெல்லாம் உயிர் வதைத் துண்ணலை ஆதரிக்கவில்லை. இக் கொடுமையை அழுத்தமாகக் கண்டித்திருக்கின்றன. அத்துவைதம் ஜீவகோடிகள் எல்லாம் பரம்பொருள் சொரூபம் என்று வாதிக்கின்றது. ஜைனமும் பௌத்தமும் அருளறமாகிய ஜீவகாருணிய தருமத்தை முதன்மையாக வைத்து வற்புறுத்தவே எழுந்தன. இவற்றுள் ஜைன சமயத்தைத் தழுவி வரும் மக்கள் மட்டும் இக்காலத்திலும் அஹிம்ஸா தருமத்தை உயிராகப் போற்றி வருகின்றனர். ஏனைய சைவ, வைஷ்ணவ, அத்துவைத, பௌத்த சமயங்களைத் தழுவி வருவதாகப் பெருமை பேசும் மக்களிற் பெரும்பான்மையோர் உயிர்வதை செய்கின்றனர்; உண்ணுகின்றனர். உண்ணும்பொருட்டு உயிர்களைக் கொல்லல் பாவமே ஆயினும் அதைப் பற்றி இப்போது இங்கே விரித்துக்கொண்டிருக்க நாம் விரும்பவில்லை. இது தனி விஷயம். தேவதைகளுக்கு உயிர்ப்பலியிடலாமா? தேவதைகள் உயிர்ப்பலிகளை விரும்புகின்றனவா? என்பதே இப்போது எடுத்துக்கொண்ட கேள்வி.

சைவம்-வைஷ்ணவம் முதலிய அன்புச் சமயங்களைச் சேர்ந்த மக்கள் சிறு தேவதைகளுக்குப் பலியிடும் வழக்கத்தைப் பற்றியும் செடில் குத்தல்போன்ற கோரச் செயல்களால் உடல்களைச் சித்திரவதை செய்யும் வழக்கத்தைப்பற்றியும் நாம் அடிக்கடி அழுத்தமாகக் கண்டித்துக்கொண்டு வந்திருக்கிறோம். சென்ற பத்தாண்டுகளாகத் தென்னிந்திய ஜீவரக்ஷா பிரசாரக சபையார் தென்னாட்டில் ஆங்காங்கு

நடைபெறும் பலிக்கொடுமைகளை நிறுத்த அல்லும் பகலும் அரும்பாடு பட்டு வருகின்றனர். அவர்களுடைய ஊழியம் மகத்தானது. மூட இருள் சூழ்ந்த இந்நாட்டில் அச்சபையின் தொண்டு கடலிற் பெருங்காயம் கரைத்ததற்கு ஒப்பாகவே இருக்கிறது. எனினும் சிறிதாவது பயன் விளைந்திருக்கிறது என்பதையும் எல்லாரும் ஒப்புக்கொண்டு தீர வேண்டும். சென்ற இரண்டாண்டுகளாக அரசாங்கத்தார் தேகமெங்கும் அலகுகளைக் குத்திக்கொண்டாடும் கொடிய வழக்கத்தை நிறுத்தச் சில இடங்களில் 144-வது பிரிவுப்படி தடையுத்தரவு பிறப்பித்தார்கள். அத்தடையுத்தரவுகள் கைமேற் பலன் அளித்தன என்பதில் ஐயம் இல்லை. எனவே சட்டத்தின் மூலம் இக்கொடுமைகளையெல்லாம் ஒழித்துவிட தென்னாட்டில் மாத்திரமன்று. இந்தியா முழுவதிலுமே இப் பலிக் கொடுமை நிலைத்திருக்கிறது.

கல்கத்தாவைச் சேர்ந்த காளி கட்டத்தில் மிருகபலி அதிகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஜெயப்பூர் பண்டித ராமச்சந்திர சர்மா என்ற உண்மை அந்தணர் அங்கே நடைபெறும் பலிக்கொடுமையை நீக்கவேண்டும் என்று முனைந்து உயிர்த்தியாகம் செய்யவும் தயாராகி விட்டார். இவர் சென்ற 5-9-35ம் தேதி காலை முதல் கல்கத்தா காரன்வாலிஸ் தெருவில் 209ம் எண்ணுள்ள இல்லத்தில் உயிர் போகும்வரை உண்ணாவிரத மேற்கொள்ளத் துணிந்துவிட்டார். இவர் இந்த விரதம் மேற்கொள்ளத் துணிவதற்கு முன் கல்கத்தாவாசிகள் வங்க பிரம்மஞான சங்கத் தலைவர் ஹீரேந்திர நாதர் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டி உயிர்போகும்வரை உண்ணாவிரதம் இருக்கக் கூடாது என்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டனர். பண்டித ராமச்சந்திர சர்மாவும் அக் கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்தார். இவர் கல்கத்தா வாசிகளின் வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. மறுபடியும் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்திலும் பண்டித சர்மா தமது உறுதியை வெளியிட்டார். "$3\frac{1}{4}$ மாதங்களுக்கு முன் நான் மேற்கொள்ளத் துணிந்த விரதத்தை இப்போது தொடங்குகின்றேன். இது ஒரு புனிதநாள். தக்ஷிணேசுவரத்தில் பலிக் கொடுமை நின்றது போலவே கல்கத்தாவிலும் நிற்குமென்று நம்புகின்றேன். நான் இறந்த பிறகாவது கடவுள் இப் பலிக் கொடுமையைத் தடுக்கும் எண்ணத்தை வங்க நண்பர்களுக்குக் கொடுப்பார் என்று நினைக்கிறேன்" என்று மன உருக்கத்துடன் பேசினார். குறிப்பிட்ட நாளில் ஹரிநாம சங்கீர்த்தனத்துடன் உண்ணாவிரதமும் ஆரம்பமாய் விட்டது. தசராவின்போது காளி கட்டத்தில் ஏராளமான ஆடு கோழிகள் பலியிடப் படுமாம். ஒரு எருமையும் பலி கொடுக்கப்படும் என்று தெரிகிறது. பண்டித சர்மா கோஷ்டியினர் உண்ணாவிரத விவரத்தை எல்லாருக்கும் அறிவித்துப் பலியை நிறுத்த முயன்று கொண்டிருக்கின்றனர். நெஞ்சில் ஈரமில்லாத கோவில் பூசாரி கோஷ்டியினர் மிருக பலியை ஆதரித்துச் சாஸ்திர மேற்கோள்களுடன் பிரசங்களை

வெளியிட்டுப் பரப்பி வருகின்றனர். நரமேத யாகத்தினால் மோக்ஷமடைந்த ஒரு அரசனை உதாரணங் காட்டிக் கோவில் பூசாரிகள் மிருக பலியை ஆதரித்துப் பிரசாரம் செய்து வருகின்றனர். கும்பகோணம் காஞ்சிகாமகோடி பீடாதிபதியான ஸ்ரீ சங்கராச்சாரியார் கூற்றையும் பூஜாரிகள் தங்களுக்கு ஆதாரவாய் உபயோகித்து வருகிறார்களாம். ஆனால் ஸ்வாமிகள் அதை மறுக்கிறார் என்று சொல்லப்படுகிறது. ஜகத்குரு ஸ்வாமிகள் யாகங்களையும் பலிகளையும் ஆதரித்துப் பிரசங்கம் செய்திருக்கிறார் என்பது உண்மை. முன்பு சென்னைக்கு வந்திருந்த போது அநேக இடங்களில் இதைச் சொல்லியிருக்கிறார். மதுவுண்ணலையும் ஒருவாறு ஆதரிக்கிறார். இப்போதும் வங்காளத்தில் அவ்விதமே பலியை ஆதரித்து உபதேசம் செய்தார் என்று பத்திரிகைகளில் வெளிவந்தது. பிறகு இச் செய்தி மறுக்கப்பட்டிருக்கிறது. ஒருகால் ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் தங்கள் கொள்கையை மாற்றிக் கொண்டிருந்தால் நாம் அவர்களுக்கு மனப்பூர்வமாய் வணக்கஞ் செலுத்துகின்றோம். மற்ற மடாதிபதிகளும் இவரைப் பின் பற்றி நாட்டில் அஹிம்ஸா தருமத்திற்கு விரோதமான பலிக் கொலைகளை நிறுத்தப் பாடுபட வேண்டும் என்றும் ஆசைப்படுகின்றோம். நிற்க,

பண்டித ராமச்சந்திர சர்மா மேற்கொண்டுள்ள கடும் விரதத்தைப் பற்றி இரண்டொரு விஷயம் அறிவிக்க விரும்புகின்றோம். பண்டித சர்மா ஒருவர் உயிர்த்தியாகம் செய்வதால் பலிக்கொடுமை நாட்டை விட்டு ஓடிவிடும் என்று நாம் நம்பவில்லை. மக்களிடையே மூட இருள் தடித்து நிற்கிறது. பண்டிதரைப் போன்ற உண்மைத் தியாகிகள் இடையறாது பிரசாரத்தின் மூலம் கிளர்ச்சி செய்தால் தக்க பலன் காணலாம் என்றே நம்புகின்றோம். இவர் பிடிவாதமாய் உயிர் நீத்தால் பத்திரிகைகள் பாராட்டி எழுதும். அன்பர்களும் மற்றும் சிலரும் புகழ்ந்து வருந்துவார்கள். இவருடைய அரிய உயிர்த்தியாகத்திற்குக் கிடைக்கக் கூடிய பலன் இவ்வளவுதான். இதனால் இவரது நோக்கம் சித்தியாகிவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. இவர் உயிருடன் இருந்தால் சட்டத்தின் மூலம் இத்தகைய கொடுமைகளையெல்லாம் ஒழிக்க நாடெங்கும் கிளர்ச்சி செய்யலாம். உணர்ச்சி மேலீட்டால் விரத நெருப்பில் குதித்து விட்ட அந்தணரான பண்டித சர்மாவைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு காந்தியடிகள்—டாக்டர் ரவீந்திர நாத தாகூர் போன்ற தலைவர்களைச் சார்ந்து நிற்கிறது என்று இச் சமயத்தில் எடுத்துக்காட்ட விரும்புகின்றோம். தென்னிந்திய ஜீவரக்ஷா பிரசாரக சபையினரும் பண்டிதர் உயிர்த்தியாகம் செய்யக் கூடாது என்றே கேட்டுக் கொண்டிருக்கின்றனர். மேலும் இந் நாட்டிலுள்ள ஜீவகாருணிய சீலர்கள் எல்லாரும் கூட்டங்கள் கூட்டித் தீர்மானங்களை நிறைவேற்றிப் பண்டிதருக்கும் காளிகட்டத் தருமகர்த்தர்களுக்கும் அவைகளை அனுப்பி வைக்கவேண்டும் என்றும் வேண்டியிருக்கின்றனர். இவ் வேண்டுகோளை நாம் ஆதரிக்கின்றோம்.

காதலனா? காதகனா?

நேயர்கட்கு ஒரு சமாதானம்

முன்னர் அறிவித்தபடி "காதலனா? காதகனா?" என்னும் செந்தமிழ் நாவலைச் சென்ற ஆவணிமாதம் அனுப்ப முடியாமல் போனதற்கு நேயர்கள் பெரிதும் மனம் பொறுக்குமாறு வேண்டுகின்றோம். பலவித வேலைத் தொல்லைகளால் அப்பொழுது புத்தகம் முற்றுப் பெறாத காரணத்தால் குறிப்பிட்டபடி அனுப்பக் கூடவில்லை. எனவே ஷெ நாவல் இந்த மாத "ஆனந்தபோதினி" சஞ்சிகையுடன் சேர்த்து அனுப்பப்பட்டிருக்கிறது. தனிப் புத்தகமாக அனுப்பினால் தபாற் செலவு அதிகமாகும். அதாவது சுமார் பதினாயிரம் நேயர்களுக்கு மேல் இப் புத்தகத்தை இனாமாக அனுப்பவேண்டியிருக்கிறது. இவர்களுக்கெல்லாம் தனித்தனி முக்காலணாத் தபால் தலை ஒட்டி புக்போஸ்டில் அனுப்புவதானால் எவ்வளவு செலவாகும் என்பதை நேயர்கள் சிந்தித்துப் பார்ப்பார்களாக. "ஆனந்த போதினி"யின் அநுபந்தமாகச் சேர்த்து அனுப்பினால் அரையணாத் தபாற் செலவில் சஞ்சிகையும் புத்தகமும் ஏககாலத்தில் சேர்ந்துவிடும் என்று எண்ணியே இத்தகைய ஏற்பாடு செய்ய நேர்ந்தது. கிரௌன் 1×16 பக்க அளவில் சுமார் 200-பக்கங்களில் ஷெ நாவல் வரும் என்று தெரிவித்திருந்தோம். இப்போது சஞ்சிகையோடு சேர்த்து அனுப்பவேண்டி நேர்ந்தமையால் அந்த வடிவை மாற்றிச் சஞ்சிகை வடிவில் புத்தகம் முடிக்கப்பட்டிருக்கிறது. இது அதைவிடப் பெரிய அளவுள்ளது. சிறிய எழுத்துக்களில் செய்யப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. பார்வைக்குப் பக்கங்கள் குறைவே யொழிய விஷயமெல்லாம் ஒன்றுதான். எனவே காலதாமதம் ஏற்பட்டமைக்கும், வடிவத்தை மாற்றி விட்டமைக்கும் நேயர் மனம் பொறுக்கவேண்டும் என்று அன்பின் உரிமைகொண்டு மீண்டும் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

மானேஜர்.



பிரம சூத்திரம்.

(சித்தூர் பண்டித-பூ. ஸ்ரீநிவாசன்)

9. ததுபர்யதிகரணம்,

26-வது சூத்திரம் அவதாரிகை:—முந்திய அதிகரணத்தி னிறுதியில் "சர்வ வியாபியாகிய பரமாத்மாவைக் கட்டை விரற் பிரமாணமுள்ளவனாகக் கூறுதல் பொருந்துமோ?" என்ற பூர்வ பக்ஷியின் வினாவிற்கு, "வேதாந்த சாஸ்திரோபதேசத்திற்குரியவர்கள் மனிதர்களா யிருத்தலால், அவர்களின் உபாசனைக்குச் சௌகரியமாக விருப்பதற்காக, அவர்களின் இருதய வளவை யனுசரித்து சர்வ வியாபியாகிய பரமாத்மாவிற்கு கட்டை விரற் பிரமாணம் உபசாரமாகக் கூறப்பட்டது" என விடை கூறப்பட்டது.

இவ்விடையினால் மற்றொரு சங்கை எழுகின்றது. அது யாதெனில்:—"பிரம்மோபதேசத்தைப் பெறும் உரிமை மனிதர்களுக்கே யன்றி அவர்களின் வேறாகிய தேவர் முதலாயினோர்க்கு இல்லையா?" என்பதாம். இச் சங்கைக்கு விடை யிறுக்கப்படுகின்றது.

சூ. 26. "ததுபர்யபி பாதராயணஸ் ஸம்பவாத்."

பதவுரை:—ததுபர்யபி=மனிதர்களைக் காட்டிலும் மேம்பட்டவர்களாகிய தேவர்களுக்கும், ஸம்பவாத்=மோக்ஷாபேக்ஷை யிருத்தலால் (அவர்களுக்கு வேதாந்த சாஸ்திராதிகாரம்) உண்டென்று, பாதராயண:=பாதராயணர் (மந்யதே=நினைக்கிறார்.)

கருத்து:—பிரம்ம ஞானத்தை யுண்டுபண்ணும் வேதாந்த சாஸ்திரங்களை ஓதுதற்கு மனிதர்களே முக்கிய அதிகாரிகள். ஆயினும், அந்த அதிகாரம் தேவர்களுக்கும் உண்டு என்பதே பாதராயண முனிவரின் அபிப்பிராயமாகும். ஏனெனில்:—அத்தேவர்களுக்கும் பிரம்ம வித்தியாதிகாரத்திற்குக் காரணங்களாகிய நித்தியா நித்திய விவேகம் முதலியவைகளுண்டு. தேவலோகங்களும் அதன் சம்பந்தமான போகங்களும், இந்த (மனித) உலகத்தையும் இதன் சம்பந்தமான போகங்களையும் போலவே அழியுந் தன்மையுடையவைகளாகவே யிருக்கின்றன. மனிதரினும் மிக்க அறிவுடையவர்களாகிய தேவர்கள் இந்த விஷயத்தை நன்கு அறிந்திருப்பார்களென்பதில் சிறிதும் ஐயமில்லை. இல்லையாகவே, அவர்களும் நித்திய நிரஞ்சன பிரம்மத்தை யடைய முயற்சி செய்வார்களென்பதிலும் யாருக்கும் எவ்வித சந்தேகமும் இருப்பதற்கிடமில்லை. எனவே, தேவர்களும் வேதாந்த சாஸ்திரத்திற்கு அதிகாரிகளென்பது நிச்சயமாகின்றது.

27-வது சூத்திரம் அவதாரிகை:—இதற்கு மேல், மற்றொரு ஆக்ஷேபம் செய்யப்படுகின்றது:—பிரம்ம வித்தையை யடைதற்குத் தகுதியான சரீரத்தையே தேவர்களும் பெற்றிருக்கின்றார்கள் என்பது மேலே கூறியதனால் தெரிகின்றது. அத்தகைய சரீரத்தை அவர்கள் பெற்றிருந்தால், ஒரே காலத்தில் பல்வேறிடங்களில் செய்யப்படும் யாகங்களுக்குச் சென்று அவர்கள் அவிசுகளைப் பெறவேண்டுமே. அது எப்படி சாத்தியமாகும்?" என்பதாம். இதற்கு இச்சூத்திரம் சமாதானம் கூறுகின்றது.

சூ. 27. "விரோதஃ கர்மணீதிசேந்நா நேகப்ரதிபத்தேர்சநாத்."

பதவுரை:—கர்மணீ=யாகாதி கர்மங்களில், விரோத:=விரோதம், இதி சேத்=சம்பவிக்கும் என்பாயானால், ந=அவ்வாறு சம்பவியாது. ஏனெனில் அநேகப்ரதிபத்தேஃ=பல சரீரங்களை யெடுக்கும் சாமர்த்தியம் அத்தேவர்களுக்கு இருத்தலாலும், தர்சநாத்=அவ்வாறே சுருதியும் கூறுதலாலும்.

கருத்து:—ஒரே சமயத்தில் அநேக சரீரங்களைத் தரிக்கும் வல்லமை தேவர்களுக்கு இருத்தலாலும், அவர்களுக்கு அவ்வித வல்லமை இருப்பதாகச் சுருதியும் கூறுதலாலும் மேலே பூர்வ பக்ஷிகள் கூறும் தோஷம் சம்பவியாது.

28-வது சூத்திரம் அவதாரிகை:—இதற்குமேல் வேறொரு ஆக்ஷேபம் காட்டப்படுகிறது. அதாவது:—

இந்திரன் முதலிய தேவர்களுக்கு சரீரம் உண்டு என்று சொல்லும் பக்ஷத்தில் சாவயவத்வ தோஷம் உண்டாகும். அதாவது தேவர்களுக்கு அவயவங்களுடையவர்கள் என்னும் தோஷம் உண்டாகும். அதனால் ('எது எது அவயவங்களுடையது அது அது நசிக்கும்' என்பது நியதியாதலின்) அவர்களுக்கு நாசம் கூறவேண்டி வரும். அன்றியும், அவர்களைக் குறித்துக் கூறும் சுருதிகளும் அநித்தியமானவை யென்றோ, அல்லது இந்திரனுடைய நாசத்திற்குப் பின்னர் அர்த்தமில்லாதவைகளாகு மென்றோ கூறவேண்டிவரும். ("தேவர்களும் இந்திரனும் வேதங்களிற் கூறப்பட்ட லக்ஷணங்கள் பொருந்தியவர்கள். அவர்கள் நசித்தபின் வேறு தேவர்களும் இந்திரனும் தோன்றுவார்களானால், அவர்கள் வேறு லக்ஷணங்கள் பெற்றிருப்பார்கள். அப்போது அந்த லக்ஷணத்தைக் காட்ட வேறு வேதங்கள்வேண்டும். இப்படியே மாறிக்கொண்டுபோவதால் வேதங்கள் அநித்தியமானவைகளாகும். அப்படி வேறு வேதம் வேண்டியதில்லை யென்றால், அந்த முதல் வேதத்தில் கூறப்பட்டுள்ள லக்ஷணங்கள் பின்னர் தோன்றும் தேவர்களுக்கும் இந்திரனுக்கும் இல்லாமற் போதலால் அந்த வேதங்கள் அர்த்தமில்லாதவைகளாகவாவது போகும்" என்பது பூர்வபக்ஷியின் வாதம்). அவ்வாறின்றி, அத்தேவர்களுக்கு ஞானத்தைப் பெறுதற்கேற்ற சரீரம் இல்லை என்று கூறிவிடும் பக்ஷத்தில் வேதங்களுக்கு இத்த தோஷங்கள் சம்பவியா."

இந்த வாதம் பின்வருமாறு கண்டிக்கப்படுகின்றது.

சூ. 28. "சப்த இதிசேந்நாதஃ ப்ரபவாத்ப்ரத்யக்ஷாநுமாநாப்யாம்."

பதவுரை:—சப்தே=வேதத்தில், இதிசேத்=தேவதைகளைக் குறித்துக் கூறும் வாக்கியங்களுக்கு அநித்தியத்துவ தோஷம் உண்டாகும் என்று

இயம்புவாயானால், அதஃ ப்ரபவாத்=இந்திரன் முதலியோர் அந்த வேதானுகுணமாகப் படைக்கப்பட்டவர்களாதலின், ந=அத்தகைய தோஷம் சம்பவியாது, மேலும்; ப்ரத்யக்ஷாநுமாநாப்யாம்=இந்த விஷயத்தில் சுருதி ஸ்மிருதி பிரமாணங்களும் இவ்வாறே இருத்தலாலும்.

கருத்து:—இந்திரன் முதலிய தேவர்கள் அநித்தியமானவர்கள் (அழிவடைகின்றவர்கள்) என்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு இந்திரனுடைய அதிகாரம் முடிந்து அவன் நசித்தவுடனே, பிரமன் வேறொரு புதிய இந்திரனைப் படைக்கிறான். அப்படி படைக்கிறபோது வேதங்களில் இந்திரனுக்கு எவ்வித லக்ஷணங்கள் கூறப்பட்டிருக்கின்றனவோ அந்த லக்ஷணங்களுக் கேற்றபடி (உருவம் குணம் தர்மம் சக்தி முதலியவைகளுள்ளவனாக) சிருஷ்டிக்கிறான். அப்படி சிருஷ்டிப்பதற்கு வேதமே பிரமனுக்கு உதவி செய்கிறது. இவ்வாறிருத்தலால் வேதத்திற்கு அநித்தியத்துவ தோஷமே சம்பவியாது. ஒரு பசு நசித்துவிட்டால், பசு என்னும் சொல்லாவது, பசுவின் தன்மையை விவரிக்கும் சொற்களாவது நசிக்கும் என்று சொல்ல முடியாதல்லவா?

29-வது சூத்திரம். அவதாரிகை:—வேதங்களுக்கு நித்தியத்துவம் நிரூபிக்கப்படுகின்றது.

சூ. 29. "அத எவச நித்யத்வம்."

பதவுரை:—அதஎவ=அதனாலேயே (நியதமான வடிவமுடைய ஜகத்து வேதத்தின்படி உண்டாவதாயிருத்தலால்), நித்யத்வம்=வேதங்களுக்கு நித்தியத்தன்மை (ப்ரத்யேதவ்யம்=தெரிந்து கொள்ளத்தக்கது.)

கருத்து:—வேதங்களிற் கூறப்பட்டுள்ளபடி படைக்கப்பட்ட வஸ்துக்கள் அநித்தியமாயினும் வேதங்கள் நித்தியமானவைகளேயாம். உலகத்தில் ஒரு வஸ்து தோன்றின பிறகே அதனை விளக்கும் வாக்கியங்களைக் கற்பிப்பது சகஜமாயிருக்கின்றது. ஆனால், வேதமோ, அவ்வாறு வஸ்துக்கள் தோன்றியதன் பின்பு எழுதப்பட்டதன்று. அதற்கு முன்பேயிருந்து வஸ்துக்களை யுண்டாக்குவதற்கு சகாயமாயிருக்கின்றது.

வேதாந்த மதத்தில் வேதங்கள் நித்தியம். வஸ்துக்கள் அநித்தியமாயினும் அவற்றின் வடிவங்கள் நித்தியம். வேதங்களின் சப்தங்களுக்கும் வஸ்துக்களின் வடிவங்களுக்கும் உள்ள சம்பந்தமும் நித்தியமே. வேத சப்தங்களால் (வாக்கியங்களால்) முந்திய யுகத்தில் வஸ்துக்களுக்கிருந்த வடிவங்கள் பிரமனது புத்திக்குத் தோன்றும். அதனால், பிரமன், அவற்றை யனுசரித்து பிந்திய சிருஷ்டியில் வடிவங்களைப் படைக்கிறான். இவ்வாறுதலால், வடிவங்களின் அநித்தியத்தன்மை, வேத சப்தங்கள் நித்தியம் என்னும் வாதத்தைப் பாதிக்காது. வேதங்கள் ரிஷிகளால் நூதனமாக உண்டாக்கப்பட்டவையல்ல. பூர்வ யுகத்தில் இருந்தவைகளே அவர்களால் வெளிப்படுத்தப்படுகின்றன.

30-வது சூத்திரம். அவதாரிகை:—ஒரு பிரமாண்டத்திற்கும் அதற்குக் கர்த்தாவாகிய பிரமாவுக்கும் நேரிடும் பிரளயம் அவாந்தர பிரளயம் எனப்படும். எல்லாப் பிரமாண்டங்களுக்கும் அவற்றின் கர்த்தாக்களாகிய பிரமாக்களுக்கும் நேரிடும் பிரளயம் மகாப் பிரளயம் எனப்படும். இந்தப் பிரளயம்

அவ்வியக்தம் (இது பின்பு விவரிக்கப்படும். ஆண்டுக் காண்க) வரைக்கும் வியாபித்து மகாசுழுப்தி என்னும் பெயரால் அழைக்கப்படும்.

வேதங்கள் நித்தியம் என்பதற்கு இதுவரையில் காட்டப்பட்ட யுக்திகள் அவாந்தர பிரளயங்களுக்கு ஒருவேளை பொருந்தினாலும், மகா பிரளயத்தில் அவ்வாறு அவை பொருந்தா. ஏனெனில், மகா பிரளயத்தில் சகல சராசரங்களும் நாசமடைந்து விடுவதால் எந்த உருவமும் இருப்பதில்லை. ஆதலால், அவ்வுருவங்களுக்கும் வேத வாக்கியங்களுக்கும் உள்ள சம்பந்தமும் நசித்துப் போவதோடு அந்த வாக்கியங்கள் அர்த்தமில்லாதவைகளாகவும் ஆய் விடுகின்றன. ஆகையால், வேறு புதிய சிருஷ்டி செய்வதில் அந்த வேதங்கள் பிரமாவுக்கு உதவி செய்வதில்லை. எனவே, வேதங்களுக்கு அநித்தியத் தன்மை சித்திக்கின்றது. மேலும், வேதங்கள் அவ்வியாகிருத ரூபமாய் சப்தமயமாக இருத்தலால் அவை, மகா பிரளயத்தில் எவ்வாறிருக்கும் என்று சொல்லுதல் கூடும்?

இவ்வாறு வந்த பூர்வபக்ஷம் கண்டிக்கப்படுகின்றது.

சூ. 30. "ஸமாந நாம ரூபத்வாச்சா வ்ருத்தாவப்ய விரோதோ தர்சநாத் மஸ்ருதேச்ச."

பதவுரை:—ஆவ்ருத்தாவபி=மகா பிரளயம் வந்தாலும், ஸமாந நாமரூபத்வாத்=அந்த பிரளயத்திற்கு முன்பு வஸ்துக்களுக்கு எந்த நாமமும் ரூபமும் இருந்தனவோ அந்த நாமரூபங்களே புதிய சிருஷ்டியிலும் வஸ்துக்களுக்கு உண்டாவதாலும், தர்சநாத்=அப்படியே வேதம் கூறுவதாலும், ஸ்ம்ருதேச்ச=ஸ்மிருதியும் சொல்லுதலாலும், அவிரோத:=வேதத்திற்கு நித்தியத் தன்மையில் விரோதமில்லை.

கருத்து:—மகா பிரளயகாலத்தில் எந்த வஸ்து நாசமடையாமல் மிஞ்சுகிறதோ, அவ்வியக்தம் என்னும் பெயரால் அழைக்கப்படும் அந்த வஸ்துவே சகுணப் பிரம்மம். அதன் நிசுவாசங்களே வேதங்கள். அந்த வேதங்களின் சகாயத்தால், புதிய பிரம்மா, முந்திய கற்பத்தில், எல்லாம் எந்த நாமரூபங்களோடு இருந்தனவோ, அந்த நாமரூபங்களுடனே புதிய சிருஷ்டியைச் செய்கின்றான் ஆகலின், மகா பிரளய காலத்திலும் வேதங்கள் நசிப்பதில்லை. அந்தக் காலத்தில், வேத வாக்கியங்களும், அவற்றின் அர்த்தங்களும், அவற்றின் சம்பந்தமும் வாசனைமாத்திரமாகச் சேர்ந்திருக்கும். வேதங்களை வாசனைரூபமாகத் தரித்திருப்பதாக சுருதியில் கூறப்பட்டுள்ள கோபூதம் அவ்வியக்தம் என்னும் பெயரையுடைய சகுண பிரம்மமே. அதுவே ஈசுவரன் எனப்படும். இந்த ஈசுவரன் மாயா பிரதிபிம்பன். ஆகலின், மூக்தர்களுக்கு இல்லாதவனே யாகிறான். வேதங்களும் அவனைப் போன்றனவேயாகும்.

(அத்வைத மதத்தில் ஆறு வஸ்துக்கள் அநாதி யென்று கூறப்படுகின்றன. அவை (ஜீவேசோ விசுத்தாசித்ததாஜீவேசயோர்பிதா 'அவித்யாதச்சிதோர் யோகஷ் ஷடஸ்மாக மநாயே:.) ஜீவன், ஈசுவரன், அசித்து, ஜீவ

[...]ன்ள சம்பந்தம் என்பனவாம். இந்த ஆறு பதார்த்தங்களும் அவித்யா[...]ல்லையிலே மாத்திரம் அநாதியாகவும் நித்தியமாகவும் இருப்பதாகக் [...]ாணப்படும். ஞான முண்டான பிறகு சித்த சித்பதார்த்தத்தைத் தவிர, [...]ற்ற ஐந்து பதார்த்தங்களும் மித்யா பூதங்களாய் அசத்தியமாகும்).

31-வது சூத்திரம். அவதாரிகை:—"அஸௌவா ஆதித்யோ தேவமது" * * "தத்யத் ப்ரதம மம்ருதம் தத்வஸவ உபஜீவந்தி" * * * "ஸய ஏத[...]தவ மம்ருத வேதவஸூ நாமேவைகோ பூத்வா" * * * ஏததேவ ரூபமபி[...]ம் விசதி." (இந்த சூரியனே தேவர்களின் தேன்; அதாவது போக்கியப் [...]பொருள். அதில் முதல் பாகத்தை யாசிரயித்து வசுக்கள் ஜீவிக்கிறார்கள். [...]வன் இந்த விஷயத்தைத் தெரிந்து கொள்ளுகிறானோ அவன் வசுக்களில் [...]ருவனாகி வசுரூபத்தையே யடைகிறான்). சாந்தோக்கியத்திலுள்ள இந்த [...]ாக்கியத்தில் உபதேசிக்கப் பட்டதற்கு மதுவித்தை என்று பெயர். உபாச[...]ன் வசுரூபத்தை யடைந்து பிறகு பிரம்மைக்கியத்தை யடைகிறான் என்று [...]ந்த வித்தையில் உபதேசிக்கப் பட்டிருத்தலால், "வசுவாதி தேவர்கள் மது[...]வித்தைக்கு அதிகாரிகளாகா ரென்றும், ஆகையால், பிரம்ம வித்யாதிகாரி[...]களுமாக மாட்டார்கள்" என்றும் பூர்வபக்ஷிகள் வாதிக்கின்றனர். அவர்கள் [...]வாதத்தைப் பின்வரும் இரண்டு சூத்திரங்கள் நிரூபிக்கின்றன.

பூர்வபக்ஷ சூத்திரம்.

சூ. 31. "மத்வாதிஷ்வ ஸம்பவாத நதிகாரம் ஜைமினி:"

பதவுரை:—மத்வாதிஷு=மதுவித்தை முதலாகிய உபாசனைகளில், அஸம்பவாத்=வசுவாதி தேவர்களுக்கு உபாசனா யோக்யதை சம்பவியாது. ஆகையால், அநதிகாரம்=பிரம்மவித்யாதிகாரம் இல்லை என்று, ஜைமினி:=ஜைமினிமுனி, (மந்யதே=கருதுகின்றார்.)

கருத்து:—இந்த மது வித்தையானது பிரம்ம வித்தைக்கு ஓர் அங்கமாயிருப்பதாலும், இதில் உபாசனைக்கு வசுவாதிகள் மார்க்கமாகச் சொல்லப்படுதலாலும், வசு ஆதித்யர் உருத்திரர் மருத்து முதலியோர் பிரம்மவித்தைக்கு அதிகாரிகளாக இருக்கமாட்டார்கள் என்று ஜைமினிமுனி கருதுகின்றார்.

32-வது சூத்திரம் அவதாரிகை:—தேவர் முதலியோர்க்கு பிரம்மவித்தையில் அதிகாரமில்லை யென்பது நிரூபிக்கப்படுகின்றது.

இதுவும் பூர்வபக்ஷ வாதத்தைக் காட்டும் சூத்திரம்.

சூ. 32. "ஜ்யோதிஷி பாவாச்ச"

பதவுரை:—ஜ்யோதிஷி=ப்ராக்ருத (பிரகிருதி சம்பந்தமான) ஜோதிப் பொருளினிடத்தில், பாவாத்=சூரியன் சந்திரன் சுக்கிரன் அங்காரகன் முதலிய பதங்களுக்குப் பிரயோகமிருத்தலால் (தேவதைகளுக்கு பிரம்மவித்தையில் அதிகாரமில்லை.)

கருத்து:—ஜ்யோதி என்னும் பதத்தின் வேறு பெயராகிய தேவதை என்னும் பதம் சூரியன் சந்திரன் அங்காரகன் என்னும் கிரகங்களையும் கூட

குறிக்கும். அவை ஜடமாகிய ஒளி வடிவமான மண்டலங்களா யிருத்தலாலும், பெருஞ் செல்வமுடைமை கர்மங்களைச் செய்யும் வல்லமை முதலியவைகளுக்கேற்ற சரீரங்கள் அவைகளுக்கு (ஜடமாய் ஒளி மண்டல வடிவமாயுள்ள சூரியன் சந்திரன் முதலானவர்களுக்கு (இல்லாமல் இருத்தலாலும், பிரம்ம வித்தியாதிகாரம் அவைகளுக்கு உண்டு என்பது பொருந்தாது.

33-வது சூத்திரம் அவதாரிகை:—விசுவாதிகளுக்குப் பிரம்ம வித்யாதிகாரம் உண்டு என்று ஸ்தாபிக்கப்படுகின்றது.

சித்தாந்த சூத்திரம்.

சூ. 33 "பாவந்து பாதராயணோஸ்தி."

பதவுரை:—அஸ்தி=தேவர்களுக்கு பிரம்மவித்யாதிகார யோக்யதை இருக்கின்றது, ஹி=அந்தக்காரணத்தால், பாவம்=அவர்களுக்கு பிரம்மாதிகார சத்பாவமும், பாதராயண:=பாதராயண ரிஷி, மந்யதே=கருதுகின்றார், து=ஆகையால், பூர்வபக்ஷம் அயுக்தம்.

கருத்து:—தேவர்கள் சரீர முடையவர்களா யிருத்தலால் அவர்களுக்குப் பிரம்ம வித்தையை யடைதற்குரிய யோக்கியதை உண்டென்று முன்னமே கூறப்பட்டது. மது வித்தையில் அவர்களுக்கு அதிகாரமில்லாவிட்டாலும், அதற்கு சமானமான பலனைத் தரும் தஹர வித்தை முதலிய வித்தைகளிலும் நிர்க்குண பிரம்மோபாசனையிலும் அவர்களுக்கு அதிகாரம் உண்டு என்பதில் பாதகமில்லை.

"தத்யோயோ தேவாநாம் ப்ரத்யபுத்ய தாஸ ஏவதத பவத்தத ருஷீணாம் ததா மநுஷ்யாணாம்" என்னும் சுருதியினால், தேவரிஷி மனுஷர்களில் எவன் பிரம்மத்தைத் தெரிந்து கொள்ளுகின்றானோ அவன் பிரம்மமே யாகின்றான்" என்று உபதேசிக்கப்பட்டிருத்தலுங் காண்க.

சூரியன் முதலிய சொற்கள் அந்த அந்த மண்டலங்களின் அதிதேவதைகளைக் குறிப்பனவேயன்றி, ப்ரகிருதி மண்டலங்களை குறிப்பனவல்ல, ஆகையால், இந்த அதிதேவதைகளுக்கு பிரம்ம வித்தையை யடைவதற்கு அவசியமாகவுள்ள எல்லா அதிகாரங்களும் உண்டு.

வைகறைத் துயிலெழு.

(மைவாடி: ந. சிவராம கிருஷ்ணன். B. A.)

இன்று என் ஊக்கம் ஊனுடன் போராடி நிற்கின்றது. பனிக்காலம் தீர்ந்து விட்டது. மாங்கள் பழுப்பு நிறமடைந்து காலையில் என்னைக் கூவி அழைக்கின்றன. ஆனால் நான் இணங்குவதில்லை. ஆத்மார்த்தமாய் நான் வைகறைத் துயில் எழுபவன்தான். விடியற்காலை புற்றரையின் மேலுள்ள பனித்துளிகளையும் பறவைகளின் இனிய கீதங்களையும் மற்றுமுள்ள காலைக் காக்ஷிகளையும் காண எனக்கு அதிக ப்ரேமையுண்டென்பதில் ஆக்ஷேபணையே கிடையாது. சில சந்தர்ப்பங்களில் சூரியன் உதிப்பதற்கு முன்னமேயே எழுந்து உலாவப்போய் ஒரு மேட்டின் மேலாவது அல்லது ஒருசிறு குன்றின் உச்சியிலாவது நின்று கதிரவன் உதயமாவதைக் காணநேர்ந்தபோது என்று மில்லாத ஆனந்தம் உண்டாவதை உணர்ந்திருக்கிறேன். ஒருநாள் காலை சூரியன் உதயமாகும் பொலிவைக்காண ஒரு குன்றின்மேலேறியது எனக்கு நன்றாக நினைப்பி லிருக்கிறது. அப்பொழுது காரிருள், கருமை கலந்த வெண்மையாக மாறுவதைக் கண்டேனாயினும் கதிரவன் கிரணங்கள் கிழக்கே கவிந்திருந்த மேகங்களிடையே ஊடுருவி வரும் விந்தையைக் காண முடியவில்லை. அவதிப்பட்டுக் குன்றேறியது அவலமானதே யென்று ஏங்கி மேற்குத் திசையை நோக்கித் திரும்பும் பொழுது என் கண்களை நம்பமுடியாதவாறு ஒரு விநோதமான ப்ரகாஸம் போன்று சூரிய உதயத்தைக் கண்டேன். கிழக்குப் பாரிசத்தில் காணப்படாத ஒரு ஒளித்திரள் மேகங்களைப் பிளந்து கொண்டு மேற்குத்திசையில் தாக்கி மலைகளையும் அதன் சிகரங்களையும் உருக்கி வார்த்த பொன் மயமாகச் செய்தது. அப்பொழுது க்ளப் (Clough) என்னும் பெரியாரின் பாடல் ஒன்று நினைவிற்கு வந்தது.

"And not through eastern windows only,
When morning comes, comes in the light,
In front, the dawn breaks slow, how slowly,
But westward, look the land is bright"

(அதிகாலையில் கிழக்கிலிருந்து மாத்திரம் பிரகாசம் உண்டாவதில்லை. ஏனெனில் சூரிய உதயம் மிக நிதானமாக உண்டாகின்றது. ஆனால் அந்த சமயம் மேற்கு திசையை நோக்குங்கள். பூமி என்ன பிரகாசமாய்த் தோன்றுகிறது) இது போன்றே அதிகாலையில் காணப்படும் தோற்றங்கள் மனோரம்மியத்தையே கொடுக்கின்றன என்பதில் சந்தேகமில்லை.

2. நான் உண்மையில் காலைப்பொழுதில் மிகுந்த பிரிய முள்ளவனாயினும் இயல்பில் ஒரு சோம்பேறி. ஒரு சிலர் வைகறையிற் றுயிலெழும் வழக்

தைப் பெற்றுவர் திருக்கிறார்கள். நானோ அந்த நேரத்தில் படுக்கையில் படுத்திருக்கும் மேதாவி. இராத்திரி காலங்களில் எவ்வளவு காலம் வரை விழித்திருந்து படிப்பவர்களுடன் வேண்டுமானாலும் போட்டி யிடுவேன். ஆனால் ராத்திரி சாதாரணமாக பத்துமணிக் குள்ளாகவே கொட்டாவிகளும் பெருமூச்சுகளும் விட்டுக் கொண்டு பேசும்படியான விஷயங்களில் அசிரத்தையுடன் படுக்கையும் தூக்கமும் உருவாக ஜெபிக்கிறவர்களை எனக்குப் பிடிப்பதில்லை. அதனால் அதிகாலையி லெழுந்திருத்தல் என்னும் உபத்திரவத்தில் நான் தலைசிறந்தவனல்லவே யல்ல. இராக் காலங்களில் நீண்ட நேரம் எனக்குரிய வேலைகளைக் கவனித்து விட்டு படுக்கைக்குச் சென்று காலையில் என் சிற்றுண்டி தினசரிப் பத்திரிகை இவற்றின் முகத்தில் விழிக்கும் பாக்யத்தையே என் கடமையாக கருணையங் கடவுள் விதித்திருக்கிறார்.

3. எழுந்திருந்தாலும், இவ்வளவு சீக்கிரத்தில் எழுந்திருக்கும்படியாக ஆண்டவன் விதிக்கவில்லை யென்றும், அவர் நிபந்தனையின்படி இன்னும் சிறிது நேரம் படுக்கையி லிருந்துகொண்டே, என் படுக்கை அறைக்கும் கீழ், வீட்டில் உண்டாகும் சிறு சப்தங்களையும், வீதிகளில் காலைப்பொழுதில் களிப்புடன் பாடப்படும் பாட்டுக்களையும், சுவற்றி லொட்டப்பட்டிருக்கும் வர்ணக் காகிதங்களின் தினுசுகளையும், வேலைப்பாடுகளையும் புதிதாக மனதில் பதிய வைத்துக் கொண்டும், படித்துக் கொள்ளுவது என்ற விஷயத்தைப்பற்றி யுள்ள பூர்ணமான புள்ளி விவரங்கள் தீவிரமான சிந்தையுடன் தீர்க்காலோசனை செய்வது என்பனவற்றில் என் மனத்தின்கண் ஏற்படும் சந்தோஷத்தையும், திருப்தியையும் எடுத்தியம்ப வெறும் சொற்களுக்குத் திறமையில்லை.

4. அதிகாலை பிரயாணமாக வேண்டி, மோட்டார்பஸ், அல்லது புகை வண்டி, முதலானவற்றைக் கருதுவோர் என்னுடைய அதிர்ஷ்டத்தைக் கேட்ட மாத்திரத்தில் என் மேல் அழுக்கா றடைவார்கள். ஏனென்றால் முழு மக்கள் அடங்கிய இழிவான குடும்பங்கள் அநேகம், அவற்றுள் கியாதிபெற்ற சிலரும் அடக்கம். அதில் துறவிகளும் ஞானிகளு மிருக்கிறார்கள். உலக நீதி புகட்டுவதில் நிகரிலா நிபுணராய் விளங்கிய டாக்டர் அர்னால்டும் (Dr. Arnold) ஒருவராவார். "City of Dreadful Night" என்பதன் ஆசிரியரான தாம்ஸன் (Thomson) மற்றொருவர். ஸெல்வின் ஞானியார் (Bishop Selwyn) என்பவர் படுக்கையில் படுத்திருப்பது என்னும் கடமையை உலக நீதிக்குச் சமமாக மதித்தார். அவர் கூறியதாவது:—"ஒரு நாள் அதிசீக்கிரம் எழுந்திருந்தேன். அதனால் அன்று காலை முழுவதும் வீணானது மன்றி பிற்பகல் முழுதும் தூக்க மயக்கமாகவே யிருந்தபற்றி இனி அவ்வாறு வைகறைத் துயிலெழுவதில்லை என்று உறுதி செய்து விட்டேன்." அவர் தம் அகந்தையை அறவே நீக்கி பணிவை கைக்கொள்ள அதிகநேரம் படுக்கையிலேயே இருந்தார். பணிவு என்பது ஏசுவைத் தொழும் ஒவ்வொருவருக்கும் அடிப்படையான கொள்கையல்லவா? அதிகாலையில் துயில் எழுவோர்களை ஸ்வதர்ம பார்களாகவே எண்ணுகிறேன். அவர்கள் நம்மை சோம்பேறிகள் என்று எண்ணாமலிருக்க முடியாது தான் என்பது நமக்கும்—தெரிந்த விஷயம். ஆனால் பணிவு என்பது நமது தர்மம். படுக்கையில் அதிகநேரம் உறங்குவதில் நாம் கர்வம் கொள்ளுவதில்லை, அவமானப் படுகிறோம். ஆனால் சந்தோஷத்துடன் இருக்கிறோம். நம்மில் முழுச் சோம்பேறியாகிய டாக்டர்—ஜான்ஸன் (Dr. Johnson) என்பவர் நம் பக்ஷம் சொல்லுவதாவது:—"என் வாழ்நாட்கள் பூராவும் நண்பகல் வரை துயின்று வந்தேனானாலும் யதார்த்தமாய் நான் எல்லா இளைஞர்களுக்கும் எவனொருவன் அதிகாலையில் நித்திரைவிட்டு எழுந்திரானோ அவனால் யாதொரு நன்மையும் விளையப் போவதில்லை. என்று நீதி புகட்டுவேன்."

5, நாம் நேரங்கழித்து எழுவதன் பயனை நாமே அடைகின்றோம். நாம் எழுந்திருப்பதற்கு முன்னதாகவே காலையில் வாங்க—வேண்டிய பொருள்கள் யாவும் விற்றுத் தீர்ந்துபோய் கடையில் கடையாக உள்ளவையே நமக்குக் கிட்டுகின்றன. அனுபவத்தில் இதற்குத்தகுந்த சமாதானம் சொல்ல முடியாது. சீக்கிரம் துயில் நீங்குவது என்பது வெற்றிக்குரிய மர்மஸ்தானம் என்பது இதனால் தெரிகின்றது. நியூகேஸல் பிரபு (Duke of New Castle) இயற்கையில் தாமதமாய் எழுபவராயினும் அன்று மட்டும் அரைமணிநேரம் தாமதமாய் விட்டதென்றும் அதைச் சரிசெய்ய ஒருநாள் முழுவதும் முயற்சி செய்வார் என்றும் சொல்லப்படுகிறது. அதனாலேயே ராஜரீக விஷயங்களில் அவர் சூனியமாக இருந்தார் என்று சரித்திரம் தெரிவிக்கின்றது. நெல்ஸன் (Nelson) என்பவருடைய வெற்றிக்குக் காரணம் யாதாயிருக்கு மென்று அவரை ஒருவர் வினவ "நான் மற்றவனைவிட அரைமணி நேரம் முன்பாக எழுந்திருந்து விடுகிறேன்" என்று பதில் சொன்னாராம். பாக் தீவுகளின் (Falk Islands) யுத்த சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் ஒரு தேர்ந்த யுத்த தளகர்த்தன் தூண்டுதலால் சீக்கிரம் எழுந்து புறப்பாடான தாலேயே போற்றத்தக்க வெற்றி ஆங்கிலேயருக்குக் கிடைத்தது என்பது போதரும்.

6. ஒருவன் மேலும் பாதசாரியாகவாவது அல்லது துவிச்சக்கர வண்டியிலாவது நீண்டதூரம் பிரயாணம் செய்திருந்தால் அவனுக்கு அதிகாலையில் எழுந்திருப்பது மிகவும் அவசியம் என்று தெரியும். முன்னதாக ஆரம்பம் செய்த எந்தக் காலத்திலும் நாம் வெற்றிமாலை சூடுகிறோம். அதிகாலையில் புறப்பட்டால் மெதுவாக வழிநடந்து, வழியிலுள்ள அருவியில் குளித்து, பாறையின் நிழலில் வெய்யிலுக்குத் தங்கி பள்ளத்தாக்கிலுள்ள விடுதிக்குச் சாயங்கால போஜனத்திற்கு நம்மை ஆவலுடன் எதிர்நோக்கும் நண்பர்களும் நாமும் ஒருங்கு சேர்ந்து சந்தோஷிக்க ஏதுவாகும். ஆனால் தாமதமாய்ப் புறப்பட்டாலே மணிக் கணக்கிற்கு நாம் அடிமைப்பட்டு கால்கள் கடுகிடக்க, நமக்கு ஸ்நானம் செய்யவேண்டு மென்பது மிக்க அவசியமாய்த் தோன்றியிருந்தும், அருவியைக் கண்டும் குளிக்க நேரமில்லாமல், குடல் தெறிக்க ஓடி நாம் எவ்விடம் செல்லவேண்டி யிருக்கிறதோ அவ்விட முன்னவர்கள் நம்மை எதிர்பார்த்து ஏங்கி உண்டியருந்தி களியாட்டத்தி லிருக்கும் பொழுது மனச்சோர்வு, உடற்சோர்வுடன் அந்த இடத்தை அடைவோம்.

7. நம் சார்பாக காரியார்த்த மாகவாவது, உலகஞானம் என்பதைச் சுட்டியாவது யாதொரு ஆதாரவும் காண முடியாது. நம் கக்ஷிக்காக, பூட் (Foote) என்பவர் சாராயத்தைக் குறித்துச் சொன்னது போன்ற சமாதானம் ஒன்றேயாகும். ஒருநாள் அவர் சாராயம் விற்கும் கடைக்குச் சென்றிருந்த போது ஒருவன் முதன் முதலாக, தான் உஷ்ணத்தினால் கோதிப்படைந் திருப்பதினால் அதை தணிவு செய்ய கொஞ்சம் சாராயம் கொண்டு வரும்படி கட்

டளைவிட்டான். பின்னர் சிறிது நேரம் சென்றபின் தனக்குக் குளிரா யிருப்பதினால் அதை நீக்கி உஷ்ணம் உண்டாக்க மறுபடியும் சிறிது சாராயத்திற்கு உத்தரவிட்டான். அப்பொழுது பூட் என்பவர் தனக்குச் சூடும் இல்லை குளிரும் இல்லை. ஆனால் சாராயத்தின்மேல் அதிக விருப்பம். ஆகையினால் தனக்கும் சிறிது சாராயம் கொண்டுவரச் சொன்னாராம். நாமும் அவரைப் போன்று நேர்முகமான காரணம் சொல்லுவதே உசிதமானது. நாம் படுக்கையில் அதிகநேரம் படுத்துறங்குவ தென்பது நமக்கு அதன்பாலுள்ள விருப்பத்தினால் தான், அந்தக் காரணம்தான் பொருந்தும். அது தவிர்ந்த ஏனைய காரணங்கள் சரியல்ல. நாம் பிரியப்படுகிறோம். அதனால் நமக்கு யாதொரு ஒழுக்கமும் வர வேண்டாம். ஒருவருடைய தயவு தாக்ஷண்யம் ஒன்றும் வேண்டாம். ஆனால் ஒன்று உண்டு. அந்த ஸாஹஸக் காரர்களின் வசவுகளை மட்டும் சுமக்கத் தயாரா யிருக்கவேண்டும்.

8. என் விஷயத்தில் ஒரு உரிமை யிருக்கின்றது! நான் ஒரு கடமையை உடையவன். அந்தக் கடமையானது நான் முன்னமேயே குறிப்பிட்டிருந்தபடி பொழுது நன்றாகப் புலர்ந்து காலைப்பொழுது நன்றாகக் கழியும் வரை படுக்கையிலேயே இருப்பதென்பது, இது எனக்குக் கடவுள் இட்ட கட்டளையாம். ஏனெனில் ராத்திரிகளில் அதிகநேரம் விழிப்புடனிருந்து நான் படுக்கைக்குப் போகும்போது ஜாமத்தில் கூவும் கோழி முதலான பக்ஷிகளை நான் சந்திப்பது ஸஹஜம். ஆகையினால் காலை நேரத்தில் என் ஸயனத்தில் இருந்து கொண்டே, கூரையைப் பார்த்துக் கொண்டாவது, பல வியாபாரங்களி லீடுபட்ட ஜனங்களின் சப்தங்களைக் கேட்டுக் கொண்டாவது, மனச்சாக்ஷிக்கு விரோத மில்லாதிருப்பேன். நீங்கள் குறிப்பாய் கவனித்தும் கேட்டும் இருந்திருப்பீர்களானால் நான் என் தலையணையை ஒருமுறை குலுக்கிவிட்டு கூட்டாள்கள் (என்னைத் தவிர) அதிகாலையில் எழுந்திராததினால் சாதாரணமான மக்களிடமிருந்து பெரும் பகைமையும் அக் கூட்டத்தினனாகிய நான் மட்டும் என் உரிமை, கடவுள் எனக்கிட்ட கட்டளை இவற்றின் காரணமாக சுதந்தரத்தை அனுபவிக்க உள்ளவன் என்ற மகிழ்ச்சியுடன் என் முகத்தில் புன்னகை தவழ்வதைக் கட்டாயம் காணுவீர்கள்.

9. என்ன ஆனந்தம்.

குறிப்பு:—ஆங்கிலத்திலுள்ள On Early Rising என்ற வியாஸத்தைப் பெரும்பாலும் தழுவி மொழி பெயர்க்கப்பட்டது.

பாரதி சித்திரம்

—(0)—

"கண்ணன்—எனது சற்குரு."

(ஆரியூர்-வ. பதுமநாப பிள்ளை.)

பாமரவலிக சிகாமணியாகிய கவியரசர் பாரதியார், உயிர்க்கு உறுதி பயக்கக்கூடிய ஒப்புயர்வற்ற தனிப்பெரும் உண்மையைக் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் நமது நாட்டிலுள்ள சாத்திரங்கள் பலவற்றையும் ஆராய்ச்சி செய்யலானார். நீண்டகாலம் அவற்றை நன்கு ஆராய்ந்து பார்த்தும் மேன்மேலும் பலவகைப்பட்ட சந்தேகங்கள் ஒன்றன்பின்னொன்றாக உண்டாயினவே யன்றி, உறுதியான உண்மைப் பொருளை அவற்றில் கண்டு நிச்சயிப்பது அரிதாய் முடியவே, அவருக்கு சாத்திர ஆராய்ச்சியில் சலிப்பு ஏற்படலாயிற்று. எந்த புராணத்தை எடுத்தாலும்—எந்த சாத்திரத்தை எடுத்தாலும்—எதிலும் பலவகைப்பட்ட பழங் காலத்துக் கதைகளே பெரும்பான்மையனவாக மலிந்து கிடந்தன. உயிர்க்கு உறுதி பயக்கக்கூடிய உத்தம சத்திய நெறியை எளிதில் உணர்த்தாத சாத்திரங்களை யெல்லாம் அவர் வெறும் பொய்மைக் கூடைகளாகவே கருதலானார். அவற்றைச் சோதிக்கச் சோதிக்க சிந்தை பெரிதும் குழம்பியதோடு, உண்மையைக் கண்டுபிடிப்பது சாத்தியமோ எனும் ஐயங்கூட அவருக்குத் தோன்றியதாம். எனினும், எவ்விதமேனும் முயன்று உலக மாயங்களை உள்ளபடி உணர்ந்துகொள்ள வேண்டுமென்னும் ஆர்வம் மட்டும் அவரது நெஞ்சில் நிலைத்து நின்றதாம். எனவே, அவர் தமது காலத்தை சத்தியத்தைத் தேடுவதிலேயே கழிக்கத் தீர்மானிக்கலானார். அப்போது, அவரது மன உறுதியைச் சோதிக்கக் கருதிய ஆண்டவன், அவருக்குப் பலவகைப்பட்ட இடையூறுகளை விளைவித்தான். எனினும், அவற்றால் நெஞ்ச உறுதியில் கொஞ்சமும் தளராது அஞ்சாது நின்ற பாரதியார், ஒருநாள் தமது மனக் கண்ணால் கண்டு களித்த காட்சியைப் பின்வருமாறு வர்ணிக்கலானார். அவரது கற்பனைக் கவிக் கண்களுக்குத் தோன்றிய அற்புதக் காட்சியை, அவர் வரைந்து வைத்துள்ள அற்புதச் சொற்சித்திரத்தைக் கொண்டு இப்பொழுது நாமும் கண்டு களிக்கக் கடவோம்.

"இயற்கையழகில் ஒப்புயர்வற்று விளங்கும் குளிர்ந்த சோலைகளைத் தனது இரு கரைகளிலும் கொண்டுள்ள யமுனையாறு, வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. அதன் வலக்கரையிலே, ஒரு கிழவனார் தளர்ந்த நடையுடையவராய்க் கையிலுள்ள தடியைத் தரையில் ஊன்றி ஊன்றி வைத்து மெல்ல மெல்லத் தள்ளாடித் தள்ளாடி நடந்துகொண்டிருக்கிறார். எனினும், அவரது தோற்றம் வெறுப்பூட்டுவதாக இல்லாமல் கருத்தைக் கவரக்கூடியதாக

இருக்கிறது. அவரது முகத்திலோ, அறிவுப் பெருஞ்சுடர் ஒளி வீசிக்கொண்டிருக்கிறது; கண்களிலோ, மனோகரமான — வியக்கத்தக்க—தெளிவு குடிகொண்டிருக்கிறது; அவரது தலையிலுள்ள சடைகள், அவர் மெய்ஞ்ஞானத்திற் சிறந்த முனிவர்களுள் ஒருவரென்பதை உணர்த்துவனபோல் விளங்குகின்றன; அவரது நீண்டு தொங்கும் வெள்ளைத் தாடி, எதிர்ப்பட்டோர் எவரையும் எளிதில் வணங்கச் செய்விக்கக்கூடிய மகத்தான சக்தி பொருந்தியதாகத் தோன்றுகிறது.

அத்தகைய பெரியாரைக் கண்டு பெரிதும் மகிழும் நமது பாரதியார், அவரோடு என்னென்னவோ விஷயங்களைக் குறித்து உரையாடிக்கொண்டிருக்கிறார். சிறிது நேரஞ் சென்ற பின், அப்பெரியவர் மகிழ்ச்சி பொங்கித் ததும்பும் முகத்துடன் கூடியவராய் பாரதியாரை நோக்கிப் பின்வருமாறு கூறுகிறார்:—

“தம்பி! உன் உள்ளத்திலுள்ள ஆசைப் பெருக்கு இன்னதென்பதை நான் நன்கு உணர்ந்துகொண்டேன். உன் மனத்திற்கு உண்மையை எளிதில் இனிது உணர்த்தக்கூடியவன் ஒருவன் இருக்கிறான். மெய்ஞ்ஞானச் சுடரொளியைக் கண்டு களித்தவன் அவன்; ‘நித்திய மோன’த்தில் இருக்கும் யோகிகள் நாயகனாகிய அவன், இப்பொழுதும் துன்பக் கலப்பற்ற பேரின்பத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறான். ஓட்டில் ஒட்டாத புளியம் பழத்தைப்போலும்—தாமரையிலையில் ஒட்டாத தண்ணீர்த் துளிபோலும்—இம் மாய உலகில் ஒட்டியும் ஒட்டாமல் வாழ்வது எப்படி என்பதை எல்லோருக்கும் உணர்த்துவதற்காக உயர்ந்த வேந்தர் குலத்தில் தோன்றிய அவன், இப்பொழுது ‘வடமதுரை’ என்னும் திருநகரில் சிங்காசனத்தில் வீற்றிருந்து செங்கோல் செலுத்திக்கொண்டிருக்கின்றான். அத்தகைய ஞானவேந்தன் திருநாமம் ‘கண்ணன்’ என்பது. அவனிடம் சென்று உன் குறை இரந்து நின்றால், அவன் உன்னிடம் அருள் மிகுந்து நீ காண ஆவல் கொண்டு நிற்கும் சத்தியத்தை உனக்கு நன்கு உணர்த்தியருள்வான்.”

அடடா! என்ன ஆச்சரியம்! அறிவிலும் வயதிலும் முதிர்ந்த அப்பெரியவரும் நமது பாரதியாரும் யமுனையாறும் அழகிய சோலைகளும் மாயமாய் மறைந்துபோயினவே! கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்து பெருவியப்பூட்டும் அற்புதச் சிற்பங்கள் பற்பல நிரம்பிய அழகியதொரு மாமணிக் கூடத்தைப் பார்க்கிறோம். அம்மணிக் கூடத்திலே, அமர மங்கையரோவென்று ஐயுறக்கூடிய அற்புதப் பேரழகு படைத்த சில மாதர்கள், ‘கை வழி நயனம் செல்ல—கண் வழி மனமும் செல்ல’ மிக அழகாக நடனம் செய்துகொண்டிருக்கிறார்கள். தமது அற்புத ஆடலால் நமது கண்களுக்கு ஒப்பற்ற இன்பமூட்டும் அப்பெண்மணிகள், தமது கந்தர்வக் குரலில் பாடும் இன்னிசைப் பாடல்களால் நமது செவிகளுக்கும் ஒப்பற்ற பெருமகிழ்ச்சி யூட்டுகிறார்கள். சிறந்த அலங்காரங்களோடு கூடிய பலவகைப்பட்ட சிப்பந்திகள், தத்தமக்கு உரிய ஆசனத்தில் கம்பீரமாக அமர்ந்துகொண்டிருக்கிறார்கள். அம்மணிக்கூடத்தின் நடுவிலே—நவமணிகள் இழைத்த அற்புதச் சிங்காசனத்திலே—பூவுலகிலுள்ள அழகெல்லாம் திரண்டு ஒரு வடிவாக அமைந்ததோ என்று ஐயுறக்கூடியவாறு அழகின் தவப்பயனாக அவதரித்த அண்ணலாகிய கண்ணபிரான், புன்னகை பூத்த இன்முகத்துடன் கூடியவனாய், செம்மணிக் கையில் செங்கோல் ஏந்திச் சிங்காரமாக வீற்றிருக்கின்றான்.

நமது கவியரசராகிய பாரதியார், அப்பெருமானை பலவாறு போற்றிப் புகழ்ந்தபின், தமது பெயரையும் ஊரையும் தமது உள்ளக் கிடக்கையையும் எடுத்துக்கூறி, “மன்னர் பெருமானே! அடியேன்மேல் கருணை கூர்ந்து அடியேனது ஆன்மாவை உய்வித்தருளத் திருவுள்ளம் இரங்கியருளவேண்டும்”—என்று வேண்டி நிற்கிறார்.

அவ்வேளையிலே, கரும்பு வில்லும் ஐம்பூங் கணைகளும் ஏந்திய காமவேளைப்போன்ற ஒப்புயர்வற்ற வடிவழகு—கட்டழகிற் சிறந்த இளங்காளைபோன்ற வாலிபர்களின் கூட்டுறவு—ராஜ்ய காரியங்களைக் குறித்து மந்திரி முதலியவர்களுடன் நடத்தும் சம்பாஷணை—இன்னிசை வல்லோரின் இன்பப் பாட்டுகள்—அழகிற் சிறந்த யுவதிகளின் அற்புத நாட்டியம் முதலியன, பாரதியாரின் உள்ளத்தில் ஒரு பெரும் மாறுதலை உண்டாக்கிவிடுகின்றன. சத்திய நன்னெறியைக் கேட்டுத் தெளிவதற்காக கண்ண மன்னனைத் தேடி வரச் செய்வித்த கிழவரிடம், பாரதியாருக்குப் பெருஞ்சினம் பிறக்கிறது. அக்கிழவரைக் கொல்லவேண்டுமென்னும் எண்ணங்கூட அவரது நெஞ்சில் தோன்றிவிடுகிறது. தினந்தோறும் பலவகைப்பட்ட கவலைகளில் மூழ்கியவனாய் சின்னஞ் சிறியதொரு நாட்டை ஆண்டுகொண்டிருக்கும் ஒரு மன்னன், பெருந்தவம் புரிந்தோர்க்கும் எளிதில் விளங்கிவிடாத சீரிய உண்மையை விவரித்துக் கூறுவது எவ்விதத்தில் சாத்தியமாகுமென்று எண்ணி பாரதியார் பெரிதும் வாடிய முகத்துடன் கூடியவராய் நிற்கிறார்.

என்ன விந்தை இது? சிங்காரமாக அமர்ந்துகொண்டிருந்த கண்ணபிரான், பாரதியாரது வாடிய முகத்தைக் கண்டு தனது ஆசனத்தினின்றும் விரைந்தெழுந்து வந்து அவரை நெருங்கி அவரது கரங்களை அன்போடு பற்றிக்கொண்டு, “அன்பனே! நாம் கலந்து உரையாடுவதற்கு இவ்விடம் தகுதி உடையதன்று; தனியிடத்திற்குச் செல்வோம், வா!”—என்று கூறி, அவரைத் தனியிடத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் பின்வருமாறு பேசத் தொடங்குகிறார்:—

“என் சிந்தைக்கினிய மைந்தனே! உயிர்க்கு உறுதி பயக்கக்கூடிய உத்தம சத்திய ஞானத்தைக் கூறுகிறேன்; அதை நீ நன்கு கவனித்துக் கேட்கக் கடவாய். ஊழ்வினைப் பயனாக எப்படிப்பட்ட கொடிய துன்பங்கள் சூழ்ந்தாலும்—எத்தகைய கொடிய சோதனைகளுக்கு உள்ளாக நேர்ந்தாலும் மன உறுதியிற் சிறிதும் கலங்காமல் நின்று, சிந்தையை இறைவனது இணையடிகளில் ஊன்ற நிறுத்தி, ‘தான்’—‘தனது’ எனும் அகங்கார மமகாரங்களை வெற்றிகொண்டு, தன்னைத் தான் மறந்து பரமானந்த பரவசமாய் நிற்கும் போது விளங்கும் அறிவு, ஒப்புயர்வற்ற மகத்தான சக்தி பொருந்தியதாகும். அத்தகைய பேரறிவை நீ அடைய வேண்டுமானால் அதன் பொருட்டு இடையறாத—சற்றும் சலியாத முயற்சி செய்ய உறுதி கொள்ள வேண்டும்.

அன்பனே! நீல வானில் நிலவும் அழகிய சந்திரன், கண்ணையும் கருத்தையும் ஒரே

சமயத்தில் குளிர்விக்கக் கூடிய குளிர்ந்த சோதி உடையவனாவான். அவன் என்றும் உள்ள சத்திய நித்திய சொரூபன் என்பதை உணர்ந்துகொள். சந்திரனின் அழகிய வடிவத்தையும் அமுதம் சொரியும் அவனது குளிர்ந்த கிரணங்களையும் பாரபட்சமின்றி எல்லாவற்றின் மேலும் தனது குளிரொளியைப் பரப்பும் தன்மையையும் சிந்திக்கச் சிந்திக்க, அவன் உனது சிந்தையில் வந்து சேர்ந்து—உன்னைத் தழுவியணைத்து—ஒப்புயர்வற்ற பேரின்பத்தை உனக்கு ஊட்டுவான். இந்த பரந்த உலகம் முழுவதும், அந்த சுந்தர சந்திரனது மாய மோகன மந்திர சக்தியால் அமைந்த ஆனந்தத் தாண்டவ நாடக மேடையேயாகும். இதைப் பொய் யென்று இகழக்கூடிய சாத்திரம் ஏதுவாக இருந்தாலும், அம் ‘மடச் சாத்திர’த்தை நீ பொய்யென்று ஒதுக்கித் தள்ளிவிடு.

எல்லைகாண முடியாமல் எங்கும் பரந்து கரை கடவாமல் கட்டுண்டு நிற்கும் கருங்கடல், எல்லையில்லாச் சிறப்புடையவனாய் ‘அங்கு இங்கு எனாதபடி எங்கும் பரந்து’ நின்று சத்திய நெறியால் கட்டுண்டு நிற்கும் இறைவனது இன்னருள் வடிவாகவே இலங்குகிறது. அலைபெறியும் அக்கடலிலே அடிக்கடி தோன்றித் தோன்றி மறையும் எண்ணிறந்த சின்னஞ் சிறு குமிழிகள், வினைப்பயனால் உலகில் அடிக்கடி தோன்றி மறைந்து கொண்டிருக்கும் உயிர்களை நினைவூட்டுகின்றன. நீலக் கடலின் மேல் விளங்கும் மாலைச் சுடர்க் கதிரோன், மெய்ஞ்ஞானப் பேரொளி வீசும் சுடர் அறிவைக் குறிக்கிறது. அக் கதிரவனின் சுடர்க் கிரணங்களில் தோன்றும் பல்வேறு நிறங்கள், இவ் வுலகிலுள்ள ஏனைய பொருள்க ளெல்லாவற்றையும் குறிக்கின்றன.

இந்த உண்மைகளை உணர்ந்து—என்றுங் குன்றாத மெய்யின்பத்தை

துகர்ந்து— அறநெறிக்குச் சிறிதும் மாறுபடாததொரு நேரிய சீரிய தொழிலில் ஈடுபடுவார்களே, இறைவனது திருவுள்ளத்திற்கினிய மெய்யன்பர்களாவர். இதய மலரில் குடிகொண்டிருக்கும் இறைவனைப் பற்றிய சிந்தனையிலேயே பொழுது கழிக்கும் புனிதர்கள், இந் நிலவுலகிலே ஏனைய எவரையும் எளிதில் பணியச் செய்விக்கக் கூடிய மகத்தான சக்தி பொருந்தியர்களாவர். ஞானத் துணிவு மிகுந்த அத்தகைய மெய்யன்பர்களைக் கண்ட விடத்தில், மணி முடியணிந்த மன்னர்களும் பணிய வேண்டியவர்களே. அப்படிப்பட்ட மெய்யன்பர்களை 'முடிசூடா மன்னர்கள்' என்றும் மொழியலாம். சிங்காசனத்தில் வீற்றிருந்து செங்கோல் செலுத்தும் மன்னர்களுக்கும், பலவகைப் பட்ட கவலைகள் உண்டாவது இயல்பு. வெளிக்கு அவர்கள் களிப்பில் மூழ்கி யிருப்பதாகத் தோன்றினாலும், உள்ளுக்குள் அவர்கள் கவலைப் பேயோடு போராடிக் கொண்டிருப்பார்கள். தமது நெஞ்சமாகிய சிங்காசனத்திலே வீற்றிருக்கும் இறைவனுக்கே அடிமைப்பட்டு வாழும் அன்பர்கள், என்றும்—எக்காலத்திலும்—எந்நிலையிலும்—எதனாலும் எத்தகைய கவலையும் சற்றும் கொள்ளாது, என்றென்றும் துன்பக் கலப்பற்ற தனிப் பெரும் இன்பத்தையே அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். அத்தகைய மெய்யன்பர்கள் என்றும்—எதற்கும்—சிறிதும் அஞ்சுவதில்லை யாதலின், இறுமாப்புடன் கம்பீரமாக நடக்கும் மதயானையைப் போல் இவ்வுலகில் குற்றமற்ற ஞானச் செருக்குடையவர்களாகத் திரிந்து கொண்டிருப்பார்கள்.

'அவனன்றி ஓர் அணுவும் அசையாது'—என்னும் சின்னஞ்சிறு மொழியிலே, எவ்வளவோ அரிய பெரிய விரிந்த பொருள்கள் மறைந்து கிடக்கின்றன. இந் நிலவுலகில் நிகழும் சம்பவம் ஒவ்வொன்றும் இறைவனது திருவுள்ளப்படியே நிகழ்கிறதென்னும் உண்மை ஒருவனது நெஞ்சில் நன்கு பதிந்து விட்டால், பின்னர் அவன் என்றேனும்—எது குறித்தேனும்—அஞ்சி அயர்ந்து வருந்தி நிற்பானோ? எவ்வுயிர்க்கும் தனிப்பெருந் தந்தையாகிய இறைவனது திருவருளால் வரும் இன்பமே என்றும் நிலைத்து நிற்கக் கூடிய உண்மையின்பம் என்பதையும்; அவ் வின்பமொன்றே என்றுங் குன்றாத—துன்பக் கலப்பற்ற—தனிப்பட்ட பேரின்பம் என்பதையும் ஒருவன் நன்கு உணர்ந்து கொண்டு விடுவானாயின், பின்னர் அவன் வாழ்க்கைப் போராட்டத்தில் நேரும் எத்தகைய கவலையையும் மிக்க அலட்சியமாக ஒதுக்கித் தள்ளி விட்டு உற்சாகம் பொங்கும் உள்ளம் உடையவனாய் மெய்யறிவு வளர்ச்சியில் மேன் மேலும் முன்னேறிச் செல்வானன்றோ?

மெய்யறிவின் ஒளி சிறந்து விளங்கவும்—குற்றமற்ற உலகியலறிவில் அனுபவம் முதிர்ந்து விளங்கவும்—என்றும் எந் நிலையிலும்—அறநெறி முறைக்குச் சிறிதும் மாறுபடாவாறு வாழ்க்கை நடத்துவாரே, இறைவனது திருவுள்ளத்திற்கினிய மெய்யன்பர்களாவர். பழுதற்ற தொழில்கள் பல இருந்தாலும், அவற்றிலெல்லாம் தலை சிறந்து விளங்குவது 'பூமி திருத்தி உண்'ணும் உழுதொழில் ஒன்றேயாகும். மேலும், ஓய்வு நேரம் வாய்க்கும் போதெல்லாம், எத்தகைய கவலைகளையும் எளிதில் மறக்கச் செய்து விடக் கூடியனவும் பலவகைப் பட்ட சுவைகள் நிரம்பியனவுமாகிய சீரிய நூல்களை ஓதி உணர்ந்து அவற்றில் அறிவுறுத்தப்படும் அரும் பொருள்களைக் கண்டு களிக்க வேண்டும். 'தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்'—என்பதற் கிணங்க, தாம் கண்ட இன்ப அனுபவங்களை எடுத்துக் காட்டி ஏனை

யோரின் துன்பங்களை நீக்கத் தம்மால் இயன்றவரையில் முயல்வோரே மெய்யன்பர்களாவர்.

அழகுக்கும் அன்புக்கும் அருளுக்கும் இன்பத்திற்கும் உறைவிடங்களாகிய மாதரின் மாசற்ற—ஹிருதய பூர்வமான—தெய்விகக் காதலிலே, இறைவனது இன்னருட் பெருக்கைக் காண முயல வேண்டும். ஆண்டவன் ஒருவனுக்கு அளித்த பொருட் செல்வம், அவனொருவனே தன்னந்தனியாக அனுபவிப்பதற்காக வன்று; தர்ம சிந்தனை யில்லாத ஒருவன் செல்வம் படைத்திருப்பது, எட்டி மரம் எவர்க்கும் பயன்படாத கனிகளைத் தாங்கி நிற்பது போன்றதேயாம். எளியோர்க்கு இரங்கி இயன்றவரையில் உதவி புரிவதிலும் பலவகைப் பட்ட அறங்கள் செய்வதிலும் தான் பெற்ற பொருட் செல்வத்தைப் பயன் படுத்தும் அருளாளனே, செல்வத்தைப் பெற்றதனால் பெறுவதற்கு உரிய சீரிய பேற்றை அடையக் கூடியவனாவான். அத்தகைய உத்தமன், தன்னிடமுள்ள பொருட் செல்வத்திலும் இறைவனது இன்னருளைக் காணவல்லவனாவான். பரோபகாரம் செய்வதையே தான் பெற்ற பிறவியின் அரும் பெரும் பேறாகக் கருதும் ஒருவனை, என்றும் மறையாது நிலைத்து நிற்கக் கூடிய சீரிய கீர்த்தி தானே தேடி வந்தடையும். அத்தகைய உத்தமன் தான் விரும்பாதிருந்தும் தன்னை வலிய வந்தடைந்த கீர்த்தியிலும் இறைவனது இன்னருளைக் கண்டு களிப்பான். இறைவனது இன்னருட் படைப்பாகிய இம் மண்ணுலகிலே, அவனது திருவுள்ளத்திற்கு இன்பூட்டக் கூடிய சீரிய அறநெறியினின்றும் சிறிதும் வழுவாமல் நடக்கும் உத்தம மெய்யன்பனுக்கு இவ்வுலகமே ஒரு பெரும் இன்பப் பூங்காவனமாகத் தோன்றும். எனவே அத்தகைய உத்தம பக்தன், இறைவனது இன்னருளின் அற்புதப் பெருஞ் சிறப்பை உன்னி உன்னி ஆனந்தக் கூத்தாடுவது இயல்பேயன்றோ! அத்தகைய இன்ப ஆடலும், இறைவனது இன்னருளால் தோன்றுவதேயாம். உள்ளத்தில் பொங்கிப் பெருகும் இன்ப உணர்ச்சிப் பெருக்கால் தோன்றும் பாட்டுகள்—கண்களுக்கும் கருத்துக்கும் ஒருங்கே பெருங்களிப் பூட்டக் கூடிய அற்புதப் பேரழகு வாய்ந்த அரிய சித்திரங்கள்—ஓதுவோர் உள்ளத்தில் பசுமரத்தாணியென ஊன்றிப் பதியுமாறு அருட்பெரும் புலவர்களால் பலவகை நயங்களும் சிறந்து விளங்கப் பாடப்பட்ட அன்பு கனிந்த அருட்கவிகள் முதலிய கலைகளிலே ஈடுபட்டு இறைவனது இன்னருட் சிறப்பைக் கண்டு களிப்போர், இறைவனது திருவுள்ளத்திற் கினிய உண்மையன்பர்களாவர்.



"யத் யத் விபூதிமத் ஸர்வம் ஸ்ரீமத் ஊர்ஜிதமேவவா!
தத்ததேவாவ கச்ச த்வம் மம தேஜோம்ச ஸம்பவம்!!"—

இந் நில்வுலகிலே, பெருமையிற் சிறந்தது எது எதுவோ—உண்மையுடையது எது எதுவோ—அழகு மிகுந்தது எது எதுவோ—வலிமையுடையது எது எதுவோ, அவை யனைத்தும் எனது அருளொளியின் அம்சத்தினின்றும் தோன்றியவையே என்னும் உண்மையை நீ ஒரு போதும் மறந்து விடாதே!

இறைவனது இன்னருளைப் பெற்ற உத்தம பக்தர்களுக்கு, இந் நிலவுலகில் பெறுதற்கரியது எதுவுமில்லை. அத்தகைய மெய்யன்பர்களுக்கு, கிடைத்தற்கரிய அரும்பொருள்களும் இறைவனது இன்னருளால் எளிதில் கிடைக்குமென்பது உறுதி. அத்தகைய உத்தம மெய்யன்பர்கள் வசிக்குமிடம் எத்தகையதாயினும், அதைத் தெய்விக நறுமணங் கமழும் இன்பப் பூங்காவனமாகக் கொண்டு போற்றலாம். இறைவன் உறையும் புனிதத் தன்மை பொருந்திய இடம் எவ்வாறு பெருமதிப்புடன் போற்றுதற்கு உரியதோ, அவ்வாறே ஆண்டவனது திருவுள்ளத்திற்கினிய மெய்யன்பன் வசிக்கும் இடமும் பெருமதிப்புடன் போற்றுதற்கு உரியதாகும்.

எனது சிந்தைக்கினிய மைந்தனே! இது காறும், இறைவனது திருவுள்ளத் திற்கினிய மெய்ஞ்ஞானிகளின் இயல்பு எத்தகையதென்பதை ஒருவாறு விளக்கிக் கூறினேன். அத்தகைய சீரிய மெய்ஞ்ஞானத்தை, நீ கூடிய விரைவில் பெற்று மகிழக் கடவாயாக."—என்று தேனினுமினிய தீங்குரலிலே பேசிமுடித்த கண்ணபிரான், மாயமாய் மறைந்து போய் விடுகிறான். உடனே, தான் பெற்ற ஆனந்தானுபவத்தை எண்ணி எண்ணிப் பெரிதும் மகிழ்ந்த பாரதியார், உற்சாகம் பொங்கித் ததும்பும் உச்சக் குரலிலே பின் வருமாறு பாடுகிறார்:— .

"...............................கண்ணன்
செப்பவும் உண்மை நிலை கண்டேன்!—பண்டை
ஈன மனிதக் கனவெலாம்—எங்கள்
ஏகி மறைந்தது கண்டிலேன்!—அறி(வு)
ஆன தனிச் சுடர் நான் கண்டேன்!—அதன்
ஆடல் உல(கு) என நான் கண்டேன்!".

அன்பர்களே! அத்தகைய அற்புதக் காட்சியாகிய ஆனந்தானுபவத்தை உங்களது ஹிருதய கமலத்தில் என்றும் மறவாவாறு நன்கு பதிய வைத்துக் கொள்ளுங்கள். திருவருட் பிரகாச வள்ளலாராகிய இராமலிங்க சுவாமிகள் அருளிய பின்வரும் மொழிகளால், இன்னருள் வடிவினனாகிய இறைவனின் சற்குருத்தவத்தின் தனிப் பெருஞ் சிறப்பைத் தினந்தோறும் போற்றிப் புகழ்ந்து மகிழக் கடவீர்களாக:—

"பரமுடன் அபரம் பகர் நிலை இவை எனத்
திறமுற அருளிய திருவருட் குருவே!

அறிபவை யெல்லாம் அறிவித்(து) என்னுளே
பிரிவற விளங்கும் பெரிய சற்குருவே!
கேட்பவை யெல்லாம் கேட்பித்(து) என்னுளே
வேட்கையின் விளங்கும் விமல சற்குருவே!
காண்பவை யெல்லாம் காட்டுவித்(து) எனக்கே
மாண்பதும் அளித்து வயங்கு சற்குருவே!
செய்பவை யெல்லாம் செய்வித்(து) எனக்கே
உய்பவை அளித்(து) எனுள் ஓங்கு சற்குருவே!
உண்பவை யெல்லாம் உண்ணுவித்(து) என்னுள்
பண்பினில் விளங்கும் பரம சற்குருவே!
எல்லா நிலைகளும் ஏற்றிச் சித்தெலாம்
வல்லான் என எனை வைத்த சற்குருவே!"

"Funny" Magzin of India

(Bi-monthly) Published on the 5th & 20th.

GIVES THE BEST OF EVERYTHING

Jokes, Stories, Serials, Humorous articles, Cartoons of great events and Competitions

LUCKY NUMBER SCHEME & FREE PUZZLE PRIZE
OUR ADDITIONAL FEATURES

Price As. 1-6.

AVAILABLE AT ALL STALLS & NEWS AGENCIES.

Apply to:—

The "Funny Magzin" Office,
No. 6, Lawyer Chinnathambi Mudali St.,
Sowcarpet, MADRAS

தமிழின் தற்கால வாழ்வு

(பண்டித இராம சுப்பிரமணிய நாவலர்.)

கற்பார்தம் உள்ளத்துக்குக் கழிபெருஞ் சுவையை அளித்து அமிழ்தினு மினிதாய் ஒளிரும் தமிழ்மொழியை ஓர் தொன்மொழி என்ப இக்கால வறிஞர் பலரும். வடக்கண் வேங்கடமும் தெற்கட் குமரியுமெனத் தொல்காப்பியனார் முதலோர் தமிழ்நாட்டெல்லை வகுத்திருப்பினும், இக்கால மூதறிஞர் சிலர், தமிழ்பாரதநாடு முழுதும் பரவி யிருந்தது எனவும், சிலர் உலக முற்றினும் தமிழ்மொழியே ஒரு காலத்துத் தலைசான்று நிலைசான்றது எனவும் கூறாநிற்பர். முச்சங்க மேடைகளினும் அச்சந் தவிர்ந்தேறி அவிர்ந்து, அகத்தியமாய அகத்தியத்தினும் ஒல்காப் பெருமைத் தொல்காப்பியத்தும் பிறநூல்களினும் செஞ்செவிது ஒழுகிச் சீரும் சிறப்பும் எய்தி, புலவர் செந்நாப் பொருந்தி அலகிலொளிவீசிய அருந்தமிழ், ஆனாப்பெருமை மேனாட்டோரும் அறிந்து கற்றற்கு இடனாயிற்று. அவருள்ளும் பலர் தமிழை வடமொழியினும் சிறப்பப் போற்றுவாராயினர். வடசொற்களெனக் கருதப்பட்ட சில ஆராய்ச்சியிற் தமிழ்ச்சொற்களென விளக்கப்பட்டன. தமிழ் தனிமொழி என பல்லோராலும் நிறுவப்பட்டது.

அண்டரேத்தும் தண்டமிழ்மொழி இக்காலத்து எய்துறும் வாழ்வின் பெற்றிமை என்னை? தமிழ்மக்கட்கே தமிழ் வேம்புபோலு மாயிற்று. மேனாட்டுமொழி கற்றார்க்குளதாம் சிறப்புத் தமிழாற் கூடத் தமிழர்க்கு அளிக்கப்படுவதின்று எனின், பிறரோ தமிழரைப் பேணற்பாலார்?

அரமனைப் புலவரெனவும் அவதானிகன் எனவும் நாட்கவி பாடுவோர் எனவும் தோட்கவி பாடுநரெனவும் செருக்குற்று உருப் பெற்றிருந்த நம்புலவர் தகைமை இக்காலத்து என்னாயிற்று? பொருநர் புலவர் முதலியோர் இக்காலத்து யாரை யாரிடத்து ஆற்றுப்படுப்பது என அலமருகின்றனர். ஆற்றுப்படைகள் காற்றிற் பறப்ப; காவியவோவியம் பரவுத லொழிந்தது; கோவை 'தேவை' யன்று; மாலையார்க்கு மாலையாயிற்று; பரணி திரணமாயிற்று; உலா உலாவுதலின்று; தூது பேதுபட்டது; பொருட்பாவு மருட்பாவு மொருங்கு மருட்பா வாயின. மேகலையோகையும் சிலம்பின் புலம்பும் வளையினொளியும் குண்டலமணிகளின் எண்டகு கவினும் இறப்ப, அலமருகின்றான் தமிழணங்கு. எட்டுத்தொகை எட்டாத் தொகையாயிற்று; பத்துப்பாட்டுப் பித்துப்பாட்டாயின; கீழ்க்கணக்குப் பாழ்ங் கணக்காயிற்று.

அருமந்த நூல்கள் தமிழின்கண் இருந்தன என்றும் இக்காலத்து அவை மாய்ந்தன எனவும் கூறி விழுமமுறுவர் ஒரு சாரார்; ஒரு சாரார், பெற்ற தன்னூலைத் தெற்றெனப் போற்றுகிலர் என உழப்பர். இன்றும், தமிழ் நூல்கள் பிழைத்து வருவதும் மேல்இறவா நிலை எய்தியதும், மேனாட்டார் புரிந்து உதவிய அச்சுப் பொறிகளினாலேயாம். கிடைத்த நூற்களையேனும் போற்றிவரின், அகத்தியம் அவிநயம் பல்காப்பியம், அடிநூல், நாலடி நாற்பது, இசை நுணுக்கம், பூதபுராணம், பனம்பார முதலிய சென்ற நூல்கட்கு எனக் கழிவிரக்கம் கொள்ளவேண்டா.

உளவிய னூல், இசைநூல், மருத்துவநூல், எண்ணூல் (கணிதநூல்) குறிநூல், வன்மநூல், மறைநூல், மயக்கவிளை நூல், இறைநூல் (இரேகா சாஸ்திரம்), பொருநூல், இன்பநூல், பூமிநூல் வானநூல் முதலிய உலகாராய்ச்சி நூல்கள், ஓவியநூல், சிற்பநூல், கைவினை நூல் (கைத்தொழி னூல்), நாடக நூல், உறுப்பிலக்கண நூல் முதலியன முன்னர் இருந்தன என்பதற்கு பண்டை உரையாசிரியர்கள் தம் தண்டமிழ் உரைகளாற் பெறப்படுவன. எனும், அவற்றுட் பலவும் இப்போழ்து கிடைத்தில. வன்மநூல் முதலிய சிலவற்றை ஏட்டுவடிவின் வைத்திருப்போரும் அவற்றைப் பிறர்க்குக் காட்டவுமஞ்சுகின்றனர். அவர் தாம் தேடிக்கொண்ட பொருளென நினைந்து, பிறரும் கற்கலாகாது என்னும் பொறாமை யுடையராய் அந்நூல்களை வெளிப்போத விடுகின்றிலர். இத்தகை உள்ளப்பான்மை யுடையோரே தமிழணங்கின் உயிர்க்கு உலைவைப்பவரென்பேம்.

சில ஏடுகள் பெயர்த்தெழுதாமையாற் செல்லரித்துப் போயின. தொல்காப்பியத் தோற்றத்தொடு அகத்தியம் நிலைபெயரத் தொடங்கிற்று. நன்னூல் சிறிது முன்னர்த் தோன்றி யிருப்பின், தொல்காப்பியத்தின் வாழ்வைச் செறக்கினுஞ் செறக்கும். அதன் முன்னர் அச்சுப் பொறிகள் தோன்றிக் காத்தன. இசைநாடக நூல்கள் முதலியன ஒழிந்தது முந்தையோர் பெயர்த்தெழுதாமையானே யாகும். இற்றைக்கு ஏறத்தாழ ஆயிரம் வருடங்கட்கு இப்பால் வாழ்ந்த புலவாணர் மீது இக்குற்றம் பெரிதும் சார்த்தப்படுதற்கு உரித்து. பிற்காலத்தார்க்கு அந்நூல்கள் அரியவாய் முடிந்ததோ பிற்றையோருள் அரும்புலவர் சிலரேயாய் ஒழிந்ததோ, அந்நூல்களின் அழிவுக்கு, இவற்றுளொன்று காரணமாதல் வேண்டும்.

இக்காலத்தும் புலவரெனத் தக்கார் சிலரன்றிப் பிறரெல்லாம் தொன்னூல்கட்குத் தடுமாறி நன்னூல் முதலிய சின்னூல்களை மட்டும் கற்றுப் பெருமித முடையராய்த் தாம்தாம் புலவரென வாய்ச்செருக்குக் கூறுகின்றனர். தொன்னூல்களாகிய பொன்னூல்கள் நூற்சாலைகளின் கண் பேடகங்கட்குள் தலைமடங்கிக் கிடக்கின்றன. இக் கிடக்கை, கிடைத்த நூல்களும் இனி அழிதற்கு அறிகுறி கொலோ என்று அஞ்சுகின்றோம். புலவர் பலரும் நன்னூற் புலவரும் சின்னூற் புலவரு மாயினர். இலக்கணம் அச்சந்தருவன எனப்பட்டன. இலக்கியங்களின் இலக்குத் தவறிற்று. மேனாட்டார் தமிழைக் கொள்ளைகொண்டு தமிழ்ப்புலவராய்ப் பல அரிய நலங்களை இழைத்து வருகின்றனர்; தமிழர் தந் தாய்மொழியைக் கைவிட்டு அலமருகின்றனர். அன்னோ!

முச்சங்கம் நிகழ்ந்தனபோக, இப்போழ்து மதுரையில் நான்காஞ் சங்கம் நிகழ்கின்றது. தமிழ்ப்பித்து ஏறிய புலவரென்பார் சிலர் ஒருவகை வகுப்பினர்க்கே அதனை உரித்தாக்கித் தமிழ்நலத்தைக் கெடுக்க முயல்கின்றனர். எழுத்தாய்ந்து அச்சிடுவாரும் இக்காலத்துப் புலவராயினர்; நூல் வணிகரும் புலவராயினர். மதுரைத் தமிழ்ச்சங்கத்து எத்துணையர் புலமை நிரம்பியுளார் எனக் கடாவின், விடை என்னாம்? நல்லிசைப் புலமைசான்ற பாடல் இயற்றினார் தாம் எத்துணையர்? ஆண்டு ஆண்டு நூற்களின் ஏடுகளைத் திருப்பிக் கண்ணிற்கண்ட பொருளை வினாய்த் தேர்வு (பரீக்ஷை) முற்றுவிப்பதோடு இச்சங்கத்தின் பயனும் முற்றுகின்றது. அத் தேர்வுகட்கே எழுதி வெற்றிபெற வியலாதாரும், சில தேர்வாளர் இச் சங்கத்து இல்லா ரல்லர். ஒரு வகுப்பு ஆதிக்கம் கொண்ட இச்சங்கத்துக்கு ஏற்பன புரியின், சாலப்

பயன்படுமென்றுணர்ந்து உழைப்பாருளரேல், தமிழின் சிறப்புச் சிறிதேனும் அரும்பக் கூடும்.

திருவாங்கூர், திருநெல்வேலி, கரந்தை முதலிய இடங்களிலும் தமிழ்ச் சங்கங்கள் கூடப்பெற்றன. அவை யிற்றுள், ஏனைய கால்நிலை பிறழ்ந்து நிற்பத், திருவாங்கூர்த் தமிழ்ச்சங்கம் வீழ்ந்து ஒழிந்தது. தமிழ்நலம் பேண முற்படு முன்னர் வகுப்பு இகல், மதவிகல், பொறாமைப்போர் முதலியன விளைந்து தமிழன்னையைப் புறப்படுகின்றன. தமிழர் கெடுதற்கு அவர் தம் மடிமையும் பொறாமையும் செருக்குமே சிறந்த ஏதுக்களாயுள என்பது யாம் கண்கூடாய்க் கண்டதொன்று. நாட்டுப்பற்று மொழிப்பற்று மிலராய சில மக்கட் பிணங்களும் ஈண்டுக் கொழுத்த செல்வத்தோடு வயிறோம்பி வாழ்கின்றனர். அவரெல்லாம் தமிழராம்; தொல்குடியினராம்; நாகரிகராம். அவை யெல்லாம் என் பயப்பதற்கோ, யாம் அறிகிலேம்.

சில பத்திரிகைகள் தமிழின் நலத்தைக் குறித்து உலாவுகின்றன எனப்படுகின்றன. அவை தமிழ்மொழிக்குக் கேடு பயவாதிருப்பின், அதுவே சிறந்த ஊதியமாம். அவையிற்றிற் காணப்படும் பிழைகள் தமிழை எத்துணைக்கு வளம்படுத்துமென்ப தறிகிலேம். 'சேழ்வி' 'சுவற்றில்' 'அவை போனது' 'யாபாரம்' என்பன முதலிய காணவு மாகாத பிழைகளைச் சில வெளியீடுகள் நீட்டுகின்றன. பத்திரிகாசிரியர்களும் தம் பிழைகுறித்து நாணிலராய்த் திரிதருகின்றனர். அவ் வெளியீடுகளை வாசிக்கும் மக்கள் குரங்கைக் 'குறங்கு' எனவும் தமிழைத் 'தமிள்' எனவும் கூறுமல் என் செய்வர்? 'தேவை' 'தயார்' 'ரொம்ப' 'ஜாஸ்தி' 'ஜல்தி' 'எச்சரிக்கை' முதலிய சொற்களை வரைந்து தமிழை அவலப்படுத்தும் பத்திரிகைகளும் பல. அவற்றுக்கு நேரான தமிழ்ச்சொற்கள் இருப்பவும் இவ்வாறு எழுதுவதன் பொருள்தான் என்னைகொல்? மாணாக்கரும் அவ்வகைய சொற்களை வரைந்து அல்லற்படுகின்றனர். மோடார், தாசில்தார் முதலியவேனும், தமிழ்ப்படுப்பின், பொருள் விளங்காது எனக் கருதி விடுக்கப்படினும், ஏனைய சொற்களைத் தமிழ்ப்படுக்காது எழுதுவது தமிழின் சிறப்பைக் குறைக்குந் தகைத்தாம்.

சில பத்திரிகைகள் தமிழினும் வடசொற்களை மிகுத்து எழுதுகின்றன. ஒரு பத்திரிகையில், ஒரு தொடரின்கண் உள்ள ஒன்பது சொற்களுள் எழு வடசொற்கள் காணப்படுகின்றன. அதைத் தமிழ்நடை என்பதா அன்றி வடமொழி நடை என்பதா? சில வினைச்சொற்கள் தமிழின் வருவது மட்டுமே, அத்தொடர் தமிழ்நடை எனப்படுகின்றது போலும். சீயர் முதலிய வைணவ நூலுரையாசிரியர்க்குத் தமிழ்நடை கைவராது போலும். திருவாய்மொழி உரையால், தமிழ்மொழி வடமொழியின் உதவியின்றி நிகழாதது போற் காட்டிற்று. 'கலப்பு நடை' என்னும் மணிப்பிரவாள நடை எனக் கூறி அந்நடையை இலக்கியங்களில் புகுத்துவது எத்துணை வருந்தத் தக்கது? அந்நடைகள் நகைப்பத்திரிகைகளில் இடம் பெறுவது சால நன்று. தமிழ்மொழியைச் செவ்வனம் எழுதக் கற்கு முன்னரே உரையிடத் தொடங்கின், தாம் பயின்ற வடசொற்றிரளையன்றிப் பிறிது எதைத்தான் அன்னோர் எழுதவியலும்? வடசொற் கலப்பை வேண்டுவதூஉம் தமிழ்நயம் இழுக்காவிடத்தே என்பது உணரற்பாலது.

தமிழுலகத்து, இக்காலத்து விகடப் பத்திரிகைகள் மலிந்து விட்டன. அவற்றால், தமிழ்நூல்களைக் கற்க விரும்பாதாரும், சிறிது பயன் எய்தி வருகின்றன ரெனினும், பெரும்பயன் உண்டாவதின்று. தமிழ்நடை ஆண்டு ஆண்டு அவற்றுட் பிழைபட்டுக் கிடப்பதால் கற்பாரும் அப்பிழைகளையே எழுதவும் பேசவும் தொடங்குகின்றனர். விகடப்பத்திரிகை நிகழ்த்துபவருடைய கருத்துத் தமிழ்மொழி நலத்தின்மேல் நில்லாது பொன்னின்மேல் நிற்றலால், அவை தமிழுக்குச் செய்யும் பயன் இத்துணைத்து என்பது புகலாதே போதருமென்க.

'நூலாசிரியர்கள்' சிலர் வழுப்பட நூலெனச் சொல்லிச் சில ஏடுகளை வெளிப்படுப்பது மிக மிக நகைத்தற்கே இடனாகின்றது. 'பாலசிந்தாரத்தின சதோபதேசம்' என்னும் ஒரு சுவடியில் காணப்படும் பிழைகள் எண்ணில. ஆயினும், அதற்கு மதிப்புரை யளித்திருப்பவர்கள் கற்றூர் குழுவில் எண்ணப்படுகின்றவரா யிருக்கின்றனர். அவர்கள் என் கருதி மதிப்புரை யளித்தனரோ? யாம் அறியேம். அச்சுவடியில் 'யாமுணர்ந்து' 'யான் புகன்றேன்' எனப்பன்மை யொருமை இயையாது வழுப்பட்டும், 'விரோதம் வருந்தா திருக்க' எனச் சொல் வழுப்பட்டும், 'பெருமுதவி' எனப் புணர்ச்சி வழுப்பட்டும் கிடக்கின்றன. இன்னணங் காணப்படும் பிழைகள் தாம் அதிற் பலவா யிருத்தலின், தமிழுலகைச் சீர்கெடுக்குங் கருவிகளுள் அதுவும் ஒன்று எனவே கருதத் தக்கது என்க. 'E. S. L. C. இலக்கியத் திரட்டுரை' என்னும் சுவடியில் சுவடுபடப் போந்த பிழைகளும் பல. ஒன்று கூறி விடுப்பாம். 'அறிந்திபுலீசு'' என்பதை 'அறிந்து இபுலீசு' எனப் பிரிக்க வறியாது, அறிந்து புலீசு எனப் பிரித்து 'அறிந்துபு' என்பது செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம் என அதன் ஆக்கியோர் எழுதியிருக்கின்றனர். 'செய்பு' என்பது வாய்பாடேல், 'அறிபு' என வருவதன்றிப் பிறிதாறில்லை யாதலை அவர் உணராதிருந்தும், அறிந்தார்போற் சில எழுதித் தம் அறிவின்மை காட்டினர். 'நீதிக் கதைகள்' என்னுஞ் சுவடியில் பக்கத்திற்கொரு 'நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமும்' வண்ணம்பட வந்தன. 'துயுமத்சேனன் என்பான் செங்கோலாகவும் அரசாண்டு வந்தான்' என அதில் வாத தொடரானே ஆக்கியோரது தமிழ்ப்பயிற்சி நன்கு விளங்குகின்றது. இன்னும் இதுபோல்வன பிழைகள் கணக்கிற் கட்டுரைக்க லாகாதன. 'எலீஸா' என்னும் சுவடியில் 'தேவை' 'தயார்' முதலிய திசைச் சொற்கள் பல வந்து நீதுறுத்தி நிற்பது ஒரு பாலாகப் பிறிதொருபால் 'அடங்கி' தவிழ்ந்து' 'தான் இருந்தார்' என்பன போன்ற பிழைகள் நின்று அருவருப்பைப் பயக்கின்றன. எழுவாய் பயனிலை முடிபு முதலிய அறியாது எழுதப்பட்ட சுவடிகளும் பல. இவற்றை ஆக்கியோருட் பலரும் ஆசிரியராகவு மிருந்து வருகின்றது நோக்கத், தமிழின் பிற்கால வாழ்வும் பிழைபட நிற்குமென ஐயுறுதார் யார்?

சில சுவடிகளில் அச்சுப்பிழைகள் பல்குகின்றன. எத்துணைக்குப் பிழையறப்பினும் பிழைகளைப் பரப்புவதில் நந்நாட்டு அச்சுயந்திர வேலையாளர் கைபோயவரேனும், நூலாசிரியர்கள் நன்கு கருத்து ஊன்றின், பிழைகளைப் பெரும்பாலும் நீக்கல்கூடும். மேனாட்டார் வெளியிடும் நூல்களில் பிழைகள் எத்துணைக்கு அருகியுள்ளன? அதுபோலவே இந்நாட்டு வேலையாளரும் முயலின், நூல்களில் வரும் அச்சுப்பிழைகளை ஒழித்தல் இயலும். ஆக்கியோரும் வெளியிடுவோரும் இதன்கண் நன்கு கருத்துறல் வேண்டும். தமிழ்மொழியை யோம்பவந்த இக்காலத்து மதுரைத்தமிழ்ச் சங்கத்தார் வெளியிடும் நூல்களில் காணப்படும் அச்சுப்பிழைகள் போலப் பிறிது எந்நூலினும்

பிழைகள் காணப்படா என்பது பலரும் உணர்ந்த உண்மை. குருடரும் அத்தகைய பிழைகளை எழுதாரென்னலாம். தமிழ்ச்சங்கத்தார் தமிழ்த் தகைமை தயங்குகின்றது, நன்கு!

கடிது வருந்திக் கற்ற புலவரெல்லாம் பேணப்படுகின்றிலர். நாடக மேடையில் நின்று வழுமலிந்த விழுமந் தொடர்களைப் பிதற்றும் பீடுடையர் ஏடுடையர் ஆயினர்; ஆசிரியராயினர்: புலவராயினர். தம் பெயரேனும் அவர்க்கு வழுவற வரைதலாற்றா தாகவும், வெளியீடுகளில் 'இலக்கிய வித்துவான்' 'முத்தமிழ் வித்வசிரோமணி' முதலிய 'பட்டங்கள்' அவர்க்கு அளிக்கப்படுகின்றன. தமிழறியாத் தமிழரிடை என்செயினும், கேட்பார் யார்? சில இயக்கங்களிற் சேர்ந்து சிலர் 'இதுவே செவ்வி' என நினைந்து, நாவலரும் பாவலருமாய் விடுகின்றனர். இவர் தாம் எவர் தம் ஏவலரோ? இவ்வழி தகைமையை ஆய்தற்கு ஈண்டுக் காவலரு மிலர். அன்றோ! இவரெல்லாம் நாவலரும் பாவலரும் எய்தற் பாலார்! மேலும், சிலர் விற்கோல் பயின்ற கையையன்றி எதுகையையும், தாளாவிற்று பாணையையன்றி மோனையையும் கெட்டும் பாணையன்றி முரணையும் அறியாராய் இயைபும் அளபுமின்றி வாய் வந்த பாடுநராயிருந்தும், 'புலவர்' எனப் பேச நிற்கின்றனர். கூலவாணிகன் சாத்தனார், பிள்ளைப்பாண்டியன், வில்லி, ஒட்டக்கூத்தன் முதலியோருடைய இன்றியமையாமை இக்காலத்துப் போலும் நன்கு அறியப்படுவது!

இன்னணம் நாவலர், பாவலர், புலவர், முத்தமிழ் வித்துவான்கள் முதலிய அரும் பட்டதாரிகள் மலிந்து கிடக்கும் தமிழ்நாட்டில், தமிழர் ஒரு கடிதமேனும் செவ்வனம் எழுதலாற்றாராய் அலமருகின்றனர். 'ல' கர, 'ள' கரங்கட்கும் 'ழ' கர, 'ள'கரங்கட்கும் வேற்றுமை தெரியாது பிதற்றுகின்றாரும் பலர் புலவர். தமிழ்ச்சிறப் பெழுத்தாய 'ழ'கரம் புலவர் வாயிலும் நன்கு நுழையாதேல், 'சிறப்புடைத் தமிழரேம்' எனக் கூறி இறுமாப்பதில் என்னை பெருந்தகைமை உளது?

தமிழர் சிலர் தம் மக்களைத் தாய்மொழியைக் கற்கவிடாது மலையாளம் தெலுங்கு முதலிய மொழிகளைக் கற்பிக்கின்றனர். திருவாங்கூரிலுள்ள தமிழர் பலரும் தம் மக்களை மலையாளம் பயிற்றுவித்து நாணிலிகளா யலைகின்றனர். பார்ப்பனர் தம் தாய்மொழி தமிழாக வந்துழியும் மலையாளம் கற்பதிலும் கற்பிப்பதிலும் விருப்புடையா யிருக்கின்றனர். எனவே, வேத, மொழியையும் தாய்மொழியையும் அவர் கைவிட்டுச் சுழல்கின்றனர். சென்னை முதலிய இடங்களில் வாழுந் தமிழர் சிலர் தம் மகாரைத் தெலுங்கு கற்பிக்கின்றனராம்! புதுவதில் விருப்பம் பிறப்பது இயல்பேயன்றோ? தமிழருடைய உதிரம் ஊறப்பெற்ற யாக்கையினை யுடையராயிருந்தும் தமிழ்மொழியாகிய நீர்வருஞ் செழுஞ் செல்வத்தைப் பெற்றிருந்தும், இவர் கரும்பைச் சுவையாது வேம்பைச் சுவைக்க முயல்வது என் பயன் கருதிக்கொல்? இவரோ தமிழ்க் கோடரிக் காம்பெனத் தக்கார்.

இவர்க்கு ஏன் தமிழரசு? ஏன் தமிழ்க்கலாசாலை? ஏன் தமிழ்நாடு? ஏன் இவர் தமிழ் மக்களாயினர்? மலையாளர் தெலுங்கர்களுடைய வெண்ணீரிற் கலந்து அவர் வகுப்புப் பெண்களிடைப் பிறவாததொன்றே இவர்க்கு உளதாய வருத்தம்போலும்!

பொழுது போக்கு

(ரேவதி எழுதியது.)

எனது பிரிய அலமு,

"பொழுது போக்குவது" என்பது பற்றி எப்படி வேணுமானாலும் யோசனை சொல்லலாம். ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விதமான அபிப்பிராய பேதங்கள் எந்தக் காரியங்களிலும் உண்டாவது சகஜம். அது போலவே பொழுது போக்குவது என்பதற்கும் உண்டாகும் அல்லவா? பலர் பலவிதமான விளையாட்டுகள் விளையாடுவதைப் பழக்கமாகக் கொள்ளுகிறார்கள். நீ பிரயோஜனப் படும்படியாக காலங்கழிக்க விரும்புகிறாய்; ஆம். புருஷர்கள் வெளியில் போனபிறகு, அல்லது, சாப்பாட்டு வேலை தீர்ந்தபிறகு நமக்கு எவ்வளவோ காலம் இருக்கிறது. சாயந்திரம் நான்குமணி வரையில் சகஜமாக நமக்கு ஒழிவு நேரந்தான்.

உனக்குப் பிரியமானால், செஸ், கேரம், பிரிட்ஜ் முதலிய விளையாட்டுகள் விளையாடிக் காலங் கழிக்கலாம். அதுதான் நவநாகரீகமாக இப்பொழுது கருதப்படுகிறது. மற்ற விளையாட்டுகளை கர்நாடகமென்று சொல்லி பகிஷ்கரித்து விடுகிறார்கள். சதுரங்கம் பண்டைய நாட்களில் அரசர்கள் கூட விளையாடின ஒரு விளையாட்டா யிருந்து வந்தது. இப்பொழுது அதற்கு "செஸ்" என்று ஆங்கிலப்பெயர் அளித்து அதை நவநாகரீக முறையில் சேர்த்துக் கொண்டார்கள். ஆங்கிலப்பெயரில் தான் இப்பொழுது மதிப்பு அதிகமல்லவா? உதாரணமாக வண்டியோட்டுபவன், அல்லது வண்டிக்காரன் என்றால் சற்று கௌரவம் குறைவுதான். டிரைவர் என்றால் கௌரவம் வேறு தானே!

நேற்றையதினம் லேடி சாமிநாதையா வீட்டிற்குப் போயிருந்தேன். அவ்விடத்தில் மிஸ் சாமிநாதையாவும் லேடி சாமிநாதையாவும் 'கேரம்' விளையாடிக்கொண் டிருந்தார்கள். லேடி சாமிநாதையாவுக்கு கேரம் விளையாடுவதில் ரொம்ப பைத்தியம் உண்டு. ஆனால் ஒரு நாள்கூட பாவம் அவள் ஜயிப்பதே கிடையாது. சர். சாமிநாதையாவின் சிறியமகள் உன்னைப்போல எந்த விளையாட்டையும் அதிகமாய் விரும்புவதே கிடையாது. எப்பொழுது பார்த்தாலும், படிப்பதும் தைப்பதும்தான் அவளுக்கு வேலை. பாலா, தான் சமத்து. அவர்கள் வீட்டில் மற்றவர்கள் தைப்பதைக் காட்டிலும் இவள் தைப்பது ரொம்ப அழகாயும் சுத்தமாயும் இருக்கும். கவர்ன்மெண்ட் பரீக்ஷையில் (தையல் வேலைகளில்) முதல்வகுப்பில் தேறி இருக்கிறாள். ரொம்ப கெட்டிக்காரி. நான் போனபொழுது மேஜையில் விரிப்பதற்காக ஒரு வெள்ளைத் துணியில் வெகு அழகாக தைத்துக் கொண்டிருந்தாள். நீ தைப்பதாயிருந்தால் எழுது. உனக்கு அதற்கு வேண்டிய சாமான்களெல்லாம் வாங்கி அனுப்புவது மல்லாமல் தைக்கும் முறையும் எழுதுகிறேன்.

வீண்பொழுது போக்காமல் இருப்பதற்குத் தையலைப்போன்ற வேலை தான் மிகவும் மேன்மையானது. தையல்வேலை அதிகமாகச் செய்வதால், பொறுமை, விடாமுயற்சி, சுறுசுறுப்பு, புத்திக்கூர்மை முதலிய குணங்கள் உண்டாகின்றன. ஒழுங்கு, சுத்தம், சிக்கனம் முதலிய குணங்கள் உண்டாவதற்கும் ஏதுவாகிறது. கூடுமான வரையில் உனக்கு வேண்டியவைகளை நீயே தைத்துக் கொள்ளுவதுதான் மிகவும் சிறந்தது. பணம் மீதியாவது மல்லாமல் நம்மிஷ்டம்போல் தைத்துக் கொள்ளலாம். துணிகளும் பாழ் ஆகாது. பாலாவுக்கு ஷர்ட் முதலானதும் தைத்து தனது அண்ணாவுக்குக் கொடுக்க வேண்டுமென்று ஆசை. அவன் அவளிடம் தனதுத் துணியைக் கொடுக்கவே மாட்டான்.

நேற்றையதினம் அவள் ஓர் வேடிக்கை பண்ணி விட்டாள். தானே துணி எடுத்து அவன் அளவுக்கு ஒரு ஷர்ட் வெகு அழகாக தைத்து வேறொரு ஷர்ட்டிலிருந்த "முத்திரைத்துணி" அதாவது தையல் கம்பெனியின் பெயர் தெரிவதற்காக ஒரு சிறு துண்டு துணியில் அவர்கள் பேர் தைத்து ஷர்ட்டில் தையற்காரன் தைத்த மாதிரியே வைத்து அவன் அண்ணா காலேஜில் இருந்து வந்ததும் காண்பித்தாள். அவன் இது ஏது என்றான். அப்பா கம்பெனியில் தைப்பதற்காக கொடுத்திருந்தார். அதில் ஒன்று தைத்து அனுப்பி இருக்கிறான். சரியாயிருக்கிறதா பார் என்று வெகு சாதாரணமாய்க் கூறினாள்.

"பார்த்தாயா! கம்பெனி வேலை எப்படி இருக்கிறது? நீ தைக்கிறேன். தைக்கிறேன் என்று குதிக்கிறாயே; இப்படித் தைக்க உன்னால் முடியுமா?" என்று அவளைப் புரளி செய்தான்.

உடனே நாங்கள் எல்லோரும் கொல்லென்று சிரித்து விட்டோம். அவன் பேந்த பேந்த விழித்து ஒருவாறு விஷய மறிந்துக் கொண்டு, எண்டியம்மா சமத்து! அப்பொழுதே நினைத்தேன் இது கம்பெனிவேலை யல்லவென்று அது சரியாய் விட்டது என்று அவனும் சிரித்துக் கொண்டே கூறி மழுப்பி விட்டான்.

அசலகத்துக் காரியம் என்றாலே அவர்களுக்கு ஒரு மாதிரிதான். சொந்தக்காரியம் என்றால் ஒரு மாதிரிதான். பக்ஷணம் முதற்கொண்டு பட்டாசு கட்டுவரையில் அந்நிய நாட்டிலிருந்து வந்தால்தானே நமக்கும் திருப்தி? மற்றவை அடுத்த கடிதத்தில்.

ஔவையார்

(ஸ்ரீமதி. பண்டிதை-அசலாம்பிகை அம்மையார்.)

இனி கொள்ளை விரும்பேல் என்பது. இது வெளிப்படையாகப் பிறருடைய பொருள்களை அவர்களை யறியாமற் கவர்வது; தனிமைப்பட்ட இடத்து வலிமையினால் அறிந்தும் கவர்வது என இரு வகைப்படும். கொள்ளைகளையும் குறிப்பதென்பது வெளிப்படை. இவைகளைச் செய்யாதே என்று விலக்காமல் விரும்பாதே என்று அறிவுறுத்தினர் அன்னையார். ஏன்? மாணாக்கர்கள் பொருட்டேதான் நீதி வகுத்தாராதலின் அவர்கள் பருவத்திற் கேற்பக் கொள்ளையைச் செய்யமுடியாது. விருப்பமே கொள்ளலாம். அத்தகைய விருப்பம் இளமையிலேயே இளைஞர் உள்ளத்தில் அரும்புவது தகாதென்று தடுக்கின்றார். இளமை விருப்பம் யுவாவிற் செய்கையாகப் பரிணமித்தல் இயல் பென்பது எவரும் அறிந்ததோ. கொள்ளையின் முடிவு கொலையே என்பதும் அக்கொலையினும் கொடிய குற்றம் வேறொன்றில்லையென்பதும் தெரிந்ததே. எனவே மிகப் பயங்கரமான செய்கை பிறர் உடமையைத் தமதாக்கிக் கொள்ள விரையும் கொள்ளை விருப்பமேயாகும். இவ்விருப்பத்தை அவரவர்கள் திறமைக்குத் தக்கபடி வெவ்வேறுவகை வழிகளால் தந்திரமாக உருவம் கொடுத்து அவ்வுபாயங்களால் பூர்த்தி செய்து கொள்ளுகின்றனர். இவ்வினத்துச் சதிகாரர்களைவிடக் கொள்ளையொன்றையே நேர்முகமாகச் செய்பவர் சிறந்தவர்களே எனவும் கூறலாம். மேலே வெவ்வேறு வழிகளால் பிறர் உடமைகளைக் கவரத் தந்திரம் செய்வதென்று குறிப்பிட்டது தற்கால நீதிஸ்தல விவகார விஷயங்களை உணர்ந்தவர்களுக்கு விளக்கவேண்டியதில்லை. அத்துறையில் மனதைச் செலுத்தி ஈடுபட்டவர்கள் பிறருக்கு எவ்வித குரூரமான கொடுமைகளைச் செய்யவும் தயங்கமுடியாது, தனக்கேற்படக் கூடிய எத்தகைய ஆபத்துகளுக்கும் அவமானங்களுக்கும் சர்வசித்தமா யிருக்கவும் வேண்டும் என்பது வெளிப்படை. இவர் செயலை ஆதரிக்க வருவாரும் இரார். இத்தகைய கொடிய செயலை மனதாலும் எண்ணக் கூடா தென்பதே செம்மைநெறி தலைப்படுவோர் மேற்கொள்ளும் விரதம்.

இனி கொள்ளை என்பதில் அபரிக்கிரகம் என்னும் விசேடக் கொள்கையும் அடங்கும் என்பது வடமொழிக் கலைஞர் துணிபு. அபரிக்கிரகம் என்பது ஒருவர் தன் தேவைக்கதிகமாகிய வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளுவது. அல்லது பிறருக்குப் பயன்படக்கூடிய உபயோகத்திற்கு உதவாதபடி தனது தேவைக்கதிகமான வசதிகளைப் பெருக்கிக் கொள்வது என்றும் பொருள்

கொள்ளலாம். பெருவிருப்பத்தினாலும் பிறர் நிலை கருதி இரக்கம் காட்டமுடியாத சுயநலத்தாலும் இது முகிழ்ப்பதாதலினால் இதையும் கொள்ளையின் ஒரு பகுதியாகக் கொண்டனர் அறிஞர் என்க.

மகாத்மா காந்தியடிகள் தென் ஆபிரிக்கா "போனிக்ஸ்" என்னும் பெயருள்ள இடத்தில் ஸ்தாபனம் செய்த ஒழுக்கப் பயிற்சிக் கலாசாலையில் இந்த அபரிக்கிரகம் என்பதைக் கட்டாய விதிகளில் ஒன்றாக ஏற்படுத்தியுள்ளார். இதனை காந்திபுராணம் முதற்காண்டம் 40-வது பக்கத்தில் காணப்படும்.

கள்ளாவிரதம் என்பதன் கீழ்வரும்

"களவெனப்படுவது பிறர்பொருள் கவரும்
தன்மை யன்றிவர் பால் தமக்கதி முக்கியம்
இன்மையாம் பொருள்களை இச்சி யாதொழிதல்"

எனவும் அபரிக்கிரகம்

"எத்துணை வாழ்க்கைக் கின்றியே அமையா
தத்துணை வசதியே ஆர்ந்திடல் என்பார்"

எனவும் வரும் பகுதிகளாலும் இனிது விளங்கும். தவிர அப்பெரியார் ஏழ்மையான தாய் தந்தையர்க்குச் சந்ததிகள் தோன்றி உணவிற்காக வருந்தி இடர்ப்படும் உதாரணங்களைக் கண்டே செல்வர்கள் சந்ததிகளை விர்த்தி செய்தும் (ஜனத்தொகையைப் பெருக்குவது) பின்னும் எளியவர்களுக்கு இடர் செய்வதாகும் என்று எண்ணியே தமது மனைவியைத் தாயென மதித்துப் புலனடக்கத்தை உறுதியான விரதமாக மேற்கொண்டதாக அவருடைய வாழ்க்கைக் குறிப்பில் வரைந்துமிருக்கிறார். இதனால் வாசகர்கள் பண்டைக்காலத்தில் நீதி வகுத்த அறவோர் காட்டிய வழி எத்தகைய தென்பதை நன்குணரலாம். காந்தியடிகள் இக்கொள்கையை ருஷிய ஞானியாகிய டால்ஸ்டாய் என்பவரிடமிருந்து உட்கொண்டு ஒழுகினர் எனினும் நமது பண்டை இதிஹாசங்களிலும் விதி நூல்களிலும் அபரிக்கிரகம் என்பது நன்கு வற்புறுத்தப்பட்டுள்ளது. ஆதலின் ஈண்டு ஔவையார் அபரிக்கிரகம் என்பதையும் உள்ளடக்கியே கொள்ளை விரும்பேல் என்று கூறியதாகக் கொள்ளுவது சிறப்பாகும். இனி "கோதாட்டொழி" என்னும் நீதியேயாகும். நீ ஒருபோதும் குற்றந்தரும் விளையாட்டுகளை ஆடாதே என்று அறிவுறுத்தியதாகும். சரீர அப்பியாஸத்திற்கு வேண்டிய விளையாட்டுகளைத் தவிர அபாயத்தை விளைவிக்கும் எந்தவிதமான விளையாட்டுகளும் தீமையேயாகும். நீரில் நீந்துவதில் சரியான தேர்ச்சியில்லாத சிறுவர் பலரும் அதில் தேர்ச்சியுள்ள சிறுவர்களுடன் நீந்தத் துணிந்து அதில் மூழ்கி இறத்தலை அடிக்கடி கேட்கிறோம். புற்றினுள் கைவிடுதல், உயரிய மரக்கிளைகளில் கயிற்றினால் ஊசல் அமைத்து அதில் ஏறியிருந்து வீசியாடிக் குப்புற்று விழுந்து குடல் அறுந்து மாய்வதும் கண்கூடானவைகள். வெடி மருந்துகள் அமைத்த பாண வகைகளை மிகவும் கையாடிப் பலவித கோர விபத்துக்களை யடைவது, புகைவண்டிகளில் ஓரங்களிலிருந்து எட்டிப் பார்ப்பது மின்சார விசைகளில் கைகளை வைத்து விளையாடுவது தற்கால நவீன யந்திரசாதனங்களில் துணிந்து இடைப்படுவது முதலிய பல விதங்களிலும் ஆபத்துக்கள் நிரம்ப உண்டு.

இவைகள் சிறுவர்களுக்குப் பெரும்பாலும் பொருந்துவதாகும். கோதாட்டொழி என்பதை வயதில் முதியோர்களுக்கும் உணர்த்தியதாகத் தற்கால நிலையில் கொள்ளவேண்டியதற் கிடமுண்டு. பண்டைக்காலத்தில் சூது, சொக்கட்டான், சதுரங்கம் என்பவைகளே இருந்ததாக அறிகிறோம். மஹாபாரதமே சூதாட்டத்திலிருந்து விரிந்ததாகும் எனக் கொள்வது மிகையாகாது. நள உபாக்கியானத்திற்கு வித்தும் அதுவே. வேறு எவ்வகையிலும் கெடுக்கமுடியாத தரும சீலர்களையும் சூதாட்டம் நன்றாகக் கெடுத்தழிக்கும் என்பதற்கு உதாரணமாகவே இக்கதைகளை வியாஸபகவான் வரைந்தார் எனக் கொள்ளுவது மிகமிகச் சிறப்புடைத்தாகும். தற்காலத்தில் காகித விளையாட்டென்பது பல ஆண்டுகளாகத் தோன்றி நாகரிக கனவான்களையும் தனது ஆளுகைக்குக் கீழ்ப்படுத்திவிட்டது என்பதையும் அதில் பணப்பந்தயம் வைத்தாடுவதென்னும் முறையையும் அதன் பயனாக விளைந்து வரும் அவமானம், குரோதம், நஷ்டம் முதலியவைகளையும் அவ்வினை வல்லவர்களே யறிவர். பிறர் விவரிக்கவும் முடியாது. இவைகள் அனைத்திற்கும் மேம்பட்டதாக பல்லாயிரக்கணக்கான மக்களைச் சூறையாடிவருவது குதிரைப் பந்தயமென்பது கூறாமலே விளங்கும். ஔவையார் காலத்தில் இந்த படுமோசப் பந்தய ஆட்ட ஸ்தாபனம் இருந்ததா என்று சிலர் கேட்கலாம். இல்லாவிட்டாலும் குற்றமான பயனைத் தரும் எந்த ஆட்டங்களையும் ஒழிக்கும்படி அருளினர் பெருமாட்டியார். அக்குறிப்பில் முதற்பரிசு பெற யோக்கியதையுடையது குதிரை ஓட்டப் பந்தயந்தான் என்பதை இராஜப்பிரதிநிதியுள்பட இந்தியாமந்திரியும் அங்கீகரிப்பார் என்பது சட்ட நிபுணர்கள் சொல்லாமலே தெரிந்த தகராறு அற்ற உண்மை. இதுவன்றி தென்னாட்டில் சேவற் சண்டை என்று ஒரு விழா நடத்திக் களிக்கின்றனர். அவ்வித விளையாட்டு நடத்தப்படும் கிராமச் சார்பான தோப்புகளில் இரத்தஞ் சிந்தியும் காலறுந்தும் மூக்கறுந்தும் கண்சிதறியும் குடல் வெளிவந்தும் விலா முறிந்தும் தோற்ற சேவல்களின் கூட்டங்கள் சிதறுண்டு துடிக்கும் கொடிய காட்சி வருணிக்கக்கூடியதன்று. பாரதப் போரில் அவயவமிழந்த (உடற்குறை) கவந்தங்கள் வினையுலக்காமையால் மக்களாய் வந்து பிறந்து இவ் வாயில்லாத ஏழைப் பறவைகளின் மூலம் தமது கோரணியை வெளிப்படுத்துகின்றனவோ! எனவும் நினைக்க நேரிடும்.

இதைத் தவிர தென்மேற்கேயுள்ள சில பெரிய நகரங்களில் ஜல்லிக்கட்டு என எருதுமாடுகளைக் கொழுக்க வளர்த்து சண்டைக்குப் பழக்கி அவைகளை முட்டவிட்டுத் தம் தம் வீரங்களை நிலைநிறுத்திக்கொள்வதென்பது பின்னும் கொடுமையான ஆட்டமாகும். கம்பன் பிறந்த கலைநாடு இத்தகைய கோதாட்டங்களில் தலைப்படாமல் இருக்க வேண்டியே பெரியார் முன்னதாகவே அறிவூட்டி வைத்தார். அதன்படி ஒழுகுவார் மிகச்சிலரேயாகி வருவது வருந்தத் தக்கதன்றோ? நம் பெருமாட்டியார் இம்மட்டோடு நகரவருக்கத்தை முடிவு செய்து அதற்கடுத்ததாகிய சகர வருக்கத்தைத் தொடங்கி அதில் "சக்கர நெறி நில்" என்று அருளிச்செய்துள்ளார்.

இது "அரசனுடைய ஆஞ்ஞையாகிய சக்கரத்தின் வழியிலே நீ அடங்கி நில்" எனப் பணித்ததாயிற்று. ஆஞ்ஞை என்பது ஆணை எனப் பொருள்படும். அவ்வாணை எதனாலும் தடைப்படாது சென்றுகொண்டிருக்கவேண்டுமாதலினால் உருண்டுகொண்டிருக்கத்தக்க மண்டலமாக இயற்றப்பட்ட சக்

கரமாக வருணிக்கப்படுவது மரபு. ஆதிகாலந் தொட்டே நாணய வடிவுகள் சக்கரமாக அமைக்கப்பட்ட குறிப்பும் மேலே கண்ட கருத்தையேகொண்டதாகும். அங்ஙனம் தடைப்படாத அரசனுடைய ஆணையை எதிர்த்துத் தடுப்பது மக்கள் வாழ்வைப் பாழ்பண்ணுவது திண்ணம் என்பது எவரும் உணர்ந்ததே. அரசனை எதிர்த்து உயர்ந்தவர் எவர்? அரசு அன்றுகொல்லும் தெய்வம் நின்று கொல்லும் எனத் தமிழில் ஒரு பழமொழி தொன்மையாகவே வழங்கி வருகிறது. அரசர் ஆணையினாற் றண்டம் பெறுவோருக்குப் பின்னர் கடவுள் தண்டனை இராது என்பதும், அறநூற் கருத்து. எனவே அரசர் கடவுளின் கட்டளையை ஆற்றும் பிரதிநிதிகள் என்றும் போற்றப்படுவர். இக்கருத்தை யுள்ளிட்டே திருமாலின் அமிசம் பெறாதவர் அரசராகும் தன்மையை யடையார் என்பர் அறிஞர் பலரும்

ஆதிகாலங்களில் அரசர் ஆணைக்குக் கீழ்ப்படிதல் அவசியம் என்பது தலைக்கடனாக அவ்வரச குமாரனாலும் கொள்ளப்பட்டு வந்தது. இதற்கு இராம சரிதமே சான்றாகும். அரசர் ஆணை சில சமயம் தவறாகவும் இருக்கலாம். ஆயினும் அதை மீறும் உரிமை அவர் சொந்தப் புதல்வனுக்கும் இருந்ததில்லை என்பதும் இராமாயணத்தாலேயே நன்கு உணரப்படுகின்றது.

தசரதர் கட்டளை நீதிக்கு முரண்பட்டதே என்பது அவ்வித ஆணை பிறப்பிக்குமாறு வரம் பெற்றவளாகிய கைகேயே அறிந்திருந்தாள். அதையுட்கொண்டே உனது தந்தை வனம் புகப் பணித்தார் என்று கூறாமல்

"ஆழிசூழ் உலகமெல்லாம் பரதனே யாள நீ போய்த்
தாழிரும் சடைகள் தாங்கித் தாங்கரும் தவமேற்கொண்டு
பூமி வெங்கான நண்ணிப் புண்ணியத் துறைகளாடி
எழிரண்டாண்டின்வா வென்றியம்பினன் அரசன் என்றாள்"

என அரசன் கட்டளை என மீறாதவகையில் கூறியதாகக் கம்பர் குறித்துள்ளார். அச்சொல்லின் குறிப்பைக் குணக்கடலாகிய இராமனும் உணர்ந்தேதான் மன்னவன் ஆணை மறுக்கமுடியாதென எண்ணித் தேவரீர் கூறியதாக எண்ணுகின்றேன். அது என் விஷயத்தில் வேண்டுவதன்று. தந்தையின் ஆணையாயினும் மீறாமல் கீழ்ப்படிவேன். அத் தந்தைக்குரிய தாயின் கட்டளையாயினும் கீழ்ப்படிவேன். அத் தாய்க்குச் சமமான மாற்றாந் தாயாகிய உமது கட்டளையாலும் மீறாமல் அடங்கி அவ்வண்ணமே ஒழுகுவேன்—எங்கே மீறிவிடுவேனோ என்கிற பயத்தால் மன்னன் பணி எனக் கூறவேண்டாம் என நயமாகவும் உளத்திற் றைக்கும்படியும் சாதுரியமாக விடைபகர்ந்துள்ளார். அதில் தந்தை என்கிற முறைமையில் தசாதரும் தாய் முறையிற் கவுசலையும் பணித்தாலும் சுதந்தரம் பற்றி மீறமாட்டேன் என்பது காணப்படா விடினும் அக் கருத்து தொக்கியே நிற்கிறது. இவ்வுதாரணத்தினால் அரசர் ஆணைக்கு இணங்கி நடத்தல் பண்டைக்காலத்திலும் மிகக் கண்டிப்பாக மேற்கொள்ளப்பட்ட தென்பது விளங்குவதால் ஒளவையார் சக்கர நெறிநில் என்று உறுதி தோன்றப் புகட்டினார். நட என்றாவது, விரும்பு என்றாவது கூறாமல் 'நில்" என்று பணித்தது நீ எக்காலத்திலும் மாறுபடாமல் நெறியில் நிற்றல்வேண்டு மென்பதை வற்புறுத்திக் கூறியதாயிற்று. வெளியுலக வாழ்வில் ஈடுபடுவோர் எவரும் வேந்தராணைக் கடங்கியே நிற்றல் வேண்டும். புகழ்பெற்ற குணக்கடலான தருமராஜருக்கு அவருடைய புரோ

கிதராகிய தௌமியர் அஞ்ஞாதவாஸம் செய்யப் புறப்படும் சமயத்தில் அரசர்களிடம் பிரஜைகள் நடந்துகொள்ள வேண்டிய நீதிகளையும் முறைகளையும் வெகு நுட்பமாகவும் விரிவாகவும் விவரித்ததாக வியாஸர் வகுத்துக் காட்டுகின்றார். அரசனுக்கு அப் பிரியமான எதையும் செய்யக் கூடாது. அரசனுக்கு எதிரில் இருக்கக்கூடாது. கேளாமல் பேசக்கூடாது. மரியாதையின்றித் தன் உவகையைக்கூட வெளிப்படும் குறிகளைக் காண்பித்தல் கூடாது. அரசரின் குற்றங்களை எவ்விடத்திலும் எவர்பாலும் தெரிந்திருந்தாலும் பேசக்கூடாது என்பது போன்ற பலப்பல உண்மைகளை அத்தியாயக் கணக்கில் வற்புறுத்திக் கூறப்பட்டிருக்கின்றது. எனவே ஒளவையாரின் சக்கரநெறிநில் என்னும் கட்டளை பாரதநாட்டுப் பண்டை வேதாகமபுராண இதிஹாஸ சாஸ்திரங்கள் அனைத்திற்கும் மூலகர்த்தாவெனக் கொள்ளப்படும் வேத வியாஸ பகவானாலேயே வற்புறுத்தப்பட்ட தொன்றென்பதை உணர்தல் வேண்டும்.

பிராட்டியாரும் இராவண வதத்திற்குப் பிறகு சுபச்செய்தி சொல்ல வந்த அனுமானை நோக்கி அடங்கா மகிழ்ச்சியினால் உனக்கு நான் பிரதிசெய்ய ஒன்றிருப்பதாக உணர்கிலேன் "தூத என்னிச் செய்திறம் சொல்" என்று வினவினார். அதற்கு மாருதி.

"திரிசடை, தனையொழித் திவ்வரக்கியர் தங்களை
வினையினிற்சுட வேண்டுவன்யான் என்றான்"

"உரையிலாவுரை உன்னை யுரைத்தாராய்
விரையவோடி விழுங்குவ மென்றனர்
வரைசெய் மேனியை வள்ளுகிராற்பிளக்
திரைசெய்வனே மறலிக்கினி யென்னுமால்"

என்று வன்கண்மை செய்த அரக்கியரைக் குரூரமாகக் கொல்லும்படி அநுமதிக்கும் வரம் அருளும்படி கோரினார்.

அதுகேட்ட பிராட்டியார் "மன்னன் மாருதி மாமுகநோக்கிவே, றென்னை நிமையிவர் இழைத்தார் அவன், சொன்ன சொல்வினதல்லது" எனச் சமாதானம் பகர்கின்றதாகக் கவியரசர் கட்டுரைக்கின்றார். தன்னை இரக்கம் என்னத் தனையுமின்றி இரவும் பகலும் இழிபடப்பேசிக் கலங்கச் செய்தார் எனினும் அச்செய்கை அவர்கள் சொந்தக் குணத்தாலன்று அவர்களுக்கு அரசனாயிருந்த (இராவணனாகிய) அவன் கட்டளையினாலேயே தொழிற்பட்டனர். ஆதலின் அவர்கள்மேல் குற்றம் இல்லையென்று அநுமானை ஆறுதல் செய்து அரக்கியர்களுக்கும் அபயம் அளிக்கின்றார். அரசர் ஆணைக்குக் கீழ்ப்படியும் கடமையை எவ்வளவு சிக்கலான இடங்களிலும் பெண்மை வாயிலானும் புலப்படுத்தியுள்ள தென்பது சிந்தையிற் கொள்ளத்தக்கது. இராமர் ஆணைகூறி மறுத்தால் மிருகங்களும் வாயிலெடுத்த இரையை உட்கொள்ளா; விஷஜெந்துக்களும் கொடிய மிருகங்களும் தடைப்பட்டுத் தன்செயலை நிறுத்திவிடும் என்று பலபட விவரிக்கப்பட் டிருக்கிறது என்றால் பகுத்தறிவுடைய மக்கள் அடங்கி நடப்பது ஓர் அருமையாகுமோ?

இவ்வண்ணம் கூறுவதால் அரசன் குடிகளை வருத்தலாமோ? என வினவெழலாம். அரசன் கடமைகளை விவரிக்க வேண்டியமுறை நேருங்கால்

அதைப்பற்றி ஆராய்தல் தகுதியாகும். நாம் எடுத்துக்கொண்ட சக்கர நெறி நில் என்னும் நீதித் தொடரின் கீழ் அரசன் கடமைகளை விரிப்பதற்கில்லை. அவ்விடத்தில் நம் சான்றோர் வகுத்துள்ள விதிகள் பலப்பலவுள.

"கொடுங்கோல் மன்னன் வாழுநாட்டிற்
கடும்புலிவாழும் காடு நன்றே"

எனும் முதுமொழி யொன்றே போதியதாகும். சிலர் சக்கர வடிவுள்ளதாக உவமிக்கும் ஆட்சியானது அறத்தாறு கடவாத செங்கோலுடைய உத்தமமான நல்லரசாட்சியையே குறிக்கும். பிரஜைகளின் நலத்தைக் கருதாமல் சுயநலத்தையே விரும்பும் கோணலான ஆட்சிக்குச் சக்கரத்தை உவமிக்கலாமா? எனக் கேட்கலாம். ஆட்சி கோணலாக விருப்பின் நீளநின்று நிலவாது விரைவில் வீழ்ச்சி பெறும்; இது அநுபவ உண்மை. நிற்கும் பரியந்தம் அரசராணை எவராலும் தடைப் படுத்த முடியாததாகவே காணப்படும்; ஆதலின் மக்கள் அதனை யெதிர்த்து மறித்தால் நாசமே அடைகுவர். எப்போதும் ஒருவர் குற்றத்தை மற்றொருவர் குற்றத்தினாலேயே அடக்கிவிடுவ தென்பது எக் காலத்திலும் இல்லை. அது கொள்ளிக் கட்டையினால் கொள்ளிக் கட்டையை அணைப்பதற்கே ஒப்பாகும். சாமானியமாக சமத்துவ நிலையில் உள்ள இருவர்கள் நிலையிலேயே இவ்வித எதிர்ப்புக் கைகூடாதெனில் அதிகார பலமுடைய அரசரின் எதிர்ப்பு எவ்வாறு நலம் பயக்கும்? ஔவையார் இது பற்றியே நல்லரசு புல்லரசு எனப் பாகுபாட்டுக்கு சந்தர்ப்பமே இல்லாமல் சக்கர நெறி நில் என்று பொதுப்படக் கூறினர். எனவே அவ் வரசு யாராயினும் அவர்தம் ஆணைக்கு அடங்கி நடத்தலே அறிவுடையோர் கடமை யென்றறிதல் வேண்டும்.

ஆனந்தபோதினி அச்சுக்கூடத்தில்

போஸ்ட் கார்டுகள் முதல் போஸ்டர்கள் வரை புஸ்தக வேலைகள் உள்பட எல்லாவித அச்சு வேலைகளும் சுத்தமாகவும், அழகாகவும், கால தாமதமின்றியும் செய்து கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மானேஜர்.

"ஆனந்தபோதினி" மதராஸ்.

தென்னிஷன் சித்திரம்
அல்லது
காதலின் வெற்றி

(பச்சையப்பன்.)

வெள்ளை நிறத்தாகும், முக்கியமாக ஆங்கிலேயர்களும், இந்தியரைப் போலவே மணவினைகளில் வித்தியாசங் காட்டுகின்றனர். ஜாதி குறுக்கிடா விட்டாலும் பணம் குறுக்கிடும். எடுத்துக்காட்டாக ஒரு பிரபு—பட்டக்காரன், ஒரு குறிப்பிட்ட சில பகுதிகளிடமிருந்து தான் பெண்களை எடுத்துக் கொள்வது என்ற ஒரு சம்பிரதாயத்தை வைத்துக் கொள்ளுகிறான். அதற்கும் கீழ் அவன் பெண்களைத் திருமணம் செய்துக் கொள்வதில்லை. இத் தடங்கல்கள் பல சமயங்களில் எடுத்தெறியப் படுகின்றன. ஆனால் அவை காதல் என்னும் கோடரியாலன்றி வேறெதுவாலும் முடியா தென்பது கண்கூடு. கீழ்க்கண்ட கதை காதலுக்கு, பணத்தாசை யில்லை. இயற்கை எழில் தான் முக்கியம் என்பதைச் செவ்வையாக எடுத்துக் காட்டுகிறது.

I

மாலை நேரம். நுகருதற் குகந்த நறுமலர் வாசனையை விடாமல் வீசிக் கொண்டிருந்தன. மேகங்கள் மந்த ஹாசத்துடன் மேலே படர்ந்து புதியதொரு வனப்பை அளித்தன. ரொனல்ட் தன் காதலிக்கு மல்லிகையினும் வெண்மை மான் ஒன்றை பரிசாகக் கொடுக்கக் கொணர்ந்திருந்தான். காதலர்கள் இன்பமாக உலவினார்கள். ஒன்றுக் கொன்று சம்பந்த மில்லாத பல விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தனர். அவ் விஷயங்கள் இருவருக்குந் தெவிட்டாத தெள்ளமுதமாக விருந்தன.

நாளைக் காலை அவர்கள் இருவருக்கும் திருமணம் நடைபெறவிருக்கிறது. திருமணத்தைப் பற்றியும், பின்னர் நடப்பவைகளைப் பற்றியும், எப்படி நடக்க வேண்டு மென்பதைப் பற்றியும் ஆன 'ஸ்கீம்'கள் தயாரித்துக் கொண்டிருந்தார்களோ என்னவோ. அவர்கள் அடிக்கடி பேசிச் சிரித்தார்கள். அதிலிருந்து இன்பகரமானவும் ஹாஸ்யகர மானவுமான விஷயங்களைப் பற்றிப் பேசுகிறார்கள் என்று தெரிந்தது.

ஒருவருக் கொருவர் காதலில் இளைத்தவர்கள் அல்லர். பிரியாது பிரிந்தனர்.

II

பெரு மிதமாக அலங்கரிக்கப் பட்ட அறை. குறுக்கும் நெடுக்குமாக, அழகிய மெல்லிய இடையாள் எழிலரசி கினேர் சிமோட்டி இங்கு மங்குமாக

வியாயாமம்

(V. சங்கரையர்.)

மனிதனுக்குத் தீர்க்காயுளும் அரோகதிடகாத்திரமும் வேண்டுமென்ற விருப்பமிருக்குமானால், அவன் தினமும் வியாயாமம் செய்யவேண்டியது அவசியம். சுத்தவாயு, நிர்மலமான ஜலம், சரியான உணவு, சூரிய வெளிச்சம் இவைகள் ஒருவனுக்கு எப்படி இன்றியமையாதவையோ, அப்படியேதான் வியாயாமமும். வியாயாமம், ஆண், பெண், வாலிபர், விருத்தர் ஆகிய யாவருக்கும் அவசியமாகும்.

குழந்தைகளெல்லாம் பொதுவாக 8 வயது வரையிலும் ஓடியாடி விளையாடுகின்றபடியால் அவர்களுக்கு வேறு தேகப்பயிற்சி அவசியமில்லை. மற்றவர்களுக்கு (1) ஜீரணக் கருவிகளாகிய இரைப்பை (Stomach) குடல் (Intestines) கல்லீரல் (Liver): மண்ணீரல் (Spleen) முதலியவைகளையும் (2) சுவாசக் கருவிகளாகிய சுவாசாசயம் (Lungs) இரத்தாசயம் (Heart) முதலியவைகளையும், (3) தசைநார் சம்பந்தமுள்ள (Muscles) மூளை (Brain) முதுகெலும்பு (Spinal cord) முதலியவைகளையும், சரிப்படுத்தக்கூடிய வியாயாமமே செய்தல் மிகவும் நல்லதாகும்.

இவ்வளவு தேகங்கங்களுக்கும் அனுகூலம் கொடுக்கக்கூடிய வியாயாமம் சூரிய நமஸ்காரம் ஒன்றே யாகும். காலை $7\frac{1}{2}$ மணிக்கு முன்னே சூரியனை நோக்கிச் செய்யும் ஸாஷ்டாங்க நமஸ்காரம் மிகவும் தேகாரோக்கியமானது. ஸ + அஷ்ட + அங்க + நமஸ்காரம், அதாவது எட்டு அங்கங்களை உபயோகித்துச் செய்யப்படும் நமஸ்காரமே ஸாஷ்டாங்க நமஸ்காரம். எட்டு அங்கங்கள் யாவை ?

"(1) உரஸா (2) சிரஸா (3 திருஷ்ட்யா

(4) வசஸா, (5) மனஸா, ததா

(6) பத்ப்யாம் (7) கராப்யாம் (8 ஜானுப்யாம், ப்ராணமோஷ்டாங்க உச்யதே"

(1) மார்பு (2) தலை (3) பார்வை (4) வார்த்தை (5) சித்தம் (6) கால்கள் (7) கைகள், (8) முழங்கால்கள் இவைகளே அஷ்டாங்கங்கள்.

பிள்ளைகளுக்கும், பெரியோருக்கும், அதிக சுறுசுறுப்பையும், தைரியத்தையும் கொடுக்கக்கூடிய சூரிய நமஸ்காரம் முதலிய வைதிக வியாயாமங்களை விடாமல் செய்து வரவேண்டும். நமது சாஸ்திரங்கள் பெரியோர்களைக் கண்டாலும், தேவாலயத்துக்குச் சென்றாலும், மாதா பிதா குரு இவர்களைத் தினமும் காலையும் மாலையும் ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்ய நம்மை ஆக்ஞாபிக்கின்றன. உடனே அவர்கள் நம்மை தீர்க்காயுஷ்மான்பவா' அதாவது சிரஞ்ஜீவியாய் வாழ்வாய்' என்று ஆசீர்வதிக்கிறார்கள். இதன் கருத்தென்ன ? ஸாஷ்

டாங்க நமஸ்காரத்துக்கும் சிரஞ்ஜீவியாக இருப்பதற்கும் சம்பந்தமிருக்கிறது என்று இதனால் நன்கு விளங்குகிறது. ஸாஷ்டாங்க நமஸ்காரந்தாம் நமது தேகத்திலிருக்கும் எட்டு அங்கங்களுக்கும் நாம் வியாயாமம் (தேகப்பயிற்சி) கொடுப்பதால் தேக ஆரோக்கியமும் தன்னிமித்தம் தீர்க்காயுளும் உண்டாகிறது என்பது உண்மையே.

பிராம்ஹமுகூர்த்தமான காலை சுமார் 4 மணிக்கே எழுந்து காலைக் கடன்களை முடித்துவிட்டு ஸ்னானம் செய்து உலர்ந்த வஸ்திரமணிந்து சூரிய உதயத்துக்கு முன்னடியே சூரிய நமஸ்காரம் செய்ய ஆரம்பிக்கவேண்டும். காலையில் $7\frac{1}{2}$ மணிக்குமுன் சூரியன் எதிரே நின்றுகொண்டு, சூரியனுடைய அல்ட்ரா வயலெட் (Altra violet) கிரணங்களை கிரகிக்குமாறு தினமும் தன் சக்திக்கு தக்கவாறு 35, 50 அல்லது 100 நமஸ்காரம் செய்தல் மிகவும் நலம்.

இது விஷயமாக ஆனந்தபோதினி மாத சஞ்சிகை தொகுதி 18-ல் பக்கம் 301 (4)லும், தொகுதி 19-ல் பக்கம் 580-லும், தொகுதி 19-ல் பக்கம் 580-லும், தொகுதி 20-ல் பக்கம் 673-லும் நான் எழுதியிருப்பதை அன்பர்கள் கண்ணுறுவார்களாக.

தற்கால நவநாகரிகர்கள் கிரந்தமான ஒரு வித வியாயாமமும், செய்யாமல் பலவித நவீன வியாதிகளுக்கு அடிமைப்பட்டு ஆங்கில வைத்தியர்களிடம் சென்று தங்களிடமிருக்கின்ற ஸ்ரீதேவியை ஒப்பித்துவிட்டு தென்திசைக்கதிபனை இளம்பிராயத்திலேயே போய்ச் சேருகிறார்கள்.

நமது பூர்வீகர்களோ, பிராணாயாமம்,(Vol 20.Page 917), சூரியநமஸ்காரம் முதலிய வியாயாமங்களால் தேகத்தைத் திடப்படுத்திக்கொண்டு, பச்சை மரக்கறிகளையும் (மிஷீனில் தீட்டப்படாமல்) கைக்குத்தரிசியை சமையல் செய்தும் உண்டு (Vol 18. Pages 300 to 302 and 387to 388) தங்கள் ஜீவிதகாலம் பூராவும் கஷ்டப்படாமல் சுகமாக ஸ்ரீமந்தராகவும் ஆயுஷ்மந்தராகவும் வசித்து வந்தார்கள்

நமஸ்காரவிதி.

நமஸ்காரம் செய்வதற்காக நிமிர்ந்து நிற்கும்பொழுது சரீரத்தை வளைக்காமல் உறுதியாக வைத்துக்கொள்ளவேண்டும். கிழக்கு நோக்கி நின்று நமஸ்காரம் செய்தல் உத்தமம்.

மார்புக்கு நேராக இரு உள்ளங் கைகளையும் ஒன்றோடொன்று பொருந்துமாறு குவித்து வைத்துக்கொண்டு முதலில் நிற்கவேண்டும். பிறகு இரு கைகளையும் மேலே உயர்த்தி உள்ளங்கைகளை ஒன்று சேர்த்து வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு குனிந்து முழங்கால்களை வளைக்காமல் உள்ளங்கைகளை தட்டையாகத் தரையின்மேல் வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு கால்களைப் பின்புறமாக நீட்டி கால் விரல்களின் மீதும் உள்ளங்கைகளின் மீது பலத்தை வைத்திருக்கவும். பிறகு கால்களையும் கைகளையும் அசைக்காமல் தலையை முன்னுக்குக்கொண்டுபோய் நெற்றியால் தரையைத் தொடவேண்டும். பிறகு முன்போல் தலையை பின்னுக்கிழுத்து, கால்களை முன்னுக்குக்கொண்டு வந்து குனிந்து நிற்கவேண்டும். பிறகு நிமிர்ந்து கைகளை மார்புக்கு நேராக கூப்பி நிற்கவேண்டும். இதுவே ஒரு நமஸ்காரமாகும். இதுபோல் 25, 50, அல்லது 100 நமஸ்காரங்கள் தினமும் செய்தல் மிகவும் நலம். நமஸ்காரம் செய்யும்பொழுது சில வார்த்தைகளை உச்சரித்தால் அவை சுவாசோச்சுவா

ஸத்தை சரிப்படுத்துகிறது. அவ்வார்த்தைகளாவன. ஓம் ஹ்ராம், ஹ்ரீம், ஹ்ரூம், ஹ்ரைம், ஹ்ரௌம், ஹ்ராஹ-இவைகளை ஒவ்வொரு நமஸ்காரம் செய்யும்பொழுது உச்சரித்தல் சுவாசாசயத்துக்கு நன்மையைக் கொடுக்கும்.

இவ்வியாயாமம் செய்யும் காலத்தில் ஒவ்வொரு நமஸ்காரத்தின்பொழுதும் ஒரு தடவை வீதம் பூரகம், கும்பகம், ரேசகம் (Vol 20. Page 917) செய்யவேண்டியது அவசியமாகும். இதனால் கழுத்து, ஹிருதயம், புஜங்களின் தசைநார்கள், சுவாசாசயம், அரை, இடுப்பு இவைகளிலுள்ள தசைநார்கள், தொடை, கணுக்கால், மண்ணீரல், கல்லீரல், விரல்கள், மணிக்கட்டு முதுகெலும்பு முதலிய நமது சரீரத்தின் சகல பாகத்துக்கும் சரியான பயிற்சி கிடைக்கிறது.

தீர்க்காயுள், ஆரோக்கியம், முதலியவைகளை இச்சிப்போர் தினமும் சூரிய நமஸ்காரம் செய்து வரவேண்டும். இதனால் நன்மையுண்டென்பதை அவரவர்கள் அனுபவத்தி லிருந்தே தெரிந்துகொள்ளமுடியும்.

இவ் வியாசத்தைப் படிக்கும் யாவரும் சூரிய நமஸ்காரம் செய்து, அபார சக்தி வாய்ந்த பிரத்யக்ஷ தெய்வமாகிய சூரியபகவானுடைய அருளால் ஆயுராரோக்ய ஐசுவரிய ஸத்ஸந்தானம் முதலியவைகளைப் பெற்று நாட்டில் உரிமையின்பமும், வீட்டில் உண்மை யின்பமும், உள்ளத்தில் மெய்யன்பும், ஆலயங்களில் உண்மை பக்தியும், தேசபக்தியும் உடையவர்களாகிச் சுகம் பெறும்படி இறைவன் அருள்புரிவாராக!

ஒரு சிறந்த நாவல் சஞ்சிகை

'மனமோகினி' என்னும் நமது இனிய நாவல் சஞ்சிகைக்கு இப்போது பிப்ரவரி முதல் பதின்மூன்ருவது ஆண்டு நடந்து வருகிறது. இதில் 'நாகபுரியின் நாகரிகம்' என்னும் புதிய நாவல் ஆரம்பிக்கப்பட்டு வெளியாகிவருகிறது. இந்நவீனகம் படிக்கப் படிக்கத் தெவிட்டாத அமுதமாகும். இதுவே ஆங்கில நாவலாசிரியராகிய ரெயினால்ட்ஸின் கடைசி கதையாகையால் மிக்க ருசிகரமாக இருக்கும். சுமார் நான்கு ரூபாய் விலையுள்ள நாவல் ஒரு வருஷத்தில் கிடைக்கும். பிரதி மாதமும் கிரௌன் 1-க்கு 16 சைசில் 80 பக்கங்கள் வெளியாகின்றன. இதன்,

வருஷ சந்தா ரூபா 2—8—0 தான்.
அன்னிய நாடுகளுக்கு ரூபா 3—0—0.
உடனே முன்பணம் அனுப்புங்கள்.

மானேஜர் :—'ஆனந்தபோதினி' ஆபீஸ்,
தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.

32. இங்கிலந்தில் கக்ஷியாட்சியின் ஆரம்பம்

(T. S. ராஜகோபாலன், B. A., L. T.)

தான் ஹாலந்தில் பிரான்ஸுடன் தொடர்ந்து நடத்திய போராட்டத்திற்கு உதவியாக இருக்க, அரசன் உரிமைகளையெல்லாம் அறவே துறக்கத் துணிந்து, இங்கிலந்து முடியை ஏற்றுக்கொண்ட மேரியின் புருஷன் வில்லியம் தனக்குக் பிரதானமான பணத்தை சுலபமாக பெறவேண்டி, தனக்கு ராஜகாரிய நிர்வாகங்களில் உதவி செய்யவும் யோசனை சொல்லவும், முந்திய அரசர்களைப்போல, தான் நினைத்தபடி மந்திரிகளை நியமித்துக் கொள்ளாமல், பார்லிமெண்டில் இருந்த விக், டோரி கக்ஷித் தலைவர்களையே மந்திரிகளாக்கிக்கொண்டான். ஏனெனில், தேசத்தில் கக்ஷி இரண்டு ஏற்பட்டிருந்ததையும், இரு கக்ஷியினரும் ஒருமிக்க ஜேம்ஸை வெறுத்ததையும், இருவரும் சேர்ந்தே தனக்கு பட்டங் கிடைக்க காரணமாயினர் என்பதையும் நன்கறிந்த வில்லியம் இருவர் மனமும் கோணமலிருக்கவும், இருவருடைய பூரண ஆதரவும் இருக்கவும் என்று நினைத்து அப்படிச் செய்தான். தவிரவும் அரசன் என்ற முறையில் செய்யக்கூடிய எந்தக் காரியமும் பார்லிமெண்டின் அனுமதியின்மேல் ஆகவேண்டும் என்பதும், விசேஷமாக சேனை வீரர்களோ, அவர்களுக்கான பணமோ வேண்டுமானல் கலகச் சட்டத்தின்படி அவசியம் பார்லிமெண்டின் தீர்மானம் வேண்டும் என்பதும் தெரிந்துகொண்டவன். மேலும் "புத்திவந்த பின் பெட்டிச் சாவியைப் பிள்ளை கையில் கொடுத்துவிடுவது" போல, தனக்கு ஆகவேண்டிய காரியங்களை மந்திரிகளிடம் சொல்லிவிட்டால், அவர்கள் தங்கள் முறையில் செல்வாக்குகளையுபயோகித்து வேண்டிய பணத்தைச் சேகரித்து விடுவார்கள் என்றும் நினைத்தான் அரசன் வில்லியம் III.

"தொடுக்கும் தெய்வம் கூரையைப் பொத்துக்கொண்டு கொடுக்கும்" என்பது பாமரர் பழமொழி! பல திட்டங்களால் அரசன் உரிமைகளை ஒன்றுமில்லாமல் ஆக்கிய ஜனங்களின் பிரதிநிதி சபையான பார்லிமெண்டுக்கு இதுவும் ஒரு அதிர்ஷ்டமாகும். தன் மந்திரிகளைத் தானே நியமித்துக்கொள்ளும் உரிமையையும் தன்னை யறியாமலே தன் பணத்திற்கு மட்டும் கவலை கொண்ட அரசன், பார்லிமெண்டாரிடம் ஒப்படைத்துவிட்டான். அது முதல் தேச நிர்வாகிகள், பார்லிமெண்ட் என்ற சட்டசபையில் செல்வாக்குள்ளவர்களிடையிலிருந்தே ஏற்படவேண்டும் என்று மாமூல் ஏற்பட்டுவிட்டது. அந்த மாமூலே பொறுப்பாட்சி நிலவும் இக்காலத்திய அரசியல் உலகத்தில்

சிறந்து விளங்குகின்றது. தான் நிர்வாகம் செய்யவேண்டிய பணத்தை பார்லிமெண்டின் அனுமதிமேலேயே பெறவேண்டும் என்ற பொறுப்பு மந்திரிகளுக்கு ஏற்பட்டுவிட்டது. இல்லாவிட்டால் நிர்வாகம் ஸ்தம்பித்து முட்டுக்கட்டையும், தடையும் ஏற்படுவது சகஜமேயன்றோ? ஆகவே மந்திரிகளை நியமித்துக்கொள்ளும் உரிமை அரசனைவிட்டு பார்லிமெண்டுக்கு வந்துவிட்டது.

அனுபவத்தில், டோரிக்கட்சியினருக்கு ஹாலந்து நன்மையை உத்தேசித்து செய்யப்பட்ட யுத்தச் செலவு விருப்பமில்லையென்று அரசன் தெரிந்துகொண்டபோது 1696ல் ஏற்பட்ட 3 வருஷச் சட்டத்திற்குப் பிறகு நடத்தப்பட்ட தேர்தலில், அரசன் தன் யுத்தங்களை ஆதரிக்கும் மனப்போக்குள்ள விக் கக்ஷியங்கத்தினர் பெரும்பாலானவர்களாக வரும்படி தன் செல்வாக்கை யுபயோகித்து, தேர்தல் நடந்துவிட்டது. அந்தச் சமயத்தில் பூராவும் விக் கக்ஷியினரே இருக்கும்படியாக தன் மந்திரி சபையை யமைத்துக்கொண்டான். அந்த சபையில் டோரி கக்ஷியினரே இல்லாதபடி பூராவும் விக் கக்ஷியங்கத்தினர்மட்டும் இருந்ததனுல் Junto ஜண்ட்டோ மந்திரிசபை என்று அதற்கு ஜனங்கள் பெயர் கொடுத்தார்களாம். இந்த சபையை வைத்துக்கொண்டு பிரான்ஸுடன் போர் நடத்துங் காலத்தில், நிர்வாகத்திலிருந்து நீக்கப்பட்ட டோரிக் கக்ஷியினர் "அந்த யுத்தம் அனுவசியம் என்பதையும், செலவு ஜனங்களின்மேல் அதிக வரிச்சுமையை ஏற்படுத்தும்" என்பதாக எதிர்ப் பிரசாரம் செய்யவும், அடுத்த பார்லிமெண்ட் தேர்தலில் 1690ல் டோரிக் கட்சியினர் பெரும்பான்மையினராக வெற்றியடைந்தபோது யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானமும் நடந்தேறியது என்பது சரித்திர பூர்வம்.

ஆனுல் அரசியல் முறையில் அபிப்பிராயப் பேதப்பட்டாலும் தேச நன்மைகள் விஷயத்தில் எல்லாரும் ஒரு மனப்பட்டு விடுவார்கள் என்பதற்குப் புரட்சி ஏற்பட்டதே ஒரு அத்தாட்சியாகும். மறு அத்தாட்சிதான் "1702-ல் செய்யப்பட்ட தீர்மானச் சட்டமாகும்" அதன்படி ஜேம்ஸின் சந்ததியார்கள் அறவே யொழிக்கப்பட்டனர் என்பதை வாசகர்கள் நினைவுறுத்திக்கொள்ளவேண்டும். டோரிகளும் யுத்தம் அவசியமானுல் பின்னடையமாட்டார்கள். விக் கட்சியினர் யுத்தத்தை ஆதரித்தார்கள் என்ற ஒரு குருட்டு நோக்கத்தையே கொண்டு, தொண்டையைக் கிழித்துக்கொண்டு யுத்தமே கூடாது என்று கூக்குரலிடுவது ஆங்கிலேயரிடம் கிடையாது. அதாவது "தான் சொல்லுவது நினைப்பதே சரி. எதிரி நினைப்பதில் என்னளவும் குணமில்லை. மாட்டுக்குக் கால்கள் நான்கு என்றாலும், எதிரி அதைச் சொல்லுவதால், நான் மூன்றே கால்தான் என்று சொல்லுவேன். அதைத்தான் சாதிப்பேன்" என்ற அபூர்வ மனேபாவம் அவர்களிடம் காணப்படுவதில்லை. அதையே ஆங்கிலேயரிடமுள்ள "ஒற்றுமையுணர்ச்சி" என்று எல்லாரும் வானமளாவப் பேசுகிறோம். நிற்க இந்த டோரிக் கட்சியினர் செல்வாக்கில் இருந்தபோதுதான் (702-ல் சில காரணங்களால் France க்கும் இங்கிலந்துக்கும் யுத்தம் நேரிட்டு) டோரிகளும் யுத்தத்தை நடத்த முன்வந்து நடத்தவும் செய்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. யுத்த விபரம் பின்வரும் சில தொடர்ச்சிகளில் எழுதப்படும்).

பொதுஸ்வபாவப்படி, டோரிக் கட்சியினர் யுத்தம் நடத்தும்போக்கில் கொஞ்சம் மெத்தனமாக உள்ளவர்கள். ஆகவே மேலே குறிப்பிட்ட 1702ம் வருஷத்திய யுத்தத்தை நிர்வகித்த மார்ள்ப்ரோ பிரபு என்ற சேனைத் தலைவர், ஆதியில் டோரிக் கக்ஷியினராகவே இருந்தவர், நாளடைவில் யுத்த விஷயங்களில் பரபரப்பில்லாத டோரிகளைக் கைவிட்டதுடன், படிப்படியாய் விக் செல்வாக்கு நிர்வாகஸ்தானங்களில் அதிகமாக்கி, முடிவில் விக் கக்ஷியினராகவே மாறிவிட்டார். தேர்தலிலும் விக் கக்ஷியினரே வெற்றிபெற நேர்ந்தது. ஆனுல் நிதானமின்றி, நிச்சயமாக வெற்றியடைந்தும், பிரான்ஸ் அரசன் ஓரளவு பணிய விரும்பியதும், நிறுத்தாமல் தன் கௌரவத்திலேயே கருத்துடன் இருந்த மார்ள்ப்ரோ, அதிகப்படியான செலவுகள் செய்து ஒரு மகத்தான வெற்றியை யடைந்தார் 1708-ல். ஆனுல் அந்த யுத்தத்தின் லாப நஷ்டக் கணக்கு பார்ப்பதுபோல் பலனைக் கவனித்தபோது, மார்ள்ப்ரோ சுயநலத் தன்மை வெளியாகிவிட்டது. அதைக் கண்ட டோரிக் கக்ஷியினர் மார்ள்ப்ரோவை கக்ஷித்துரோகி என்றும், தேசத்துரோகி என்றும், தேசத்தை அனுவசிய செலவில் இழுத்துவிட்டான் என்றும் பலவாறுகக் கூக்குரலிட்டு 1709ல் ஏற்பட்ட தேர்தலில் டோரிக் கட்சியினர் பெரும்பான்மையினராக ஏற்பட்டனர். உடனே மார்ள்ப்ரோவுக்கு உத்யோகம் காலியாகியது. அவருக்குப் பதிலாக சாதாரண அனுபவமேயுள்ள ஆர்மாண்ட் பிரபு என்ற மற்ருெருவர் சேனைத் தலைவரானுர். யுத்தம் திடீரென நிறுத்தப்பட்டு 1713ல் சமாதானம் பிரான்ஸ் அரசனுடன் செய்துகொள்ளப்பட்டது.

இதைக் கண்ட விக் கக்ஷியினர், "கூ! கூ! மார்ள்ப்ரோ பிரபுவை விலக்கியதே பிசகு. யுத்தத்தை நிறுத்தி சமாதானம் செய்தது முழுத்தப்பு. நடந்த சமாதான ஷரத்துகளின் மூலம் ஆங்கிலேயர் அடையக்கூடிய நிலையிலிருந்தபடியான அவ்வளவு அதிக லாபங்களைப் பெற முடியாமல் போய்விட்டது. வந்தது மோசம்" என்றவாறு பொது ஜனங்களிடை பிரசாரம் செய்யக் கிளம்பினர். தங்களுக்கு எதிரிகள் பலமாக இல்லை என்பதை நினைத்த டோரிக் கட்சியினர், "அந்நிய அரசன் என்றாலே அனுவசிய யுத்தங்கள். உள்ளூர் அரசன் எப்படியானுலும் நம் அரசன்; அவனை வைத்துக்கொண்டு விடுவோம்" என்று நினைத்தவர்களாய், அப்போது ஆண்டு வந்த ஆன் ராணி (Queen Anne) யிடம் (ஜேம்ஸ் IIன் மகளும், வில்லியம் IIIன் மைத்துனியும், போலி என்று தீர்மானச் சட்டத்தினுல் விலக்கப்பட்ட ஜேம்ஸ் IIன் மகன், ஜேம்ஸ்க்கு சகோதரியும் ஆனவள்) சகோதர வாஞ்சையைப்பற்றி உபதேசம் செய்து மீண்டும் (போலி) ஜேம்ஸையே மீண்டும் ராஜாவாக்க முயன்று, தீர்மானச் சட்டத்தின்படி உரிமை கொடுக்கப்பட்ட ஹானேவர் சிற்றரசன் ஜார்ஜை விலக்க முயன்றனர்.

இந்த சதியாலோசனையை யறிந்த விக் கக்ஷியினர், "புரட்சித் திட்டத்தை, டோரிகள் புரட்டி யடிக்கப் பார்க்கிறார்கள். கதோலிகள் என்ற காரணத்தால் விலக்கப்பட்ட ஜேம்ஸ் (போலி) அரசனுக வந்துவிட்டால் இங்கிலாந்து மதத்திற்கே வந்துவிட்டது. ஆபத்து உரிமைகள் மசோதாவில் உள்ள ஷரத்துக்கும் விரோதம். ஆகவே இந்த டோரிகள் தேசத்துரோகிகள்" என்பதாகப் பிரசாரம் செய்ததற்கு, மேல் பாராவில் கண்டபடி யுத்த நிறுத்தத்தின் கெடுதல்களையும் நஷ்டங்களையும் சேர்த்துக்கொண்டார். அந்தக் கக்ஷிகளின் அவ்வப்போதைய நியாயங்களைக் கேட்ட பாமர ஜனங்கள் என்ன நிலையில் இருந்திருப்பார்கள் என்பதை வாசகர்களே யூகித்துக்கொள்ளலாம்! ஆன் ராணியும் இறந்துவிட்டாள். அவசர அவசரமாக ஹானேவர் சிற்றரசர்

ஜார்ஜையழைத்து ஜார்ஜ் I ஆக, விக் கக்ஷியினர் முடிசூட்டி, தீர்மானச் சட்டத்தை உறுதியாக்கினர். டோரிகளின் குட்டு வெளிப்பட்டு, திரு திருவென விழிக்கலானார்கள். மதத்திற்கு ஆபத்து (Religion in Danger) என்ன அபூர்வ சக்தியமைந்த சப்தம்! பாமர ஜனங்கள் பரமார்த்திகளாக இருந்து அவர்களும் அப்படியப்படி இழுபட்டனர்.

ஆக விக் கக்ஷியினர் 1714-ல் இங்கிலந்துக்கு ஹானோவர் சிற்றரசனை அரசராக்கி தங்கள் செல்வாக்கை மீண்டும் ஸ்தாபித்துக் கொண்டனர். அவர்களுடைய அதிர்ஷ்டம் காரணமாக புதிய அரசனுக்கு வயது 49. இங்கிலாந்து பாஷையோ, சட்டங்களோ, பழக்க வழக்கங்களோ ஒன்றும் அறியாதவராகவும், அவசியம் வந்தவிடத்து முயன்றாலும் கற்றுக்கொள்ள முடியாதவர்களாகவும் ஏற்பட்டார்! ஆனால் தனக்கு இங்கிலாந்து சிம்மாஸனம் கிடைக்க உதவியவர்கள் விக் கக்ஷியினர் என்பதுமட்டும் தெரிந்து, அவர்களிடம் தன் பூரண நம்பிக்கையை வைத்து, நிர்வாகம் அநேகமாக பூராவாய் அவர்கள் வசத்திலேயே ஒப்படைத்துவிட்டான்! பின்னென்னவேண்டும்? 1714 முதல், சுமார் 1778ம் வருஷம் வரையில் விக் கக்ஷியினரே நாட்டில் செல்வாக்கையடைந்து டோரிகளைத் தலைதூக்காமல் செய்வதற்கான பல காரியங்களும் நடந்தன. நிர்வாகத்திலுள்ள கக்ஷி பல விதங்களிலும் தங்கள் செல்வாக்கு ஸ்திரப்பட முயலுவதும் இயற்கையேயன்றோ? தங்களிடம் அரசன் நம்பிக்கை வைத்ததைக் கண்ட விக் கக்ஷியினர் டோரிக் கக்ஷித் தலைவர்கள் பலரைத் துன்புறுத்தி, குற்றஞ் சாட்டி, தேசப்பிரஷ்டம் செய்து நாட்டை விட்டோடும்படி செய்தனர். அது சம்பந்தமாக இங்கிலந்திலும், ஸ்காட்லந்திலும் கலகங்கள் ஸ்டுவர்ட் அரசர்கள் சார்பாக ஏற்பட்டன. அதையெல்லாம் அடக்கி கலகத் தலைவர்களைத் தண்டித்து தங்கள் கடூர குணம் எவ்வளவு வரையில் செல்லுமோ அவ்வளவையும் காட்டிவிட்டனர். எங்கே ஒரு சமயம் தேர்தல் நடத்தினால் தங்களுக்கு தேர்தலில் தோல்வி ஏற்பட்டுவிடுமோ என்ற பயத்தினால் 1696 வருஷத்திய 3 வருஷச் சட்டத்தை மாற்றி 1715 லேயே 7 வருஷச் சட்டமாக மாற்றி, சுவபாவமாக 1714ல் தேர்ந்தெடுத்த பார்லிமெண்ட், 1717ல் கலைக்கப்பட வழியில்லாமல், அதற்கு இன்னும் அதிகமாக 4 வருஷ ஆயுளைக் கொடுத்தனர். அவ்வளவுக்கும் அரசனும் சம்மதித்தான்.

பிறகு மற்றொரு அதிர்ஷ்டம் ஆங்கிலேயருக்கு நல்ல சந்தர்ப்பத்தில் வாய்த்தது. 1720 வரையில் ஒன்றும் புரியாவிட்டாலும் மந்திரி சபைக் கூட்டங்களில் பெயரளவில் அரசன் தலைமை வகித்து வந்தான். தானிருந்து பலனில்லை; உபயோகமில்லை என்றதைக் கண்டு, மந்திரிகளில் ஒருவரே மந்திரிசபைக் கூட்டத்தில் தலைமை வகிக்கட்டும் என்று அரசன் ஒதுங்கிவிட்டான். ஆக வில்லியம் காலத்தில் மந்திரிகளை நியமித்துக்கொள்ளும் உரிமை அரசனிடமிருந்து போய் கக்ஷித் தலைவர்கள் மந்திரிகளாகும் மாமூல் வந்தது! ஜார்ஜ் காலத்தில் சாதாரணமாய் தலைமையாவது வகிக்கலாம் என்றதும் போய் மந்திரிகளே தலைமை வகிப்பது ஆலோசனைக் கூட்டங்களில் என்பது வந்துவிட்டது. இப்படியாகத்தான் ஏற்பட்டது காபினெட் ஆக்ஷி முறை என்று சரித்திரங்களில் காணப்படும். அடுத்து அந்த விபரம் எழுதப்படும்.

"மணிமேகலை" ஆராய்ச்சி

R. V. இராமஸ்வாமி B. A., B. L. வக்கீல், சேலம். (Rights Reserved.)

பழந்தமிழ் மக்களின் பழக்க வழக்கம்

(மணவகை)

அக்காலத்தில் நிகழ்ந்துவந்த மணச்சடங்குகளின் விவரம் நல்லாவூர் கிழாரது அகப்பாட்டால் (86) ஒரு சிறிது விளங்குகின்றது. வேதாகமங்களிற் குறித்துள்ள எட்டுவகையினதாகிய விவாகங்களில், அக்காலத்தில் பிரம்மமென்ற முறையினதாகிய விவாகமும், கந்தருவமென்ற விவாகமும், அதிகமாக வழக்கில் இருந்ததாகத் தெரிகின்றது. பிரம்மமென்பது பெற்றோர் குலமும் குணமும்நாடி, தக்க புருடனொருவனுக்குத் தமது மகளை மணவினைகளுடன் பலர் முன்பாகக் கொடுத்தலாம். அதுவே ஒழுங்கான மணமுறையாம். மணவகைகளில்,

"........கரணமொடு புணரக்
கொளற் குரிமரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வது."

சிறந்ததெனப்பட்டது. (தொ. கற்பி. 1.) சடங்குகளோடு பலரறியப்பெற்றவர் கொடுக்கப் பெண்ணை யேற்றிடும் பிரம்மமென்ற வகை மணமே நல்மணமென்று நம்மவர் இன்றும் கருதல் நோக்குக.

கந்தருவ மணமாவது, கொடுப்பவரும் கேட்பவருமின்றித் தலைமகனும் தலைமகளும் தாமே தனியிடத்தில் எதிர்ப்பட்டுக் கூடுவது என்னும் அகப்பொருள் விளக்கம். இதனை 'ஒருவனோடு ஒருத்தியை எதிர்நிறுவி அவருடம்பாட்டோடு புணர்க்குங் கந்தருவ' மென்பர் நச்சினார்க்கினியர். 'இருவரும் கண்ணுற்றுக் காதல்கொண்ட வழி யெல்லாமது கந்தருவ' மென்பது வேதமுடி'யெனக் கூறுதல் காண்க. இத்தகைய மணம் நிகழ்ந்து வந்ததென்பது தொல்காப்பியம் களவியலாலும் விளங்கும். இம்மணத்தை யாழோர் மணவினை' யென்பர். (மணி. காதை. 22.)

தனது மாமன் மகள் விசாகையோடு தருமதத்தன் மிக்க நேசம் பூண்டிருந்தமையின், கந்தருவ முறைப்படி அவளை அவன் மணந்தனனென்று, நகரத்தார் தூற்றியதாக மணிமேகலையில் கூறப்பட்டுள்ளது. இதனால், கந்தருவ விதிப்படியும் அக்காலத்தில் மணத்தலுண்டென்பது பெறப்படும். நகரத்தோர் தருமதத்தனைத் தூற்றியதின் காரணம் நன்கு விளங்கவில்லை. பழந்தமிழ்மக்கள், கந்தருவ மணமுறையை அத்துணை சிறந்ததாகக் கருதாமல் இருக்கலாம். அன்றி மாமன் மகளை மணக்கும் வழக்கு அக்காலத்திலில்லை போலும்; முன்னோர்களாகிய, யாக்ஞவல்கர் தமது மிதாக்ஷர மென்றநூலிலும் (1: 52-53); விஷ்ணு (25: 9-10) நாரதரென்ற (12: 7) அறமுணர்த்தும் சான்

ரோர்களும் பைத்தினசி, சுமந்து என்னும் முனிபுங்கவர்களும் குறித்துள்ள மணவிதிகளை நோக்குமிடத்து, மாமன் மகளை மணந்திடலாகாதென்பது தோன்றுகிறது. விதி முறைப்படி மணக்க இயலாத மாமன்மகள் விசாகையை, விதிகளுக்கு விலகி நிற்கும் கந்தருவமுறைப்படி மணந்தனனென்று நகரினர் பழிகூறி யிருத்தல் வேண்டுமென ஊகிக்க வேண்டியுள்ளது! கந்தருவ விவாகம் ஏற்ற மணவினை யொன்றாக அக்காலத்திலும் கருதப்படவில்லை போலும்! சாத்தனார் "பழவினைப் பயத்தாற் பிழைமண மெய்தின" ரென்று, அம்மணத்தைப் பிழைமணமாகவே கூறுகின்றனர்.

(மணவாரின் இழிவு.)

அந்தணர் ஒருவர்,

"பத்தினியில்லோர் பலவறஞ் செய்யினும்
புத்தேளு லகம்புகா அரென்பது
கேட்டு மறிதியோ............" (22, 1179)

என இங்ஙனமாக, தருமதத்தனுக்குக் கூறியதாக உள்ளது. பல வறங்களைச் செய்திடினும் பத்தினியில்லோர் மோட்ச சாம்ராஜ்யத்தை எய்தாரோ? இல்லறத்தோர் ஒருவர் தாமே புத்தேளுலகம், புகுதற்குரியோர்? என்னுமித் திறத்திய ஐயப் பாடுகளுக்கு இவ்வடிகள் இடந்தருவதாக உள்ளன. சற்றே ஆய்ந்து அறியுமிடத்து, இல்லறத்தோரேயன்றி ஏனைய பிறரும், விதித்த முறைப்படி ஒழுகி வருவார்களாயின் நற்பதவியை எளிதில் எய்துவரென்பது விளங்குகின்றது. பிரம்மச்சரியம், கிரஹஸ்தாச்ரமம், வானப்பிரஸ்தம், சன்யாசமென்னும் நான்கு வாழ்க்கைத் துறைகளைக் குறித்துள்ள, தவசி ஜாபாலரால் போற்றப்பட்டு வந்த 'விகல்ப பக்ஷ' மென்ற கொள்கையும், கௌதம முனிவரால் ஆதரிக்கப்பட்ட 'பாத பக்ஷ' மென்ற கொள்கையும் மனு, யாக்ஞவல்கியர், நாரதர் முதலிய சான்றோர்களில் சிறப்பிக்கப்பட்ட 'சமுசாய பக்ஷ' மென்ற கொள்கையுமாகிய முரணிய கருத்துக்கள் மூன்றும் வல்லார் வாய்கேட்டு அறிந்திடுக. மேம்பாடடையக் கருதுமொருவன், பத்தினியைப் பெற்றிருப்பினே, அது கிட்டுதற்குச் சாதகமாகுமெனக் கருதுவதற்கு இடமில்லை. வெளிநாட்டிலே வந்து ஏகாந்தியாக வியாபாரத்தி லீடுபட்டு இருக்கும் தருமதத்தனுக்குப் பத்தினியோடிருந்து காலங் கழித்தலை வற்புறுத்துவான் கருதிவந்த அந்தணர் இங்ஙனமாகக் கூறினரோ? அன்றி, வாணிகத் தொழிலில் ஏராளமாகச் செல்வமீட்டிய அவனைத் தன்னூர் சென்று இல்லறம் நடத்தி' தருமவதியைப்பற்றி வாழட்டுமென்று கூறினரோ? எதுவென உணருதற் கரியதாக உள்ளது.

(நல்லொழுக்கம்)

அறவோர்க் களித்தல், அந்தணரோம்பல் முதலிய அறங்களைச் செய்து இல்வாழ்க்கையை இனிதே அக்காலத்தோர் நடாத்தி வந்தனர். தவசிகளையும் தம்மினு முயர்ந்த பெரியோர்களையும், அரசன் முதலிய காவலாளர்களையும் கீழ்ப்படிந்து நடந்திடுவர். அவர்களைக் காணுந்தோறும் தொழுது அடி பணிந்து நிற்பர். இறந்த துறவிகளைத் தொழுவர். பெரியோர்களைத் தரிசிப்பது புண்ணிய கருமமென்றும், அவர் தமது மலரடியை வணங்காம லிருப்

பது பெருந்தவறென்றும் கருதி யிருந்தனர். (10) அதிதிகளைப் பூசித்து அன்னமளிப்பர். (9-10.) வெளியிடங்களுக்குச் செல்லுவோர் பெரியோர்களை வணங்கி ஆசிபெற்றுச் செல்லுதல் மரபு. மணிமேகலை பெரியோரிடம் விடைபெற்று ஆபுத்திரனோடு செல்லுதல் காண்க.

தெய்வங்களை வலம் வந்து தொழுது அடிபணிந்து துதித்துப் புகழ்ந்து நிற்குமாறே, தெய்வீகத்தன்மை பொருந்தியவரையும், தெய்வீகத்தன்மை பொருந்திய இடங்களையும், காணுந்தோறும் பணிந்து நிற்பர். மும்முறை வலம் வருதல் முறையெனக் கொண்டிருந்தனர். (8: 10) மணிமேகலை, தீவதிலகையை வணங்கிப் பீடிகையைத் தொழுது வலம் வந்ததும் (11), அறவணரைத் தரிசித்து மும்முறை பணிந்து துதித்ததும் (12), உலக வறவியை வலம் வந்ததும், பழம் பிறப்பில் கணவனாயிருந்த உதய குமரனை வணங்கியதும், பின் சம்பாபதியைத் தொழுது நின்றதும், சிறையாளர் சிந்தை குளிர அமுதளித்த பின் அரசனை வணங்கித் தொழுததும் (19), கந்திற்பாவை தெய்வத்தை வணங்கியதும் (21), அரசியென்றும் தனது கணவனாக இருந்த உதயகுமரனின் தாயென்றும் கருதி இராசமாதேவியை வணங்கியதும் (23-145-7), மண்முக முனியை வணங்கியதும் (24), வலம் வந்து புத்த பீடிகையைத் தரிசித்ததும் (25), கண்ணகியையும் மாசாத்துவானை வணங்கியதும் காண்க. மற்றும், ஆதிரை அமுதசுரபியைத் தொழுது வலம் வருதலும் (16), காயசண்டிகை பாத்திர மகிமையால் பசிதீர்ந்து மணிமேகலையை வணங்கலும் (17), விசாகையும் தருமதத்தனும் கந்திற் பாவையைத்தொழுது வேண்டலும், வாசந்தவை அரசியைத் தொழுதலும் (24), அறவணரை அரசி வணங்கி, ஆசனத்தமர்த்தி உபசரித்து மாற்றம் பல மொழிதலும் (24) புண்ணிய ராசனை மந்திரி சனமித்திரன் வணங்கலும், ஆபுத்திரன் மணிபல்லவ தீவத்தை வலம் வரலும், பீலிவளை தான் பெற்ற மைந்தனோடும் வந்து மணிபல்லவ தீவத்தையும் பீடிகையையும் வலம் வரலும் மணிமேகலை நூலில் கூறப்படுதல் நோக்குக.

(ஈகையாளர்)

"மக்கள் யாக்கையுணவின் பிண்ட"மாகலின் (10: 90), உள்ளவர் உண்டு களிப்புற்றிடுவர். இல்லாதோர் மனைதோறும் சென்று பிச்சைப் பாத்திரம் கையிலேந்தி இரந்துண்டு வருவர். (5) பசிதனை வருந்திய வைதன் மாக்கட்கு (17-93) உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோ ரென்பது உணர்ந்தவராகலின், வருந்துவோரைக்கண்டு மனமிரங்குவோர் பலருண்டு. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" எனப் புறநானூறும் (18), தம்மை அடைந்தாருக்கு வரும் துன்பங்களைப் போக்குவதே செல்வமென நற்றிணையும் (210), கூறும். தருமதத்தன் தானீட்டிய பொருள்களனைத்தையும் தானதருமம் செய்ததும்; கைம்மாறு கருதாது, அறமுணர்ந்த கோவலனது வழி முதல்வன், முந்தையோர் பொருளன்றித் தனது பொருள் யாவும் இரவலர்க்கு கொடுத்திட்டதும் காண்க. பாத்திரமறிந்து பிச்சையிட வேண்டுமென்பது விதி யாதலால், குருடர், செவிடர், கதியற்றோர், பிணியுற்றோர் முதலியவருக்கே கொடுப்பர். காஞ்சனன் காயசண்டிகையின் கொடும் பசி கண்டு மனம்நொந்து "சம்புத்தீவின் தமிழகத்து உள்ளதாகிய ஆற்றா மாக்கட்கு அருந்துணையாக உள்ள கழிபெருஞ் செல்வர்கள் உறையும் நகரமாகிய காவி

ரிப்பூம்பட்டினம் செல்க" (17) எனக் கூறுவானாயினன். தமிழகம் ஈகையிற் சிறந்திருந்த தென்பது இதனால் விளங்குதல் காண்க. வரையின்றிக் கொடுத்த வள்ளல்கள் நிறைந்த நாடாகலின் ஆசிரியர் இங்ஙனமாகக் கூறினர். "தமிழக" மென்று புறநானூறும் கூறுதல் காண்க. (செ. 168.)

(விரதங்கள்)

தாம் கொண்ட கருமங்கள் நிறைவேறுதற் கென்றோ, அன்றி, சுய நன்மையைக் கருதியோ, மக்கள் விரதங்களைக் கைக்கொண்டு அதன்படி நடந்து வந்தனர். தாக்கருந் துன்பங்கள் மேன்மேலும் வருத்தித் தாம் கொண்ட விரதங்களை விகாரிக்க வந்துறினும், அவற்றைப் பொருட்படுத்தாது விரதத்தை அனுசரித்து வந்தனர். சாவகநாடு சென்று பசித்தோருக்கு உணவளிக்கும் நோக்கத்தோடு வந்த ஆபுத்திரன், மணிபல்லவ தீவத்தை அடைந்தான். உடன் வந்தோர் அவன் வந்தது உணராது சென்றாராக, பின் தங்கி வருந்திய அவன் "என் புண்ணிய விசேடத்தால் கிடைத்த மன்னுயிரோம்புமிம் மாபெரும் பாத்திரத்தை, ஏற்போரில்லாத இங்கு சுமந்து கொண்டிருப்பதில் பயன் யாதுளது," என்று உண்ணாநோன்பு கொண்டிருந்து உயிரை இழந்தனன். (14) தவவழி நிற்றலாகிய விரதத்தைச் சுதமதியும்; பன்னிரு வருடங்களுக் கொருமுறையாக உண்ணும் விரதத்தை முனி விருச்சிகனும் கொண்டிருந்தனர். மற்றும், பெருநிதிச் செல்வனாகிய, வாணிகமரபினன், தருமதத்தன், தன் மாமன் மகள் விசாகையை யல்லது பிற எப் பெண்டிரையும் இச்சியாமல் தனது வாழ்நாளைக் கழித்திடுவதாக, வைராக்கிய விரதம் கொண்டிருந்தனன். அவ்வாறே விசாகையும் அடுத்த பிறவியிலேயே மணப்பதாக விரதங்கொண்டு, கன்னிமாடம் புகுந்தனள். (22)

(பசுக்கள்)

பசுக்கள், அக்காலத்தில் மிகவும் உயர்வாகக் கருதப்பட்டு வந்ததென்பது,

"...............இருநில வேந்தனு
மாபெரும் பேரூர் மக்கட்கெல்லாம்
மாவு மாவுங்கொண்டு கழிகென்றே." (23-25.)

என பூகம்பத்திற்குப் பயந்து செல்லுவோர் பசுவோடும் செல்லுமாறு கூறப்படுதலால் விளங்கும். ஆபுத்திரன் யாகத்திற்கு வைத்திருந்த பசுவை யோட்டிச்சென்று; பின்தொடர்ந்து கள்வனெனத் தன்னைத் தூற்றி நைபப்புடைத்து வந்த அந்தணரை நோக்கி, 'நோவன செய்யன்மின், எனது மாற்றங்களைச் சற்றே கருணையோடு கேண்மின். விடுநில மருங்கில் தானாக வளரும் புல்லைத் தனது வயிறார மேய்ந்து, இந் நெடுநிலத்துள்ள மக்கட்கெல்லாம், பிறந்த நாள்தொட்டு சிறந்த தனது தீம்பாலை அருளோடு சுரந்து அளிக்கும் பசுவினிடத்து உங்களுக்கு வந்த செற்ற மென்னை" என்று கூறலுற்றனன். யாகத்திற்குப் பசுக்கள் பயன்பட்டு வந்த வேதவிதி இங்கு கூறப்படல் காண்க. அரசர்கள் ஆக்களுக்கென்று மேய்தற்குப் புற்றரையாகிய நிலங்கள் விட்டிருந்தனரென்பது "விடுநில" மென்பது குறிக்கும் (13-51). தீங்கொன்றும் செய்யாத உயிரினமாகலின் பசுவை முதற்கண் வைத்து,

"ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணு." (9: 1-2) தல்,

நல்லோரின் கடனென்பதைப் புறநானூறும் கூறும்.

"நன்பால் பசுவே துறந்தார் பெண்டிர் பாலர் பார்ப்பா
ரென்பாரை யோம்பேனெனின் யானவனாக வென்றான்."

என சீவகசிந்தாமணியிலும் வருதல் காண்க. (443)

(ஆடலும பாடலும்)

ஆடல் பாடலில் அக்காலத்தவரும் பிரியம் கொண்டிருந்தனரென்பது மணிமேகலையால் விளங்கும். விழாக் காலங்களில் ஆடுதல் வழக்கமாக இருந்தது. ஆடவரேயன்றிப் பெண்டிரும் யாழ்முதலிய கருவிகளைக்கொண்டு இனிதே பாடிவந்தனர். எட்டிகுமரன் யாழ் வாசித்தது காண்க. கவன மற்றுப் பிற விஷயங்களில் மனத்தைச் செலுத்தியதால் அவனது பண்ணினிமை குன்றியதாகக் கூறப்பட்டுள்ளது. மற்றும், இசையாசிரியர்கள் அக்காலத்தில் பலரிருந்தன ரென்பதும், இசைக்கருவிகள் பல விருந்தன வென்பதும் இங்கே கூறப்பட்டுள்ளன. (7: 42-4). அவ்விசையாசிரியர்கள், அரங்கத்தில் ஆடலும் பாடலும் பயிற்றுவிப்பர்.

பண் பலவகைப்பட்டதாக இருந்தன. பாணரென்போர் பாடுவோர், அவர் பாடுதலைப் பண்ணென்பர். "பாணன் கையது பனைபுடைச் சீறியாழ்" என நற்றிணை கூறும். அவர்கள் சிறுபாணர் பெரும்பாண ரென்ற இருபிரிவினராக இருந்தனர். "இன்குரற் சீறியாழிட வயிற்றழீஇ" என்று சிறுபாணாற்றுப்படை, சிறிய யாழை வாசிப்போரைக் கூறும். "இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழப்பி" யெனப் பெரும் பாணாற்றுப்படை பெரிய யாழை வாசிப்போரைக் கூறும். சிலப்பதிகாரத்தில் பெரும் பாணரையும் அவரது செயலையும்,

"குரலினும் யாழினும் குரன் முதலேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்
அரும்பெறன் மரபிற் பெரும்பாணிருக்கையும்."

எனக் கூறுதல் காண்க. மற்றும், சிலப்பதிகாரம், பாடலிற் பயன்பட்டு வந்த கருவி விசேடங்களையும் கூறுகின்றது. (3: 138-142) ஆடல் பாடலைக் குறித்து,

"ஆடற் கூத்திரோ டவிநயந் தெரிவோர்
நாடகக் காப்பிய நன்னூ னுவிப்போர்
பண்ணியாழ் நரம்பிற் பண்ணுமுறை நிறுப்போர்
தண்ணுமைக் கருவிக் கண்ணெறி தெரிவோர்
குழலொடு கண்டம் கொளாஞ்சீர் நிறுப்போர்
பழகிய பாடல் பலரொடு மகிழ்வோர்." (19: 79-84)

என மணிமேகலையிலும் வருதல் காண்க.

(ஒழுங்கற்ற வழிகள்)

நல்ல வழிகளை நாடிநிற்கும் மனிதர் ஒருபுற மிருக்கத் தீயவழிகளை நாடிச் செல்வோரும் சில ரிருந்தனர். சாதுவன் புனிதமற்ற துறைகளை இச்சித்துச் சூதாடித் தனது பொருள் யாவும் இழந்தன னென்பது,

"கணிகை யொருத்தி கைத்துணங்க
வட்டினுஞ் சூதினும் வான்பொருள் வழங்கிக்
கெட்ட பொருளின் கிளை கேடுறுதலில்." (16-6-8)

என்ற அடிகள் நவிலுகின்றன. அரசர்களும் ஒரோ வழி, நேரிய நெறியினின்றும் தவறிப் பரத்தையராசையி லீடுபட்டு நிற்பது காண்க. நாடகக் கணிகைய ரிச்சையால் கலனழிந்தோருண்டு. ஆடலிலும் பாடலிலும் பிரியரா யிருந்தோராயினும், அக்காலத்தவர் பரத்தமைத் தொழிலை இழிவாகவே கருதி வந்தனர். கணிகையாகிய மாதவியே, பரத்தையரை இகழ்ந்து கூறுதல் காண்க. இவ்விஷயம் பிரிதோரிடத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

(தொடரும்)

கண்ணீர் வடிகிறதே!

இதர தேசங்களை விட, இயற்கைவளம் எவ்வாற்றானும் நிரம்பி ஈடில்லாமல், இறுமாந்து நிற்கும் நம் பாரத தேசம் முன்னோர்கள் காலத்தில் தொழிற்றிறமை வாய்ந்த ஜனங்களால் கைத்தொழிலில் தலைசிறந்து விளங்கியது மறுக்கமுடியாததோருண்மை. அவ்வாறான நம் பாரத தேசம், தற்போது பொலிவிழந்து சவம்போல் கிடக்கிறது. முன்னோர்கள் செய்துவந்த கைத்தொழில்கள் மறைந்தன; அன்றியும் மறந்தன. அதற்கு மாறாகக் கொடிய வறுமையும், கடன் சுமையுமே ஓங்கி நிற்கின்றன. தவிர, பண்டைநாளில் தமது தேவையைத் தாமே பூர்த்தி செய்து கொண்டது போக, இப்போது பிற நாட்டவரின் கையை எதிர்பார்க்கும் நிலையிலிருக்கிறோம். இதனால் எத்தனையோவகை துன்பங்களுக்கு ஆளாகி தலைகுனிந்து தவிக்கிறோம்.

உதாரணமாக, வருடந்தோறும் இடுப்புத் துணிக்காக மாத்திரம் சுமார் 60 கோடி ரூபாய் வெளி நாடுகளுக்கு அனுப்புகிறோம். ஒவ்வொரு வீட்டிலும் ஸ்திரீகள், புருஷர்கள் ஆகிய எல்லோரும் நூல் நூற்று நெசவுத் தொழிலை விருத்தி செய்து, நாம் உடுத்துக் கொண்ட காலம் ரொம்பகாலமாய் விட்டது. திடீரென்று பிறநாட்டார் துணி இறக்குமதியை நிறுத்திவிட்டால், மானத்தைப் பொத்துவது பகீரதப் பிரயத்தனமாகிவிடும். அந்தோ! பிற நாடுகளுக்கு கப்பல் கப்பலாய் ஏற்றுமதி செய்தது போக, கப்பல் கப்பலாய் இன்னும் பணத்தை அனுப்புவதை மனதால் எண்ணினாலும் கண்ணீர் வடிகிறதே! ஐயோ!—எஸ். கே. கணேசன்.

"கோபாலன்" கடிதங்கள்

(பெ. இராமாநுஜன்.)

தன்னலம் விடுத்துப் பிறர்நலம் பேணி, அருளறம் பூண்ட ஒரு பெருந்தலைவனை வழுத்துகின்றேன்.

அண்ணா!

தங்கள் ஆசி நிறைந்த கடிதம் பெற்றுப் பேருவகை பூத்தேன்.........ஆ! காலம் எவ்வளவு விரைவில் மாறிவருகிறது! ஸ்ரீமத் பண்டித, அ. கி. அவர்கள் முதலில் "தமிழ்" பயின்றார்; பின்னர் "வைணவம்" பயின்றார்; அதன் பின்னர் "அன்னை பெசண்ட்" என்றார்; ஒத்துழையாமை யென்றார். ஆ! இப்பொழுது "அம்பட்டர்—அழகிய குருக்கள்" என விரிவுரை கூறுகின்றார்! இராமனும் பரதனும் போல் ஒன்றுபட்டு வாழ்ந்த தங்கட்கும் அறிஞர்...... அவர்கட்கும் உள்ள அன்பிற்கு ஏதாவது பங்கம் நேர்ந்துளதா? இல்லையாயின் யான் அவர்களைப் பற்றி வினவி யிருந்ததற்குத் தாங்கள் தங்கள் கடிதத்தில் ஒன்றுங் குறிக்க வில்லையே? என் ஊகம் பிழையாயின் பெருமகிழ்வே. இம்முறையாவது யான் சமர்ப்பிக்கும் வணக்கங்களுள் ஒன்றைத் தாங்கள் அங்கீகரித்துக் கொண்டு, மற்றவற்றை அறிஞர் அ. கி. அவர்கட்கும், செல்வர் எ. என். அவர்கட்கும் கொடுத்து விடுங்கள். வஞ்சித்து விட வேண்டாம். இன்னிசை மெல்லியல்—என்னுயிர்ச் சகோதரி ஸ்ரீமதி எஸ். ஆர். "நவசக்தி" யெனும் வார வெளியீட்டில் வரைந்த "நாயுடு மகாநாடும் நாரீமணிகளின் நாடா நிகழ்வும்" என்ற கட்டுரை கண்டு களிப்பு வெள்ளத்தில் மூழ்கினேன். அச்செல்வியின் செவ்வியும், தாமோதரன் எனும் தம்பியின் சுகமும் அறிய அதிக அவா.

எனது நிலையைப் பற்றி வினவி யிருந்தீர்கள். எனது நிலையை யெவ்வாறு கூறுவேன்?

"எத்தனை இரவோ உறங்கிய பின்
நித்திரையினில் யான் உணர்வு நீங்குமுன்
ஆதியில் நிகழ்ந்த அநேகவற்றை யென்
பேதை உள்ளம் பிரியமொ டெண்ணுமால்
என்னிள வயதில் இன்பினில் நிகழ்ந்த
புன்னகைகள் துயர் பொருமு கண்ணீர்கள்
மன்னிளங் காதலில் உரைத்த வார்த்தைகள்
அவைதாம்":—
துள்ளித்திரியும் பிள்ளை வயதில்
பள்ளியிற் பயில உள்ள மிலாது
ஓடி மறைந்து என் உற்ற நேயர்களோடு
ஆடிப் பாடி அகமகிழ்ந் ததுவும்
பின்னர் எனது பெறற்கருஞ் சோதரர்
மன்னிய துணையால் மதுரை போந்தும்
இன்தமிழ் பயில எண்ண மிலாது
என் பிறந்தகத்தையே யெண்ணி யெண்ணி

இரவு பகலா இருகணீர் உகுத்ததும்
அன்பு நிறைந்த என் அண்ணன் வற்புறுத்தலும்
ஏதோ இறைவன் கிருபையும் இருந்ததால்
முதல் பரீட்சையினை யான் முற்றுகை போட்டதும்
போட்டும் பயனென் போற்றாது அதனை யென்
வீட்டிலிருந்து வீணாக்கினன் அந்தோ!
அதன்பின் பெனது ஆயிழை தன்னோடு
மதனன்கலைகளைப் பயின்றதும், புதிய
எண்ணெயியந்திரம் பழகுதற் கங்கே
நண்ணியதும் ஆ! நவையறு குணமும்
வீர மொழியும் விரிந்த வுருவமும்
ஆர்ந்த எனது அண்ணா! உங்களைக்
கண்டு பழகவும் கள்ளமிலாத
புன்-சிரிப்பே தவழ் புனித முகத்தினர்
நீக்குதற் கரிய ஊக்க மதாலே
உறுபொருள் குவித்த ஒப்பருஞ் செல்வர்
அப்பாய் நாயுடுகார் எனும் அண்ணலின்
அன்பினுக் கடியேன் ஆளாகியதும்
இயந்திர வாழ்க்கையால் இருநிதி திரட்டலாம்
எனுங்கருத்தொடு என் இருப்பிடம் அடைந்ததும்
அந்தோ! வானம் அன்று தொட்டிது வரை
வஞ்சித் தெனது வாழ்வைக் கெடுத்து
இயந்திரம் எனுமவ் விரும்பினுக் கென்னை
அடிமை யாக்கி அளப்பருந் துன்பினில்
உளப்பிப் பதுவும் ஒவ்வொன்றாக
இன்னணம் நிசப்த இரவினில் இன்துயில்
துன்னி அயர்ந்து யான் தூங்கிடும் முன்னர்
சென்றன ஞாபகம் செய்து
இன்றென துள்ளம் எண்ணி யேங்குமே.

அண்ணா!

இதுவே என் தற்கால நிலை. எனது பிற்கால வாழ்வை எவ்வாறு கழிப்பது என்பதற்குச் செவ்விய வழி யொன்று காட்ட வேண்டுகிறேன்.

....

6—11—28.

உங்கள் தம்பி
கோபாலன்.

காந்தியடிகள் துணை

உழுவலன்புடைய அண்ணா!

இவண் அனைவரும் நலம்; அவண் அஃதே மல்க ஆண்டவனை வேண்டுகின்றேன். தங்கள் கடிதம் பெற்ற அன்றே சென்னைத் திருவாளர் கன்னித் தமிழ் மொழியில், தீஞ்சுவை பயில் நடையில் எய்ந்த நற் சிறுகதைகள், புனைவதில் வல்லுநர் என் உயிரனையார் “எல். ஆர்.”, வரைந்த நற்றிரு முடங்கல் மகிழ்ந்தனன் பெற்றெளியேன். யான் என்றும் தங்களை மறப்பேனல்

லேன். தங்கள் திருக்கடிதம் பெற்றவன்றே அடியேன் தங்கட்கு முடங்கல் தீட்டாமை குறித்து தங்கள் பால் யான் முடங்கினேன் என்று ஐயுற்றீர்கள் போலும்! நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன், நினையாது ஒருபோதும் இருந்தறியேன்”.

“உனது வாழ்நாளில் ஒரு பகுதியை நாட்டுத் தொண்டுக்கென ஒதுக்கிவை” என்று எழுதி யிருந்தீர்கள். “வீட்டு நலத்தை” வேண்டி—நின்றெளியேன், கற்றது மறந்து பல் கனவுகள் கண்டும், ஒரு சிறு பயனும் பெறாதற்கின்றித், தோல்வி யுற்றனன் எனின் சொல்வ தென்வேறே? அங்ஙனமாக, நாட்டு நலத்தை நாடி நிற்பதாக, காட்டுதற்கு என் சிறு ஆற்றல் போதுமோ? ஆவணித் திங்கள் அரும் பெறற் செல்வி............சென்னைக் கேகும் நற்செய்தி யறிந்து இன்புற்றேன். அது காலை என் சிறு குடிலுக்கு எழுந்தருள வேண்டுமென மீண்டும் இக் கடிதத்தால் வேண்டுவல்.

பற்பல துறையில் விற்பனராய, மேலோர் சரிதைகள் தாழ் நிலையார்க்கு, ஊக்கமும் ஆக்கமும் உறுதியும் அன்றோ பயந்து நிற்பன! தன்னேரில்லாத் தமிழ் நாட்டகத்தே, உழவுத் துறையில் தளராது முயன்று, ஆக்க மடைந்தோர் நோக்கின் மிகச் சிலர்; எனினும் நமதுயிர் அனையார் அனையார், இருப்பர் ஒருவரென் றெண்ணுதற்கிலையே; ‘இல்லறம் ஒன்றே நல்லறமாவது, சிக்கனம் வாழ்க்கையிற் கைப்பிடித்தோர்க்கு, உழவுத் தொழிலே ஒண் பொருள் தருவது,” எனும் இச் செய்தியைத் தமதுயர் வாழ்க்கையால், எம் மனோர்கள் எளிதில் அறியுமாறு ஒழுகும் அன்பர்............அவர்களையும் உடன் அழைத்து வருவீர்க ளென்று உறுதியாய் நம்பி நிற்பேன். ஆழி ஒருகால் அலைமறந்து நிற்பினும் அவர்கள் தமது கழனியிற்றொழிலைச் சிறிதும் மறந்து நில்லார்கள் என்பதை யான் அறிவேன். எனினும் அன்பிற் கெளியராதலின் எளியேன் வேண்டுகோளை மறுப்பாரல்லர்.

....

தங்கள் அன்புக்கடிதம் எதிர்நோக்கி நிற்கும்.
சகோதரன் கோபாலன்.

தமிழ்த் தாய் வாழ்க

....

10—8—23.

ஆருயிர்த் தோழ!

நலம்; ஆங்கு அஃதே மல்குக. நான் மாடக்கூடல் நான்காஞ் சங்கத்துக் கல்வி பயின்ற பின்னர் உனது கைத் திருமுகமோ, மெய்த் திருமுகமோ அடியேன் பல முறை காணப் பெறாமை யான் புரிந்த தவக்குறைவே. அன்று—அன்பருவாய தோழரோடு துயரென்ப தறியா அச் சிறு பருவத்து வையையாற்றின் வெண்மணலில், செஞ்ஞாயிற்றுப் பொன்னொளி திகழும் மாலைப் பொழுதில், புட்களின் தீங்குரலும், பொதிய வரையின் தென்காலும் மெல்லென வொலிப்ப, அதனால் அகமும் புறமும் தளிர்ப்பெய்த அமர்ந்து அன்புரையாடிய அன்றைய நிகழ்ச்சி இன்றும் என் கண்முன் உலாவருகின்றது! ஆ! அப்பொழுது இவ் வுலகம் நமக்கு எவ்வளவு இன்பந் தருவதாய்த் தோன்றியது! புல்லும் பூவும் கல்லும் காடும் செடியும் கொடியும் மரமும் நமக்கு எவ்வளவு உற்சாகம் ஊட்டின! செல்லூர்க் கண்மாவின்

மதகிலிருந்து குதித்து விழும் நீர் பல கால்களாயோடி, கண்ணிற் கெட்டிய வரை தோன்றும் கழனிகளி லெல்லாம் பாவிச் செல்ல, உழவர்கள் ஏர் பூட்டி நிரை நிரையாய் உழுததும், உழத்தியர் கூட்டங் கூட்டமாய் நாற்று நட்டதும், உழவரின் சிறு குழந்தைகள் சேற்றில் புரண்டும், நீரில் குதித்தும் விளையாடியதும் கண்டு நாம் எவ்வளவு மகிழ்ச்சி யடைந்தோம்! தல்லாகுளத்திற்கு வடக்கே அழகர் மலைப்பாதையில் நாற்புறமும் பரந்து கிடந்த அந்த வெறும் "பொட்டல்" நிலத்தைக் கண்டு நாம் மெய்மறந்து நிற்க வில்லையா? அந்த சின்னஞ் சிறு பருவத்து நமது ஆசிரியர்கள் தவிர வேறு எவர் நமக்கு அச்சம் ஊட்டுபவர்களாகக் காணப்பட்டனர்? மதுரைப் "பாலம் ஸ்டேஷனுக்" கருகே இறந்தவர்களின் உடல்களை யெரித்ததால் உண்டான மிகப் பரந்த அச் சாம்பல்மேடுகள் கூட நமது கட்புலனிற்கு விருந்தாகத் தோன்றின!

நண்ப!

இப்பொழுது உலகமே துன்பமாகத் தோன்றுகிறது. இவ்வுலகில் என்னிடம் களங்கமற்ற அன்பு காட்டுபவர் ஒருவருமே இல்லை. அது பொழுது நான் எவ்வளவு தவறு புரியினும் என்பால் அன்பே காட்டிவந்த தாய் தந்தையர்கூட இப்பொழுது அந்நியராகி விட்டனர். "அவன் அவளாகி விட்டான், அவள் அவனாகி விட்டாள்" என்று கணவன் மனைவியைப் பற்றிப் புலவர்கள் சொல்வன வெல்லாம் புகழுரைதான். நான்தான் இப்பொழுது "அவளாகி" விட்டேன்! எனது மனைவி சொற்படி நான் நடக்காவிட்டால் அவளே யெனக்கு முழு விரோதியாகி விடுகிறாள். "கள்ளி நற்குழலாள் மூத்தால் கணவன் சொற்கேட்க மாட்டாள்" என்றார் ஒரு அநுபவஞானி. எனக்கு அப்படியுமில்லை; என் மனைவி என்னினும் இளையவளே; எனினும் அவள் என் கருத்திற்கிசைய நடப்பதில்லை. ஆனால், நான் அவள் விருப்பப்படி நடக்க வேண்டும்! கண்ணகியின் கற்பும், தமயந்தின் தன்மையும், நளாயினியின் உயர்வும், சந்திரமதியின் சகிப்பும் நீயறியாதவனல்ல. அப் பெண்மணிகளின் கணவரின் இயல்பையும் உலகம் அறிந்துளது. நான் இதை என் மனைவிக்குச் சொன்னால் "நீ தான் நளனோ, அரிச்சந்திரனோ,..........." என்று தொடங்கிக் கொள்கிறாள். எனக்கு அப்பொழுது என்னை யறியாமல் கோபம் வந்து விடும். "நான் அவர்களைப் போல் பஞ்சமா பாதகங்களைச் செய்பவனல்ல" என்று எனது உயர்வை யெடுத்தியம்புவேன். ஆனால் இவ்வுரை அவள் செவியில் நுழையவே நுழையாது. இத்தகைய நிலைமையில் அந்த இளமையை நினைந்துதான் ஒரு சிறிதும் ஆறுதல் பெறுகின்றேன். ஆனால் ஒரு புதுப்புலவர் "சென்றதினி மீளாது மூடரே" என்று துணிவாகச் சொல்கிறார். ஆகவே இளமையை நினைப்பது பேதமை போலும்! இது கிடக்கட்டும்;

அன்ப! இது பொழுது உனது வாழ்க்கை யெப்படி? உன் உற்றார் பெற்றார் உன் பால் காட்டிய அன்பு மாறாதுளதா? உன் மனமொத்த மனைவி மக்களின் நலத்தை இந்த ஏழைக்கு அறிவிப்பதோடு, எனது ஆசியை அருமை மாதவனுக்கும், அம்புஜத்திற்கும் கூறு. உனது அன்பு நிறைந்த கடிதம் இன்று வரும் நாளை வரும் என்று எதிர்பார்த்திருப்பேன்.

உன்னை யென்றும் மறவாத
அன்பன் கோபாலன்.

சிவனும் முசுவும்

:(o):

(தென்னாப்பிரிகா, டர்பன் திரு. இரா. அரகுப் பிள்ளை.)

"கோளில் பொறியிற் குணமிலவே யெண் குணத்தான்
தாளை வணங்காத் தலை"

எண் குணனாகிய சிவனார், தம் சக்தியாரோடு ஐந்தொழிலாளரா
இவ் வொப்பிலா ஞாலத்தினை யணியுற உண்டாக்கி இஃதிற்
வேண்டிய வாங்கு நல்கி, சடவடிவை யேற்றுள்ள மாக்கள் மக்கள் ஈறு
வுள்ளவற்றிற்கு; ஆத்ம உணர்வு அவ்வவ் வினத்திற்கு வேண்டிய வாங்கு க
வியும், பொருளும், உய்யும் நெறிக்கு நான்மறையுமருளி; அஃதினை நுகரவு
நுகர்ந்து வீட்டின் பேற்றை யடைய எவ்வான்மாக்கள் விழைகின்றதென்
சோதனைக்காக இத்தரணியுற் றுதிக்கசெய்து, அஃதின் திருவிளையாட்டி
காட்சியை நுகர்ந்துழி,

இறையை மறவாது மறை நெறி பிறழா நனிமுறை யொழுகியுய்யு
ஆன்மாக்களுக்கு தீக்கையருளியும், உய்யா மாக்களுக்கு மீட்டும் சோதனை
காக பற்பல ஊறு தத்தமினத்தாலே விளையச் செய்து ஒழுகுங்காலை, ஓர் நா
சிவனும், சத்தியுமோர் கூவிளந்தருவின் நிழலில் எழுந்தருளி பிரபஞ்ச உ
பத்தியின் சோதனைக் காட்சியைக் கண்டிருந்துழி அவ்வடவியிற் பற்பல வில
ஙினங்கள் வதிந்திருந்தன; அவ்வினங்களுள் முசுவினத்தைச் சார்ந்ததோர் மு
அக் கூவிளந் தருவிலிருந்து குறும்பு மதியுடன், கூவிளந்தழைகளை யொ
வொன்றாக, நம் சிவனார் சிவகாமியம்மையார் சென்னியிற் றூவ அத்தழை
லுணர்வுபட சிவகாமியம்மையார் அத் தருவினை நோக்குழி அங்கோர் குரங்
இங்கமர்ந்தோர் இன்னார் என்றும் மதியாமற் குறும்பு மதியுடன் இவ்வடா
செயற் செய்தமைக்குச் சினந்தனர். சத்தியின் சினந்த நோக்கிற்கு விதி
பெய்தி உளமுருகி சிவனையும், சத்தியையும் வணங்கி கைலையிலுறையு
இறையீர், யான் மெய்யுணர்வு பெறாது இவ் வழுவிய செயற்கை செ
மைக்கு மன்னிக்கவேண்டுமென்று இரங்குழி, சிவனார்:

"பிழையிதென வச்சமொடு பேச லெமை யீண்டே
விழுமிய தோர்கூ விளையின் மெல்லிலைக ளிட்டு
வழிபடல் புரிந்தனை மனுக் குலமுதித்து
முழுதுலகை யாளு கென முன்னவன் மொழிந்தான்"

இனி, நீ! பிழை செய்தாயென விளம்பற்க. ஈண்டு விழுமிய கூவிளந் தல

கனா லெம்மை நீவிர் அர்ச்சனை செய்தமையாற் மனுக் குலத்துதித்து பல நகர்களுக்கும் பதியாய் வைகுதி என, அவிர்சடையோர் கழறினர். அஃதின் செவ்வியை கனிமுறையால் உணர்வு பெறாதவ்வானரம்; சிவனா ருளிய தருள் வரமெனதெளியாது சாபமெனக்கொண்டு "உலகமுவப்ப வொருநாள் முனிவர்க்கால மிழற் கிழற நான் கிந்து மயர்வற நந்தி மாமுனி தனக்குமுயர் சிவ நெறி மறை யுய்யுமாறருளியு மிருடனை மேனுளிரீஇய இறைவனீர். எம் மினத்தவரும் மற்றோரும் பெரும் பிழைச் செய்தும் காக்கப்பட்டிருக்கின்றனரே. யானே அப்பெரும் பிழைகளுள் ஒன்றுஞ் செய்யாது' இச் சிறு பிழை செய்தமையால் பெரும் சாபத்தை யிடுவது நீதியோ" என மாழ்கி

"நுங்களை வைகலு நோக்கி யுவப்பாய்
இங்குறை கின்ற திகந்து நிலம் போய்
மங்குரு செல்வ வலைப்படுவ னேல்
அலகில் பிரானடி எங்ஙன முய்கேன்"

என, உள்ளம் குமுறிய வண்ணமியம்பி, அகம் ஆற்றாதாய் மீட்டும், 'இறைவனே! நீவீர் அருளியதற்கிணங்க, தரணியிற் போந்து மன்பதையா யுருவெடுத்து பல சம்பத்துடன் நீரிற் குமிழ் போன்ற யாக்கையுடன் வதியின் பிறவியாழியை எங்ஙனம் கடக்கவல்லேம்,' என்று இரங்கிய காலை சிவபெருமானார், 'ஓ! மூசகே! நின்னுள்ளம் தூயது, அத் தூய வுள்ளத்தில் அருள், நாதம்,-ஒளி,-அறிவு,-வடிவாய் எஞ்ஞான்றும், ஒளிவடிவாய் வைகுவேன். வதியுங் காலை நினக்கு ஊறு விளையாதாகலின் துயரற்று, தரணியிற் சிலநாள் வதிந்து அருளும், மெய்யுணர்வும், அற்றவற்கு நின் செய்கையாற் றருளின் பேற்றையும், அறிவின் திட்பத்தையும், யாக்கை நிலையாமையையும், இருதாரத்தின்பத்தின் பாகு பாட்டையும், யுணரப் பெற்றுய்ய அரசாட்சி புரிந்து மீட்டும் ஒளி வடிவோடு இரண்டற கலக்குதி' எனத் தேற்றினர். அத் தேறுதல் மொழிக்கு அமைதியுறாது மீட்டும்,

"பொய் மறையான புலாலுடல் போற்றி
அம்மையில் வாழ்விடை யற்ற மூறாதே
இம்முக னோடுற வெற்கரு ளென்னா
மெய்ம் மூசுவின் கலை வேண்டியதற்றே"

இனி மன்பதைகளின் உடற் கூற்றைப் பெற்றும் மன்மத னழகே வடிவமாக பெற்று வதியின் சிவனாரோடு இரண்டறக் கலக்க யாங்ஙனம் இயலும்.

மன்பதைகள் மேனி அழகும் செல்வப்பொருள் அழகும் என, இவ்விரண்டின் அவாவால் யாக்கை நீரிற் குமிழிக்கு ஒக்குமென்பதையும் மறந்து, யாக்கைக்கும் கற்றதின் நலத்திற்கு பொருள் வேட்கையால், களவு-பொய் அழுக்காறு-வெகுளி-குய்யம் அவா என போன்ற கீழ்மைக் குணத்தினராய் உய்யும் வகை தெள்ளத் தெளியாது மாளாப் பிறவியை யெடுத்து-எடுத்து மாய்கின்றனர். அந்தோ! இறைவரேறே!! எம்மையும் அப்பிறவிப்பிணி பிடியாதிருக்க இவ்வற்ப வடிவுடன் தரணியிற் பிறக்க அருளுமிதுவே எம் பிறவி யாழியைக்காக்கும் காப்பாகும் என்று இரக்கத்துடன் வேண்டிக் கிட்கிந்தை நாட்டில் உதித்து அற அரசாட்சி புரிந்து வதிந்த செய்தி ஒல்காப்புகழும், ஒப்பற்றதும், பல் புலவோர் போற்றியதும், இடைசங்க காலத்தொட்டு இன்று காறும் போற்றப் பெற்று திகழும் கவி திலகர் கம்பர் இயற்றிய ராமாயணத்திற் காண்கின்றோம் அல்லோமோ?

மத மாற்றம்

(தி. மூ. முனுசாமி பிள்ளை.)

நான் ஒரு இந்துவாயிருந்தாலும் கிறிஸ்துவினிடமும் கிறிஸ்து சமயத்திலும் அதிக அபிமானமுடையவன். ஏனென்றால் என் வாழ்நாளெல்லாம் கிறிஸ்துவ சகோதரர்க ளிடத்திலேயே சாவகாசமும் பழக்க வழக்கங்களும் உடையவனாயிருந்து வந்திருப்பது மல்லாமல் பைபிள் புத்தகத்தை ஒரு முறைக்கு இருமுறை வாசித்திருக்கிறேன். நான் அநேக கிறிஸ்துவ பிரசங்கங்களில் அழைக்கப்பட்டிருக்கிறேன். கிறிஸ்து மார்க்கத்தில் என்னைச் சேரவேண்டுமென்று உபதேசிமார்களும் கல்வியில் சிறந்த கிறிஸ்துவ சகோதரர்களும் எவ்வளவோ எனக்கு எடுத்துக்காட்டினார்கள்.

ஆனால் எம்மதமும் சம்மதம் என்ற முடிவுக்கு நான் வந்துவிட்டதாலும் இந்து மார்க்கத்திலும் அதிக விசேஷமான ஆறுதல்கள் ஏராளமாக மலிந்து கிடப்பதால் நான் கிறிஸ்தவனாகவில்லை. இதற்குக் காரணமாயிருந்தது சொற்ப கல்வியறிவும், சாஸ்திர ஆராய்ச்சியுமே ஆகும்.

இந்து மார்க்கத்தையும் கிறிஸ்துவ மார்க்கத்தையும் ஒருவன் நிதான புத்தியோடு ஒத்துப்பார்ப்பானேயாகில் இரண்டொரு கொள்கைகளைத் தவிர சாலோபம், சாமீபம் என்ற பதவி வரையில் கிறிஸ்து மார்க்கம் இழுத்துச் செல்கிறது. சாரூப, சாயுச்ய பதவிகளை மேற்கொண்டு மனம், வாக்கு, காயங் களினால் உணரப்படாத பராபர வஸ்துவரையில் இந்து மார்க்கம் இழுத்துச் செல்கிறது. ஆகையால் சாதாரணமாகப் படித்த இந்துவும் கூட இந்துசாஸ்திர ஆராய்ச்சியில் மனம் தடுமாறிப் போகிறான். அதனால் சில கல்வியறிவு உடையவரும்கூட கிறிஸ்துவ மார்க்கத்தில் மனச்சாந்தி யிருப்பதாக நினைத்து அதைத் தழுவுகிறார். ஆனால் இப்படிப்பட்ட உண்மைக் கிறிஸ்தவர்கள் 1000த்தில் ஒன்று. அவ்வித திடபுத்தியுள்ளவர்களாக பகவத் தியானம் செய்தவர்களிடம் தெய்வத்தன்மை விளங்கியிருக்கக் காணலாம்; உதாரணம் திரு. வேதநாயக சாஸ்திரி, சாது சுந்தர்சிங் ஆகியவர்களே இவர்களுக்கு இந்து மார்க்கம் கரைகாணாத சமுத்திரம்போல் இருப்பதால் மனக்குழப்பம் ஏற்பட்டதின் நிமித்தம் இவர்களுக்கு மனச்சாந்தியை அளிக்க எல்லாம்வல்ல இறைவன் இவர்ளுகளுக்கு கிறிஸ்து மார்க்கத்தில் தெளிவடையட்டும் என்று இதில் தன்னைக் காட்டியருளினாரென்று சொல்லலாம். இதற்கு திருஷ்டாந்தரம் என்னவெனில் மற்ற மார்க்கங்களைப்போல் பிடிவாதமான அறிக்கையை மானிடருக்கு சொல்லாதபடி

"சகல மதங்களிலும் நானே பிரவேசித்திருக்கிறேன்"

"அவரவர்கள் விருப்பத்தை, என்னை எவ்விதமாக பாவித்து தியானிக்கிறார்களோ அதுபோல் அவர்களுக்குத் தோன்றி, பூர்த்தி செய்கிறேன்."

"பிறமதத்தைத் தூஷிப்பவன் என்னையே தூஷிக்கிறவனாயிருக்கிறான்" என்று சொல்லப்பட்டிருப்பது அருமையிலும் அருமையாக இருக்கிறதல்லவா!

இந்தியாவில் மகம்மதியர் படையெடுப்புக்கு முன் இமயமலையிலிருந்து கன்னியாகுமரி முனைவரை எல்லாம் இந்துமதமாகவே யிருந்தது. மகம்மதியருடைய ராஜாங்கத்தில் பல காரணங்களை முன்னிட்டு சிலர் மகம்மதியர்களானார்கள். இவர்களுக்குள் ஏற்கனவே சிறு சிறு ராஜாங்கங்களாக இருந்து ஒருவர்க்கொருவர் சண்டை சச்சரவுகளோடு இல்லாமல் மதப்பிரிவினையும் ஏற்பட்டதால் ஒற்றுமைக் குறைவு பலமாக ஏற்படத் தலைப்பட்டது. சென்ற 500 வருஷங்களாக, ஆங்கிலேயர் பிரவேசத்திற்குப் பின் இரண்டு பிரிவினையாயிருந்தது இப்போது மூன்று பிரிவினைகளாகப் பெருகிவிட்டது. இந்து ராஜ்யத்தில் இந்து மதமும், மகம்மதிய ராஜ்யத்தில் மகம்மதிய மதமும், கிறிஸ்து ராஜ்யத்தில் கிறிஸ்து மதமும் செல்வாக்கு பெற்றது ஒரு ஆச்சரியமல்ல. ஆனால் இன்றைக்கும் 200க்கு 95 பேர் இந்துக்களாயிருப்பதுதான் ஆச்சர்யம்.

மதமாற்றம் என்பது சாமான்யமானதல்ல. சகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்து தனக்குத் தானாகவே மனதுக்கு சாந்தியளிக்கும் என்று தெரிந்து மாற்றிக் கொள்வானானால் அது உண்மை ஞானமாகும். தெய்வப்பற்று உண்மையில் அதிகரித்து அவன் மனோபீஷ்டத்தை நிறைவேற்றச் செய்யும்.

ஒன்றும் அறியாத ஏழைகளுக்கு, மனமாற்றம் செய்யலாமே தவிர, உண்மையான மதமாற்றம் அவர்கள் உள்ளத்தில் பதியாது. இந்து மார்க்கத்தையும் விட்டு, கிறிஸ்து மார்க்கத்திலும் பற்றில்லாதவர்களாக, திரிசங்கு சொர்க்கம் சேருவார்கள் என்றுதான் சொல்லவேண்டும். தற்கால வறுமையில் ஏழைகள் வயிற்றுப் பிழைப்புக்காகவும், சிலர் பெண்களுக்காகவும் டணத்தைக் கருதி மதமாற்றுவது, மதமாறுகிறவர்களுக்கும் மதமாறுதலுக்கு உழைப்பவர்களுக்கும் பெருமை உண்டாகாது.

உலகத்திலே, அதிலும் இந்தியாவில் வயிறு பிழைக்க ஒருவர்க்கொருவர் அன்பு, சமத்துவம், சுதந்தரம் என்பவைகளை, உலக இன்பத்திற்காக, மனிதன் பாடுபடும்போது, இதையே சந்தோஷத்தோடு பகிர்ந்து சாப்பிட மனமில்லாத நம்மனிதவர்க்கம், பரலோக இன்பத்தைப் பிரசங்கம் செய்து பாமர ஜனங்களுக்குப் பணம் கொடுத்து மனமாற்றத்தைத் தேடுவது மிக மிக இழிவானது. "அடி என்றழைக்கப் பெண்சாதியில்லாதபோது பிள்ளைகள் எத்தனை என்று கேட்டானாம் ஒருவன்" என்று ஒரு பழமொழி ஒன்றுண்டு அதைப்போல் இருக்கிறது நம் நாட்டில் மதமாற்ற வியாபாரம்!

சேலத்தில் நிகழ்ந்த மதமாற்றம் கிறிஸ்தவத்திற்கு இழிவை உண்டாக்கிக் கொண்டதேயல்லாமல் பெருமையை உண்டாக்கிக் கொள்ளவில்லை என்பது என் அபிப்பிராயம். கற்றறிந்த உண்மைக் கிறிஸ்தவர்கள் இதைக் கண்டிக்காமல் இருக்கமாட்டார்கள்.

"படிக்கிறது ராமாயணம் இடிக்கிறது பெருமாள் கோயில்" என்பதுபோல் தான் செய்த தவறுகளை உணர்ந்து அதைத் திருத்திக் கொள்ளாமல் பின்னும் கோபம் அடைவது கிறிஸ்தவ மார்க்கத்துக்கே விரோதமான செய்கை.

"நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன." மத்தேயு. 7: 3.

"ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு" மத்தேயு. 5: 39.

என்ற கொள்கையுள்ள புனித மார்க்கத்தை, லஞ்சம் கொடுத்து உபதேசிக்காமல், சகல இந்தியர்களுக்கும் அன்பைக் காட்டி, சமத்துவமாக நடத்தி, சுதந்தரத்தைக் கொடுக்கட்டும். அதன்பின் இந்து மார்க்கம், மகம்மதிய மார்க்கம், புத்த மார்க்கம், கிறிஸ்து மார்க்கம் என்ற சகல மார்க்கங்களையும் ஆராய்ச்சி செய்து அவரவர்கள் மனத்தெளிவு பெற்று, தனக்குத் தானாகவே, ஒரு மார்க்கத்தைக் கடைப் பிடித்துக்கொள்வார்கள்.

இந்து சகோதரர்களில் அநேகர் பிரபுக்களாக இருக்கிறார்கள். இவர்களில் சிலர் டாம்பீகமான செலவுகள் செய்து தங்களைப் பெருமைப்படுத்திக் கொண்டு வாழ்நாளைக் கழித்துவிடுகிறார்கள்.

சில இந்து கனவான்கள் பட்டப் பெருமையில் தனத்தை செலவழிக்கிறார்கள். சிர்ல ஓட்டு கொடுப்பதற்கும் மறைமுகமாக செலவு செய்கிறார்கள். சில வைதீக இந்துக்கள் கோயில் கட்டுவதும், சத்திரம் கட்டுவதும் அல்லது தன் சொத்துக்களை கோயிலுக்கு எழுதி வைத்துவிட்டும் போய்விடுகிறார்கள்.

தற்போதைய இந்துக்கள் நிலைமையில் அவசியமாகச் செய்யவேண்டிய தர்மங்கள்:—

1. தாய் தந்தையர்களில்லாத பிள்ளைகளுக்கு ஆகாரம் கொடுத்து கல்வி கொடுப்பது.

2. ஏழைகளுக்கு நெசவுச்சாலை, கைத்தொழிற்சாலைகளைத் திறந்து வேலை கொடுத்தல்.

3. ஒவ்வொரு மகம்மதிய, கிறிஸ்தவ, இந்துப் பள்ளிக்கூடங்களில் அவரவர்களுக்குரிய மத தத்துவங்களைக் கற்பித்தல்.

4. தீண்டாமையை அடியோடு களைதல் இவைகளைச் செய்வதில் ரூபாயைத் தாராளமாகச் செலவிட்டால் அதனால் அவர்கள் இகத்திலும் பரத்திலும் நன்மை அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

மதப் பிரசாரத்தில் ஈடுபட்டு அதில் தெளிவடைய வேண்டுமென்று விரும்புகிற எவரும், முதல் முதலில் தன் சொந்த மதஞானத்தைப் பெற்றாலொழிய பிறமத உபதேசங்களைக் கேட்க உரியவரல்லர். கல்வியறிவில்லாத சாதாரண ஜனங்களும், கற்றறிந்தும் மதஞானமில்லாத ஜனங்களும் உபதேசியார் முன் ஒன்றும் கிரகிக்க முடியாதவர்களாக இருப்பார்கள். அதாவது தன் மதத்தின் அறிவைப் பெறாத எவனும் பிற மதத்தைக் கேட்டு மயங்குவதென்பது அசட்டுத்தனம் என்பதே என் அபிப்பிராயம்.

நீங்கள் வீட்டிலிருந்தபடியே
பல தேசங்களின் இனிய பாட்டுக்களைக்
கேட்கவேண்டுமா ?

அல்லது

நினைத்த இடங்களுக்கு சிறிதும்
சிரமமும் செலவுமின்றிச்
செல்லவேண்டுமா ?

ஒரு உயரிய

ரேடியோ செட்டும்

ஒரு சிறந்த

பி. எஸ். ஏ. சைக்கிலும்

உங்களுக்கு இலவசமாக
அளிக்கப்படப்போகின்றன !

**இந்த அரிய சந்தர்ப்பத்தை
இழக்கவேண்டாம் !**

விபரங்களுக்கு அக்டோபர் 1-ந் தேதி
பிரசண்ட விகடனைப் பாருங்கள்.

வாடகைக்கு அறை பார்க்க வந்தவர்:—இந்த மாடி அறை நன்ருகத் தான் இருக்கிறது. ஆனல் கீழே தொழிற்சாலை இருப்பது எனக்குப் பிடிக்க வில்லை.

வீட்டுக் குடையவர்:—அது வெடி மருந்து தொழிற்சாலை. அது நீடியாக இருக்காது. என்றைக்காவது தீப்பற்றிக் கொண்டால் பிறகு இங்கே இருக்காது.

***

மதுவிலக்குப் பிரசாரகர்:—நான் எதனல் இந்த உயர்ந்த உத்தியோகத்திற்கு வந்தேனென்று உங்களுக்குத் தெரியுமா?

குடிகாரன் ஒருவன்:—"குடியினல்."

***

பையன்:—அம்மா! என் அழுகிருய்?

அம்மா:—அண்ணன் செத்து விட்டாண்டா!

பையன்:—நீ தான் அன்றைக்கு 'கட்டைலே போக' என்று அவனைத்திட்டினயே!

***

நூலாசிரியர்:—புருஷன் மனைவிகளுக்குள் நடக்கும் சச்சரவுகளைப்பற்றி நான் புதிதாக ஒரு நாடகம் எழுதி யிருக்கிறேன் பார்த்தீர்களா!

பக்கத்து வீட்டார்:—இல்லை; இரண்டு நாட்களாக நீரும் உமது மனைவியும் அதை நடித்துக் கொண்டிருக்கிறதைக் கேட்டுக்கொண்டுதான் வருகிறேன்.

உபாத்தியாயர்:—அடே சுப்பா, பள்ளிக்கூடம் வருவது எதற்காக?

சுப்பன்:—வீட்டில் அடக்குத்தனம் செய்வதற்காக சார்.

***

"எனக்கு ஹோட்டலில் சாப்பிடுவது தான் அதிகப் பிரியம்."

"ஏன் உங்கள் மனைவி சமைப்பது அவ்வளவு நன்றாயில்லையோ?"

"இல்லை, ஹோட்டலில் அதைக் கொண்டுவா இதைக் கொண்டுவா, என்று அதிகாரம் பண்ணிக்கொள்ளலா மல்லவா."

***

நாட்டுப் புறத்தான்:—"இந்த முன் பற்கள் இரண்டையும் பிடுங்க என்ன சார்ஜ்?"

பல் வைத்தியர்:—"ஐந்து ரூபாய் ஆகும்."

நாட்டுப் புறத்தான்:—"போய்யா. போகிற வழியில் ஒரு முரடனை வலியச் சண்டைக்கு இழுத்தால் போச்சு."

வைத்தியர்:—நீர் இங்கு வருவதற்கு முன் எந்த வைத்தியரிடமாவது யோசனை கேட்டதுண்டா?

நோயாளி:—வைத்தியகலாசாலை மாணவர் ஒருவரிடம் யோசனை கேட்டேன். அவர் என் நண்பர்.

வைத்தியர்:—அவர் புத்தியில்லாமல் யோசனை கூறியிருப்பார்.

நோயாளி:—தங்களிடம் போனால் சொஸ்தமாகும் என்று சொன்னார்.

***

டிக்கட் கொடுப்பவன்: "அம்மா! இந்த அணா செல்லாது."

பெண்:—"இதோ பார். அதில் 1921-ம் வருஷத்து முத்திரை யிருக்கிறது. இப்போது இது செல்லாது என்றால் கடந்த பதினாலு வருஷங்களாக இது எப்படிச் செல்லாகிக்கொண்டு வந்தது? சொல்லு பார்க்கலாமே."

***

புத்தகம் வாங்க வந்தவர்:—ஐயா, உங்கள் குமாஸ்தா வாயாடியாக இருக்கிறார். கதைக் கொத்து மலர் இருக்கிறதா என்று கேட்டதற்கு "விக்கிரமாதித்தன் கதை நன்றாக இருக்கும், வாங்கிப்போம்" என்கிறார்.

சொந்தக்காரர்:—விக்கிரமாதித்தன் கதை நன்றாயிராதென்று நினைக்கிறீர்?

***

சுப்பன்:—டேய் என்றி, என் கோட்டு முழுவதும் நனைந்திருக்கிறது?

என்றி:—அப்பா! எங்கள் ஸார், ஒரு குளத்தை வரையச் சொன்னார்!

சுப்பன்:—சொன்னால் என்ன?

என்றி—அதில் தண்ணீர் இருப்பதுபோல் 'வரையச் சொன்னார், அதனால் அதில் ஜலம்விட்டேன்.

***

இரண்டு பிள்ளைகளுக்குள் சண்டை உண்டாயிற்று. ஒருவன் மற்றவனைப் பார்த்து, "பேசினால் பல்லை உதிர்த்து விடுவேன்" என்றான். வசவுச் சொல்லை ஏற்றுக்கொண்டவனுக்கு உதவியாக நின்ற வேறொரு சிறுவன், "நீ எங்கள் ராமுவின் பல்லை உதிர்த்து விட்டால் எங்கள் அப்பா நல்ல பல்லை வைத்து விடுகிறார். அப்பொழுது?" என்றான்.

இருட்டில் வெளிச்சந் தரும் துப்பாக்கி

இருட்டா யிருப்பினும் வைத்த குறி தவறாது சுடக்கூடிய துப்பாக்கி யொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது, சுடுபவர் குறி வைக்கும் பொருளின்மீது தானாகவே பிரகாசத்தைத் தருகிறதாம்.

***

இறந்த பெண்ணுக்குக் கடிதம்

1877-ம் ஆண்டு மார்ச்சு மாதம் மூதல் தேதியன்று ஆடவரொருவர் ஒரு மங்கைக்குக் கடிதமெழுதி யிருந்தாராம். அக்கடிதம் அப்பெண் இறந்து 30 ஆண்டுகளான பின்னர், இப்பொழுதுதான் அவளது விலாசத்துக்குக் கிடைத்ததாம்.

***

மோட்டார் பஸ்களில் ரேடியோ சங்கீதம்

கராச்சி முதலிய இடங்களில் ஓடும் மோட்டார் பஸ்களில் ஜனங்கள் ஏராளமாக ஏறுவதற்காக, ரேடியோக்களை வைக்க ஏற்பாடு நடைபெறுவதாகத் தெரிகிறது.

***

கருப்பு முட்டையிடும் வாத்து

டர்காம் என்னுமிடத்திலுள்ள ஒரு வாத்து கறுப்பு நிறமுள்ள முட்டைகளை யிட்டு வருகிறதாம். டாக்டர்கள் ஆச்சரியமுற்று இதன் காரணமறிய ஆராய்ச்சி செய்து வருகிறார்களாம்.

***

நீர்க் குமிழியில் மீன் வீடு

"நீரில் குமிழி இளமை' என்று நிலையாமைக்கு நீர்க்குமிழியை உதாரணங் கூறிச் சென்றனர் பெரியோர். தோன்றிய கணத்திலேயே அழியக்கூடியது நீர்க் குமிழியின் தன்மை என்பதை நாமும் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். அத்தகைய நீர்க்குமிழியில்கூட ஒருவகை மீன்கள் வசிக்கின்றனவென்றால்—அக் குமிழிகளைத் தங்கள் வீடுகளாக உரிமைப் படுத்திக்கொள்ளுகின்றன என்றால் அதை என்னென்பது! இந்த மீன் கடலினுள் இருந்தபடியே மூச்சுவிட்டு சிறு குமிழிகளை உண்டுபண்ணுகிறதாம். அவ்வாறு ஏற்பட்ட குமிழிகள் நீர் மட்டத்துக்கு வந்ததும், அவை உடனே அழிந்துபோகாமலிருக்கவேண்டி அம்மீன் ஒருவித பசையை அவைகளின்மீது தடவிவிடுமாம். எனவே குமிழிகள் உடைந்து போகாமல் அடுக்கடுக்காய் மேலே வந்து ஒன்று சேர்ந்துவிடும். இவ்விதம் ஏற்பட்ட குமிழி வீட்டில் அம்மீன் குடிபுகுந்து, முட்டையிட்டுப் பொரித்து குஞ்சுகளோடு வாழ்ந்து வருமாம். என்னே ஆச்சரியம்!

ஜெர்மனியிலுங் கூட 2,375, 485 விதவைகள் இருக்கின்றனராம்.

*   *   *   *

வைரக் கார்ப்பொரேஷனில் கோழி முட்டையளவுள்ள வைர மொன்று இருக்கிறது. இது போன்ற பெரிய வைரம் உலகிலெங்குமே கிடையாதாம்.

*   *   *   *

பனையோலை (5373 ஏடுகள் கொண்டது) களில் எழுதப் பட்ட பைபிள் (கிறிஸ்துவ வேதம்) கோட்டிஞ்சென் வாசகசாலையில் வைக்கப்பட் டிருக்கிறதாம்.

*   *   *   *

மனிதர் உடலில் ஓடும் ரத்தம் மணிக்கு 7 மைல் வேகத்தில் ஓடிக் கொண்டிருக்கிறதாம். வருடமொன்றுக்கு 60,000 மைல் ஓடுகிறதாகக் கணக்கெடுத் திருக்கிறார்கள்.

*   *   *   *

ஆப்பிரிக்கா காடுகளில் நீரே குடிக்காத ஒருவகை மான்கள் இருக்கின்றனவாம்.

*   *   *   *

ஒரு அவுன்ஸ் தங்கத்தை 146 சதுர அடி விஸ்தீரணத்துக்குத் தகடாக்கி விடலாம்.

*   *   *   *

ஷிலுக் நீக்ரோவர் ஒருவருக்குக் கை விரலைப் போன்று 5 கொம்புகள் இருக்கின்றனவாம்.

*   *   *   *

அமெரிக்காவிலுள்ள ஒவ்வொரு பெண்ணும், துணி மணிகளுக்காக மட்டும் சராசரி வருஷத்தில், 52 பவுன் செலவு செய்கிறாளாம். அவ்வாறே, சிகரெட்டுகளுக்கு 4 பவுன் செலவாகிறதாம்.

*   *   *   *

விவாகமான மகளிரே நெடுங்காலம் உயிர் வாழ்ந்திருக்க முடியு மென்றும், கன்னிப் பெண்கள் விரைவில் இறந்து போய் விடுவார்க ளென்றும் ஒரு டாக்டர் கூறுகிறார்.

*   *   *   *

ஆஸ்திரியாவில் மொத்த ஜனத் தொகையில் 104 ஆண்களுக்கு ஒரு பெண் விகிதம் தான் இருக்கிறாளாம். இதனால், மேற்கு ஆஸ்திரியாவில் 34,000 மனிதர்கள் கலியாணஞ் செய்து கொள்ள வியலாதவர்களா யிருக்கிறார்களாம்.

*   *   *   *

கோஸ்டாரிகான் என்னும் ஒருவகை விளக்கு, ஒரு பூச்சியின் அளவே இருக்கிறது. ஆனால் அவ் விளக்கின் வெளிச்சத்தில் நன்றாகப் பத்திரிகை படிக்கலாம் என்று கூறப்படுகிறது.

ஆசிரியர் குறிப்புக்கள்

ஜவஹர்லால் நேரு விடுதலை

இவ்வளவு நாளைக்குப் பிறகாவது பண்டித ஜவஹர்லால் நேருவை விடுதலை செய்ய வைஸிராய் உள்ளத்தில் அருள் சுரந்தது கண்டு மகிழ வேண்டியதே. சிகிச்சையின் பொருட்டு ஸ்ரீமதி கமலா நேரு தமது குமாரியுடன் ஐரோப்பா சென்றிருப்பது நேயர்களுக்குத் தெரியும். இந்த அம்மையாரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாயிருக்கிறது. இவ்வுண்மையை பாடென்வீலர் வால்டெக் ஆரோக்கிய நிலைய வைத்திய நிபுணர் இந்திய வைஸிராய்க்குத் தந்திமூலம் தெரிவித்தார். இதை அறிந்த வைஸிராய்ப் பிரபு பண்டித ஜவஹர்லால் நேரு விடுதலையடைந்து ஐரோப்பாவுக்குப் போய்த் தமது மனைவியைக் காணலாம் என்று உத்தரவு செய்து விட்டார். இதிலும் ஒரு குறுகிய புத்தி. பண்டிதர் அநேகமாய்த் தமது தண்டனைக் காலத்தைச் சிறையிலேயே கழித்துவிட்டார். மீதிக்காலம் இன்னும் ஆறுமாதமே இருக்கின்றது. இதை விட்டுக் கொடுக்க வைஸிராயின் திருவுள்ளம் விரும்பவில்லை. இந்த ஆறுமாதத்தை நிறுத்தி வைத்திருப்பதாகவே உத்தரவில் குறிப்பிட்டிருக்கிறார். அதாவது பண்டித ஜவஹர்லால் நேரு ஐரோப்பாவுக்குப் போய் மீண்டபிறகு மறுபடியும் சிறையிலிருக்க வேண்டுமென்பதே வைஸிராயின் நோக்கம். சட்டமறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்டிருக்கும் இக்காலத்தில் பண்டிதருக்கு பூரண விடுதலையும் அளித்துவிட்டால் குடியா முழுகிவிடும்? ஸ்ரீமதி கமலா நேரு ஐரோப்பாவுக்குப் பிரயாணமாகிய போதே பண்டிதரை விடுதலை செய்திருந்தால் அம்மையாருக்கு மிகவும் உதவியாகவும் ஆறுதலாகவும் இருந்திருக்கும். அப்பொழுது அரசாங்கத்தாரின் மனம் இரங்கவில்லை. இப்பொழுதும் தாரான புத்தி காட்டவில்லை. இச்சமயம் இதை விரித்துக்கொண்டிருப்பது அநாவசியம் என்றே கருதுகின்றோம். தியாக புருஷரான பண்டிதர் குடும்பம் கவலையில் ஆழ்ந்து கிடக்கிறது. இங்கே தம்மைப் பெற்றெடுத்த அரும்பெறல் அன்னையார் தள்ளாத வயதில் கடும் நோய்வாய்ப்பட்டிருக்கிறார். அங்கே தமது உயிர்த் துணைவியார் அல்லற்பட்டுக்கொண்டிருக்கிறார். இந்நிலையில் பண்டிதர் விடுதலை பெற்றதானது ஒருவாறு மகிழ்ச்சிக்குரியது. இவர் அன்னையாரைப் பார்த்துவிட்டு ஐரோப்பா செல்லுகிறார். தமது உயிர்த்துணைவரைக் காணும் மகிழ்ச்சியால் ஸ்ரீமதி கமலா நேருவின் உள்ளத்தில் உற்சாகம் அரும்பி உடலும் நலம்பெறும் என்று எதிர்பார்க்கின்றோம். விரைவில் அம்மையார் உடல் நலம் பெற்று உயிர்க் கணவரோடு இங்கே வரவேண்டும் என்று பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

"ஜீவகாருண்ய வெடிகுண்டுகள்"

உலகில் யுத்தமே கூடாது—யுத்த தளவாடங்களையெல்லாம் குறைத்து விடவேண்டும் என்ற உணர்வு அரும்பியிருக்கும் இக்காலத்தில் ஒரு நாகரிக அரசாங்கம் ஆகாய விமானங்களிலிருந்து குண்டுமாரி பொழிதல் வருந்தத்

தக்கதாகும். எல்லைப்புறத்தில் விரோத உணர்ச்சியுள்ளவர்களை அடக்க இந்திய அரசாங்கத்தார் குண்டுமாரி பொழியும் முறையை மேற்கொண்டு வருகின்றனர். இதைப்பற்றி விவாதிக்க டாக்டர் கான்சாஹிப் இந்திய சட்டசபையில் ஒரு அவசரப் பிரேரபணை கொண்டு வந்தார். "எனது கிராமத்துக்கருகில் வெடிகுண்டு எறியப்பட்டது. நானே விமானங்கள் பறந்து சென்றதைப் பார்த்தேன். கிராம வாசிகளுக்கு இது பற்றி எச்சரிக்கை செய்யப்படவில்லை. வெடிகுண்டு எறியப்பட்ட பிறகுதான் அவர்கள் அதைப்பற்றித் தெரிந்து கொண்டார்கள். எல்லைப்புற ஜாதியார் எப்போதும் பிரிட்டிஷ் பிரதேசத்தில் தொல்லை விளைத்ததில்லை. அங்ஙனமிருக்கையில் அவர்களிருக்குமிடத்தில் புகுந்து அவர்களைத் துன்புறுத்துவான் ஏன்? இவ்விதம் ஆத்திரமூட்டுவது நிற்கவேண்டும்" என்று டாக்டர் கான்சாஹிப் பேசினார். இதற்கு ராணுவக் காரியதரிசி மிஸ்டர் டாட்டன்ஹாமும் அந்நிய நாட்டு இலாகாக் காரியதரிசி மிஸ்டர் அக்கிஸனும் சமாதானம் கூற முயன்றனர். "வெடிகுண்டு போடுவதற்கு முன் அதாவது 24 மணி நேரத்துக்கு முன் வீடுகளைக் காலி செய்யுமாறு எச்சரிக்கை செய்யப்படுகிறது. விரோத உணர்ச்சியுடன் கூடிய எல்லைப்புற ஜாதியார் வசிக்குமிடங்களில் தான் வெடிகுண்டு எறியப்படுகிறது. உயிர்ச்சேதமின்றி எல்லைப்புற ஜாதியார் பணிந்து போக வேண்டும் என்பதற்காகவே இவ்விதம் செய்யப்படுகிறது. இதுதான் சிக்கனமுறை. மிகவும் ஜீவகாருணியத்துடன் கூடிய முறை" என்று மிஸ்டர் டாட்டன்ஹாம் கூறினார். மிஸ்டர் அக்கிஸன் "1908-ஆம் வருஷத்திலும் தொல்லை நேர்ந்தது. 1915-முதல் 1917-வரை அவர்களுடன் போராட நேர்ந்தது. இப்போது வட முகமந்து பிரதேசம் விரோத உணர்ச்சி காட்டி வருகிறது. பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து மிக்க அபாயகரமான பிரஷ்டர்களும் கொள்ளைக்காரர்களும் அங்கே போய்த் தங்கியிருக்கின்றனர். இவர்கள் கொள்ளையடித்தும் கொலை செய்தும் வருகின்றனர். 1927–30–32–33–34–35 ஆண்டுகளில் விடாமல் தொல்லை விளைத்து வந்து கொண்டிருக்கின்றனர். ஆகையால் வெடிகுண்டு எறியும் ஜீவகாருணியமுறை கைக் கொள்ளப்பட்டு வருகிறது" என்றார். இவர்கள் இருவரும் கூறிய சமாதானம் எவ்வகையிலும் திருப்தி அளிக்கவில்லை. யாரோ கொள்ளைக்காரர்கள் இருக்கிறார்கள் என்பதற்காக நிரபராதிகளான பாமர மக்கள் மீது குண்டுமாரி பொழிவது நீதியா என்று கேட்கின்றோம். சரியானபடி முன்னெச்சரிக்கை செய்யப்படவில்லை என்றும் இவ்வெச்சரிக்கை விளம்பரங்களைத் தெரிந்து கொள்ளும் கல்வியறிவும் இவர்களுக்கு இல்லை என்றும் எடுத்துக்காட்டப்பட்டது. சர்க்கார் அதிகாரிகள் எச்சரிக்கை செய்தது உண்மை என்று வைத்துக்கொண்டாலும் அதனால் கருதிய பயன் கைகூடுமா? எச்சரிக்கைகளைக் கண்டவுடன் சர்க்கார் கண் வைத்துக்கொண்டுள்ள விரோதிகளும் தப்பித் தலைமறைவாகி விடுவார்களே! இதற்கென்ன செய்வது? எனவே வெடிகுண்டு எறியும் கோர முறையை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று டாக்டர் கான்சாஹிப் கொண்டுவந்த அவசரப் பிரேரபணையை இந்திய சட்டசபை நிறைவேற்றி வைத்தது பாராட்டத் தக்கதாகும். இது காங்கிரஸ்காரர்களின் வெற்றி என்பதில் ஐயமில்லை. இத்தீர்மானத்திற்கேற்ப அரசாங்கத்தார் நடந்து கொள்ளுவதே அறிவுடைமை ஆகும்.

குடியானவர் சங்கங்கள்

இந்தியா விவசாய நாடு. இந் நாட்டின் பொருளாதாரச் செழுமை விவசாயிகளின் வாழ்க்கைச் செழுமையையே பொறுத்திருக்கிறது. விவசாயிகள் இப்போது அநுபவித்து வரும் கஷ்ட நஷ்டங்கள் அளவில் அடங்கா. கடன் தொல்லைகளாலும், வரிப்பளுவாலும், விளைபொருள்களின் விலை வீழ்ச்சியாலும், கக்ஷிச் சண்டைகளாலும், கோர்ட்டு வழக்குகளாலும் குடியானவர்கள் தலைதூக்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். நமது நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரசியல்—சமூகவியல் கிளர்ச்சிகள் இன்னும் சரியானபடி கிராமங்களைத் தொடவில்லை. நகரங்களில் மட்டும் அடிக்கடி ஆர்ப்பாட்டங்களைக் காண்கின்றோம். நாட்டின் அஸ்திவாரமாய் விளங்கும் கிராமங்களை வசப்படுத்தாத எத்தகைய பொதுநலக் கிளர்ச்சியும் உருப்படப் போவதில்லை என்று அநுபவத்தில் விளங்கி விட்டது. இவ்வுண்மையை நன்கு அறிந்து கொண்ட காந்தியடிகள் காங்கிரஸிலிருந்து விலகிக் கிராம முன்னேற்றத்தில் கருத்தைச் செலுத்த முனைந்து நிற்பது பெரிதும் கவனிக்கத் தக்கதாகும். தமிழ்நாட்டில் இரண்டொரு ஜில்லாவில் ஏதோ ஒவ்வொரு சமயத்தில் மிராஸ்தார் கூக்குரல் கிளம்புகிறது. வரிப்பளுவைக் குறைக்க வேண்டும் என்ற சப்தம் கேட்கிறது. அவ்வளவு தான். கிராமங்கள்தோறும் குடியானவர்கள் சங்கங்கள் கண்டு ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் தங்கள் முன்னேற்றத்திற்குப் பாடுபடும் உணர்ச்சி இன்னும் அரும்பவில்லை என்றே சொல்லலாம். இந்தியாவின் மற்றப் பாகங்களில் குடியானவர் இயக்கம் நாளுக்கு நாள் வலிமை பெற்று வருவதாக அறிகிறோம். ஆந்திர நாட்டில் ஆசிரியர் ரங்கா பிரபல காங்கிரஸ் தலைவர்களில் ஒருவர். சிறந்த அறிஞர். விவசாயிகளின்—ஏழைத் தொழிலாளர்களின் தோழர். இவர் குடியானவர்களும் விவசாயத் தொழிலாளர்களும் ஒன்றுபட்டு ஒரு அகில இந்திய ஸ்தாபனத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் என்று எண்ணி ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். இவர் கூறுகிறபடி இப்பொழுதுள்ள நிலைமையில் குடியானவர்களும் விவசாயத் தொழிலாளரும் தங்கள் நன்மைகளுக்குத் தங்களை நம்பியிருத்தலே சிறந்தது என்று நாம் கருதுகின்றோம். தென்னிந்தியக் குடியானவர்கள் சம்மேளனம் ஒன்று காணப்பட்டிருப்பது நேயர்கள் அறிந்திருக்கலாம். இது ஆசிரியர் ரங்காவின் இடையறாத முயற்சியால் ஏற்பட்டது. இவர் இதை அகில இந்திய ஸ்தாபனமாகச் செய்ய வேண்டும் என்றும் அதற்குச் சௌகரியங்கள் இருக்கின்றன என்றும் நம்புகின்றார். குடியானவர்கள் தங்களுக்குரிய குறைந்த பக்ஷமான கோரிக்கைகளை வகுத்துக் கட்டுப்பாடாக வற்புறுத்தாவிட்டால் அவர்களுடைய நலங்கள் கவனிக்கப்படமாட்டா என்றும் ரங்கா எச்சரிக்கை செய்கிறார். காங்கிரஸ் தலைவர் பாபு ராஜேந்திர பிரஸாத் அவர்கள் இங்கே விஜயம் செய்யும்போது இவரது தலைமையில் ஒரு குடியானவர் கோஷ்டி பேட்டி காணப்போவதாகவும் தெரிகிறது. தமிழ்நாட்டிலுள்ள குடியானவர்களும் இதில் முக்கிய பங்கெடுத்துக் கொள்ளவேண்டும் என்று விரும்புகின்றோம். ஒவ்வொரு ஜில்லாவிலும் கிராமங்கள்தோறும் குடியானவர் சங்கங்கள் தோன்றவேண்டும் என்பது எமது வேட்கை.

நீல அறையின் மர்மம்

(எஸ். எஸ். வாஸன்.)

(158-ம் பக்கத் தொடர்ச்சி.)

வரதராஜ முதலியார்:— ஆம். ஆனால் உம்முடைய உதவிதான் முக்கியமாய் வேண்டியிருந்தது. இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளிலிருந்து ஏராளமாக எவரொருவருக்குப் பணம் வர வேண்டுமோ அவரை 'வயாஞு'வின் உதவியால் மரண மயக்கத்திற்குட்படுத்தி இம் மயக்கத்திலிருக்கும் போது ஒரு போட்டோ பிடித்து உம்முடைய மரண ஸர்டிபிகேட்டையும் பெற்றுக் கொண்டு, இந்த போட்டோவையும் மரண ஸர்டிபிகேட்டையும் இன்ஷியூரன்ஸ் கம்பனிக்கு அனுப்பி விட்டால் இம் மனிதருக்குச் சேரவேண்டிய பணம எங்களிடம் வந்து சேர்ந்து விடுமல்லவா?............இதுவே தான் சபாபதியின் ஆழ்ந்த யோசனை! இதற்காகத்தான் அவனும் நானும் படாத பாடு பட்டோம்.....................

நான்:—(இவர்களுடைய ஆழ்ந்த கருத்தை நினைத்து அச்சமும் ஆச்சரியமுங்கொண்டு) நல்லது; நான் மீனாளைக் கொலை செய்ய மறுத்த பிற்பாடு என்ன நடந்தது?

வரதராஜ முதலியார்:—நீங்கள் மறுத்துவிட்டபடியால் சபாபதி உங்களுக்கு ஒரு விஷச்சுருட்டைக் கொடுத்துவிட்டான். நீங்கள் மெத்தையறைக்குப் போன சில நிமிஷங்களுக்கெல்லாம் மயக்கமுண்டாகி ஸ்வாதீனமற்றுக் கீழே விழுந்துவிட்டீர்கள். தகுந்த வேலைகள் செய்து நீங்கள் பிரக்ஞையில்லாமலிருக்கும்போதே உம்மைக் கப்பலில் ஏற்றிவிட்டோம். நீங்கள் திரும்பிச் சென்னைக்கு வந்துவிட்டால், நீர் மீனாளை ஏமாற்றி அவளைக் கலியாணஞ் செய்துகொண்டதாக உம்மைப் பயமுறுத்தவேண்டுமென்பது எங்கள் கருத்து; இப்படிப் பயமுறுத்தி உம்முடைய உதவியை மறுபடியும் பெற்றுக்கொள்ளலாமென்று நம்பி இவ்விதம் உம்மைக் கப்பலில் ஏற்றிவிட்டோம்.

நான்:—இந்தக் கடிதத்துண்டு?—'சாரதா' என்ற பெயருள்ள இக் கடிதத்துண்டு மீனாளின் ஜேபியில் இருக்கக் காரணமென்ன?

வரதராஜ முதலியார்:—மீனாள் என் வீட்டுக்கு வருவதற்கு முதல்நாள் நானேதான் இக்கடிதத்தை யவளுக்கு அனுப்பினேன். இதன் தாற்பரியம் என்னவென்று அவள் என்னைக் கேட்க வருவாளென்பது என் கருத்து. இதைத் தன் ஜேபியில் போட்டுக்கொண்டு வந்துவிட்டாளென்று தெரிகிறது.

நான்:—(மாசிலாமணி முதலியார் வீட்டிலிருந்தெடுத்த போடோவைக் காண்பித்து) இந்த போடோ?............... இதன் விஷயமென்ன?

வரதாராஜன்:—மீனாள் மரணமயக்கத்திலிருந்தபோது இந்த போடோ எடுக்கப்பட்டது. "இந்தியா இன்ஷியூரன்ஸ் கம்பெனி"யில் மீனாளுக்கும் பணம் சேரவேண்டுமென்பது தெரிந்து இந்த போடோவை யெடுத்தோம். சபாபதியும் மாசிலாமணி முதலியாரும் சிநேகிதர்கள். சபாபதியிடமிருந்த போடோவை மாசிலாமணி முதலியார் பார்த்து, போடோவிலிருப்பவள் சவம்போல் தோன்றினாலும் அழகு குலைபடாமலிருந்தபடியால் அதைத் தன் பங்களாவுக்கு எடுத்துக்கொண்டு போய்விட்டாரென்று நினைக்கிறேன்......... உங்களுக்குக் கலியாணமான இரண்டுநாட்களுக்குப் பிறகு நானும் சபாபதியும் ரகசியமாக உங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். இதைப் பாலாமணியம்மாள் மறைந்திருந்து கேட்டுவிட்டாள். மீனாளின் கழுத்தில் திருமங்கிலியம் இருப்பதையவள் பார்த்துக்கொண்டும் நாங்கள் பேசிக்கொண்டிருந்ததி லிருந்து நீங்களே மீனாளுடைய கணவனென்று அந்தம்மாள் சந்தேகித்து உம்மைத் தேடிக் கண்டு பிடித்துவிட்டாளென்று நினைக்கிறேன். உம்முடைய நண்பர் ஜகந்நாதனைப் பாலாமணியம்மாளுக்கு வெகு காலமாய்த் தெரியும். மீனாளுக்கும் டாக்டர் ஜகந்நாதனைச் சில மாதங்களாய்த் தெரியும்.

நான்:—அப்பால் என் மீனாளுடைய உதவியை நீங்கள் நாடவில்லை?

வரதாராஜமுதலியார்:—ஏனென்றால் மீனாள் குருவிக்காரன் தெருவு வீட்டு மெத்தையறையில் ஸ்மரணையற்றிருக்கும்போது சபாபதி மீனாளை யுற்றுப் பார்த்தான். உடனே மீனாள் தன்னுடைய மகளென்று கண்டுவிட்டான்!—என்றான்

இதைக் கேட்டதும் மீனாள் "என்ன! நான் சபாபதி முதலியாரின் புத்திரியா! என் தந்தையா அவ்வஞ்சகன்!" என்று ஆச்சரியத்துடன் கத்தினாள். தன் தந்தையின் நிலைமையை நினைத்து அவள் மிக்க வருத்தப்பட்டாள். நான் பரிதாபங்கொண்டேன்.

வரதாராஜ முதலியார்:—(மீனாளைப் பார்த்து) நீ தன்னுடைய மகளென்று உன் மார்பிலிருக்கும் குறியை யவன் பார்க்கும் வரையில் அவனுக்குத் தெரியாது. அந்தக் குறி உன்னுடைய மார்பில் நீ குழந்தையாயிருக்கும்போது அவனால் போடப்பட்டது. தன் மகள் இவ் விஷயங்களில் சம்பந்தப்படக்கூடாதென்று அவன் உன்னைப் பீப்பில்ஸ் பார்க்குக்குக் கொண்டுபோய் உன்னுடைய மயக்கந் தீர வேறு மருந்து கொடுத்துவிட்டு மறைந்துவிட்டான்......சபாபதியின் முதல் மனைவியால் நீ பிறந்தவள். நீ ஒரு வயது குழந்தையாயிருக்கும்போதே உன் தாயார் இறந்துபோய்விட்டாள். அப்பால் உன்னை அநாதைக் குழந்தைகள் வளரும் ஆஸ்பத்திரியில் விட்டுவிட்டார்கள். உன்னுடைய தந்தை சபாபதி தன்னிஷ்டப்படி உன்னைக் கவனியாமல் கொள்ளைக்காரர்களுடன் சேர்ந்து அநியாய வழியில் திரும்பிவிட்டான். கடைசியில் உன் தந்தையிந்த சாரதாவை மணம்புரிந்துகொண்டான்—என்றான்.

தக் கேட்டதும் என் காதலி "இவ் விஷயங்கள் நம்பத்தக்கதாகவேயில்லை" என்று கூறினாள். உண்மையில் மீனாளுக்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவேயில்லை.

நான் மீனாளைப் பார்த்து "ஆனால் நான் முதல் முதல் உன்னைப் பாலாமணியம்மாள் வீட்டில் பார்க்கும்போது உன்னைக் கோகிலமென்று அழைத்தாளே?" என்று சொல்ல அவள் "எனக்கென்ன பெயரென்று எனக்கென்ன தெரியும்?" என்றாள். இது கேட்ட வரதாராஜ முதலியார் "உன் உண்மையான பெயர் கோகிலந்தான். கோகிலமென்றுதான் உன்னை அநாதையாஸ்பத்திரியில் அழைத்தார்கள். இந்தப் பெயர் பாலாமணியம்மாளுக்குத் தெரியும்" என்றான்.

"எதற்கும் நான் என் தந்தையையே நேரில் கண்டு என்னுடைய பெயர் என்னவென்று கேட்கின்றேன்—இப்பொழுது என் தந்தையெங்கே?" என்று கேட்க உடனே வரதாராஜ முதலியார் மிக்க வருத்தமுற்றவனாய் "ஆ! நீ பாக்கியமற்றவள்!......சபாபதி இறந்துபோய்விட்டான்" என்றான்.

"ஆ! என்ன! என் தந்தை இறந்துபோய்விட்டாரா?" என்று மீனாள் கதறினாள்.

"ஆம்; நேற்றையதினம் தற்செயலாக உன் தந்தை 'வயாலு'வைத் தொட்டுவிட்டான். விஷம் அதிகமாய்த் தேகத்திற்குள் சென்றுவிட்டபடியால் மரணம் நேர்ந்துவிட்டது. இவ்விஷயம் எனக்குத் தெரிந்து நான் போய்ப் பார்த்தேன். 'வயாலு'வினால் மரணம் நேர்ந்துவிட்டது என்று எனக்குமட்டுந்தான் தெரியும். டாக்டர்கள் வந்து பார்த்து இயற்கையான மரணமென்று தீர்மானித்துவிட்டார்கள். அநாதைப் பிணமாக உன் தந்தை யெரிக்கப்பட்டான்." என்றான்

இதைக் கேட்டதும் என் மனம் இளகிப்போய்விட்டது. மீனாளின் கண்களில் நீர் ததும்பிற்று. என் பக்கத்தில் மீனாள் விம்மி விம்மியழுவதையென்னால் சகிக்கமுடியவில்லை; நான் அவளைத் தேற்றினேன். சில நிமிஷங்களுக்கெல்லாம் அவள் தேறிவிட்டாள்.

இனி நமது நேயர்களுக்கு நான் அதிகம் சொல்லவேண்டியதொன்றுமில்லை. சாரதா எங்களுக்கு மிக்க வேண்டியவளாய்விட்டாள். அவளுடைய கொடிய குணம் இருந்தவிடம் தெரியாமல் போய்விட்டது. எப்பொழுதும் அவள் எங்களருகில் எங்கள்பேரில் பிரியம் வைத்து சாந்தமாகவே காலத்தைப் போக்கினாள்.

வரதாராஜமுதலியார் என்காலிலும் மீனாள் காலிலும் விழுந்து தன்னைக் காண்பித்துக் கொடுக்கக் கூடாதென்று கெஞ்சினான். ஒரு வயது சென்ற மனிதன் என்னைக் கெஞ்சும்போது என் மனம் கரைந்துவிட்டது. "போனால் போகட்டும். மன்னித்து விடுங்கள்" என்று வரதாராஜமுதலியாருக்காக என் மனைவியும் எனக்கு சிபார்சு செய்தாள். நான் வரதாராஜமுதலியாரை போலீஸாருக்குக் காண்பித்துக் கொடுக்காமல் விட்டுவிட்டேன்..............

நேயர்களே! இக் கதையை உங்க ளெல்லோருக்குந் தெரிவிக்கும் பொருட்டு நான் எழுதும் போதெல்லாம் என் இனிய மனைவி—கோகிலம் என்னருகில் வந்து நின்றுகொண்டு என்னை யுல்லாசப் படுத்துவதே வழக்கம். சில சமயங்களில் நான் தவறாக எழுதிவிடுவேன். அந்த சமயங்களில் என் மனைவி நான் எழுதுவதைத் திருத்தி "என்ன? இதற்குள் அந்த இடத்தில் என்ன நேர்ந்த தென்பதை மறந்து விட்டீர்களே?" என்று கூறிவிட்டு "இவ்வளவு சீக்கிரம் மறந்துபோகக் காரணம் என்னவோ" என்று கேட்பாள். நான் உடனே அவளைப் பார்த்து "எல்லாம் உன்னால்தான்! இக்கதையை நான் யெழுதுவதும் உன்னால்தான்!—இப்பொழுது நான் மறந்துபோனதற்குக் காரணமும் நீதான், உனனுடைய அன்பின் மிகுதியால் நான் என்னுடைய கஷ்டங்களை மறந்துவிட்டேன்" என்று சொல்லிக்கொண்டே அவளுக்கு ஒரு முத்த மளிப்பேன். அவளும் நானும் ஒருவருடைய அன்பில் ஒருவர் ஈடுபட்டுத் தெய்வத்தைச் சேர்ந்து துதித்து நன்னெறியில் செல்ல நல்ல புத்தி கொடுக்கும்படிக் கேட்டுக் கொண்டனம்.

முற்றிற்று.

207699

ஏஜண்டுகள் தேவை.

எல்லா ஊர்களிலும் நமது 'ஆனந்தபோதினி' மாத, வாரப் பத்திரிகைகளை விற்பதற்கும், சந்தா சேர்த்துக் கொடுப்பதற்கும், விளம்பரம் சேர்த்துக் கொடுப்பதற்கும் தக்க சாமர்த்தியமுள்ள ஏஜண்டுகள் தேவை. விவரம் அறிய விரும்புவோர் எமக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். நமது புஸ்தகங்களும் பத்திரிகைகளும் எல்லா ஸ்டேஷன்களிலுமுள்ள ஹிக்கின்பாதம் புஸ்தகசாலைகளில் கிடைக்கும்

மானேஜர்.

இந்திய சமுகத்தை இன்னும் ஆரோக்கியமாக ஆக்குங்கள்



உங்கள் குழந்தைகள் எப்படி வளருகின்றன? அவர்கள் திடகாத்திரமாய் இருக்கிறார்களா? அல்லது அவர்களது வளர்ச்சிக்கு ஏதேனும் இடையூறு இருக்கின்றதா? இக்காலத்தின் இந்தியத் தாய்மார்களது பொறுப்பு, அவர்களது குடும்பத்தின் க்ஷேமத்தோடுமட்டும் நிற்கவில்லை இந்திய சமுகத்தின் வளர்ச்சியின் பொறுப்பும் அவர்களுடைய தேக சக்தியும், ஆரோக்கியமும் நிறைந்த ஸ்திரி புருஷர்கள் இத்தேசத்தின் வளர்ச்சிக்கு மேலும் மேலும் தேவை.

ஆகவே வீட்டில் ஒவ்வொருவரும் சாப்பிடவேண்டிய ஆகாரம் தேசத்தைப் பாதிக்கும் முக்கிய விஷயமாகும். உங்கள் குடும்பத்தின் நித்திய ஆகாரங்களில் தேயிலைப் பானத்தின் அவசியத்தை மறந்துவிடாதீர்கள். முக்கியமாகச் சிறுவர்களுக்கு வேண்டியது இந்த நல்ல சுகந்தரும் பானம்தான். அதுமட்டுமல்ல. இதை எல்லோரும் ஒரு நித்திய பழக்கமாகச் செய்துகொள்ளவேண்டும். தேயிலைப் பானப் பழக்கம் தேசத்தையே இன்னும் ஆரோக்கியமாகச் செய்யும்.

டீ செய்யும் முறை. நல்ல இந்தியத் தேயிலையை உபயோகியுங்கள். புதிய ஜலத்தைப் பொங்கவிட்டுச் சுத்தமான உலர்ந்த மண் பாண்டத்தை வெந்நீரில் அலம்பி, ஒருவருக்கு ஒரு டீ ஸ்பூன் வீதம் அதில் தேயிலையைப் போட்டு, பொங்குகிற ஜலத்தை விடுங்கள். ஐந்து நிமிஷம் கழித்து ருசிக்காக பாலையும் சர்க்கரையும் சேர்த்து அருந்தவேண்டும்.

இதுவே தடும்பத்திற்கு ஈடற்ற பானம்- **இந்தியத் தேத்தண்ணீர்.**

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

யுவஹு புரட்டாசிமீ—கலியுகாதி 5037, சாலிவாகனம் 1858,
பசலி 1345, கொல்லமாண்டு 1111, ஹிஜரி 1354,
இங்கிலீஷ் 1935ஹு செப்டம்பர்மீ—அக்டோபர்மீ

புரட்டாசி	செப்டம்பர்	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்	யோகம்.	விசேஷங்கள்.
1	17	செவ்	பஞ்9-25	கி✲50-45	சி50-45அ	கிருத்திகை, சாங்கம்வெட்ட
2	18	புதன்	சஷ்5-58	ரோ50-38	சித்60	சந்திர சஷ்டி விரதம்
3	19	வியா	சப்4-35	மிரு52-31	மர60	மஹாலக்ஷ்மி விரதம்
4	20	வெள்	அஷ்5-18	திரு56-18	சித்60	கெஜகௌரி விரதம்
5	21	சனி	நவ8-3	புன60	சித்60	திருதினஸ்பிருக்
6	22	ஞா	தச12-18	புன1-43	சித்60	சுப முகூர்த்தம் செய்ய
7	23	திங்	ஏகா17-40	பூச8-18	சித்60	சர்வ, மத்வ ஏகாதசி
8	24	செவ்	து23-40	ஆயி15-35	சித்60	துலாயனம் நா-58-43
9	25	புத	திர30-3	மக23-10	சி23-10அ	மாச சிவராத்திரி
10	26	வியா	சது36-23	பூர30-48	சி30-48ம	கேதார விரதம் [வாசை
11	27	வெள்	அ●42-23	உத்38-8	சி38-8அமி	சர்வ, பிதுரு மாளய அமா
12	28	சனி	பிர47-50	அஸ்44-58	மர60	
13	29	ஞா	துதி52-53	சித்51-23	சித்60	
14	30	திங்	திரி57-8	சுவா56-55	அ56-55ம	
15	1	செவ்	சது60	விசா60	மர60	
16	2	புதன்	சது0-35	விசா1-48	சித்60	
17	3	வியா	பஞ்2-55	அனு5-33	சி5-33பிர	
18	4	வெள்	சஷ்3-55	கே8-8	மர8-8அமி	
19	5	சனி	சப்3-30	மூல9-8	சித்60	
20	6	ஞா	அஷ்1-30 நவ57-48	பூரா8-38	சி8-38அம	
21	7	திங்	தச52-23	உத்6-30	மர6-30அ	விஜய தசமி (விசேஷம்)
22	8	செவ்	ஏகா45-35	திரு2-48 அவி57-38	சித்60	சர்வ, மத்வ ஏகாதசி, வியா தியஸ்தர் குளிக்க
23	9	புத	து37-35	சத51-18	சி51-18அ	பத்மநாப துவாதசி [பிக்க
24	10	வியா	திர28-48	பூர44-15	சித்60	பிரதோஷம், ஏற்றம் ஸ்தா
25	11	வெள்	ச○19-33	உத்36-58	சி36-58அ	பௌர்ணமி
26	12	சனி	பவு10-18	ரே29-50	ம29-50சி	தனபால விரதாரம்பம்
27	13	ஞா	பிர0-38 துதி53-38	அஸ்23-18	சித்60	ஆஸ்வீய பகுளம், அசூன்ய சயன விரதம், அவமாகம்
28	14	திங்	திரி47-13	பரு17-53	சி17-53ம	கிருத்திகை, அடுப்பு வைக்க
29	15	செவ்	சது42-35	கி✲14-5	சித்14-5அ	சங்கஷ்ட சதுர்த், கரிநாள்
30	16	புதன்	பஞ்40-0	ரோ12-8	சித்60	சீமந்தம், பும்சவனம், சுப முகூர்த்தம், யாத்திரை

(அக்டோபர் 1935)

			கே
சனி	4-துலா-புத 19-விரு-குரு		
			சுக்
ராகு	செவ்	குரு	சூரி புத

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
NO. 8, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.

புதிய நாவல்! புதிய நாவல்!!
வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

நீங்கள் நீண்ட நாளாக எதிர்பார்த்திருந்த
ஸ்ரீமான்-ஆரணி-குப்புசாமி முதலியார் எழுதிய

அரசூர் இலக்ஷ்மணன்

அல்லது

அதியற்புதக் கள்ளன்

என்னும் புதிய நாவல் தயாராய்விட்டது.

இந்நாவலில் அரசூர் இலக்ஷ்மணனது சாமர்த்தியச் செயல்களும், அதிசயத் திருட்டுகளும், சாங்க என்ஜினீரும், நூதன நீர்மூழ்கிக் கப்பலைச் செய்யும் முறைகளைத் தெரிந்தவருமான லோகநாயகன் என்பவர் என்ன ஆனார் என்பதைப் போலீஸாரும், துப்பறிபவர்களும் கண்டு பிடிக்க முடியாமலிருக்க இவ்வரசூர் இலக்ஷ்மணன் அவ்வுண்மையைக் கண்டு பிடிப்பதும், கொலைகாரர்களான எத்தூர் வீரண்ணனையும் அவனது சகோதரன் அழகப்பனையும் மடக்க வைத்து உண்மை யறிவதும், சிறையிலிருந்தவாறே ஒரு பிரபுவின் வீட்டில் கொள்ளை யடிப்பதும், தான் செய்யும் களவுகளைக் கண்டுபிடிக்க முடியாவாறு துப்பறிபவர்களைத் திண்டாடவைப்பதும், இலக்ஷ்மணன் சல்லம்மாள் மீது காதல்கொண்டு மயங்குவதும், பிரசித்திபெற்ற துப்பறியுஞ் சிங்கம் ஆனந்தஸிங்கின் அரிய முயற்சியும், கடைசியில் அரசூர் இலக்ஷ்மணனே கொள்ளையடிப்பதை விட்டுத் துப்பறியும் தொழிலில் ஈடுபட்டுப் பிரசித்தி பெறுவதும் படிக்கப் படிக்க இன்பத்தைப் பயக்கும். சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. உடனே ஆர்டருக்கு முந்துங்கள். சுமார் 600 பக்கங்கள் கொண்ட

இதன் விலை ரூபா 2—0—0.

கிருஷ்ணஸிங்

அல்லது

துப்பறியும் சிடன்

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.
அறிவைப் புகட்டும் அரிய நாவல் இதுவே.

துப்பறியும் இரகசியங்களும், தந்திர சாமார்த்தியங்களும், வீரதீரச் செயல்களும், உலகில் பல படுமோசப் படுகுழியிலிருந்து தப்புவதற்கான யுக்தி மதிகளும், கெடுவான் கேடு நினைப்பான் என்பதற்கிணங்க நீதிமதிபோதிக்கூடிய பல அத்தாட்சிகளும், இன்னும் பல இனிய அரிய போதனைகளும் அடங்கியது.

இதன் விலை அணா 14.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 187, சென்னை.

6

ஓர் சிறந்த தமிழ் நூல் வெளியீடு

நாலடியார் மூலமும்

விரிவான உரையும்.

செங்கூர் வித்வான்-கி. ஆறுமுகஞ் சேர்வை அவர்களைக்கொண்டு இந்நூல் மிகத் தெளிவாகவும், விரிவாகவும் பழைய உரைகளையும் தழுவிப் புதிதாக எழுதப்பட்ட சிறந்த உரையுடன் இப்போது வெளிவந்திருக்கிறது.

இந் நாலடியார் என்னும் நூலானது, ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் கடைச்சங்க காலத்தில், பாண்டியனிடம் வந்திருந்த ஜைன முனிவர் பலரால் தனித்தனி வெண்பாக்களாக இயற்றப்பட்டு பின்னர் அப் பாண்டியனால் தொகுக்கப்பட்டுப் பெயரிடப்பட்ட சிறந்த நீதி நூலாகும். உலகத்தில் பல தேசத்தாராலும், பல சமயத்தாராலும் கொண்டாடப்படும் திருக்குறளோடு ஒப்புமை யுடையது, உலகத்தார் பலருக்கும் பொதுவாகச் சொற்பல நீதிகளை எடுத்துரைக்கக் கூடியது. உலகத்தில் மனிதர்க்குப் பயன் தரத் தக்க நூல்களில் இது சிறந்ததாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இது முதன்மை பெற்றதாகும். மனிதர் அடையவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கினையும் அடைதற்கு இந்நூல் நல்ல வழிகாட்டி யாகும். மாணவர்களும், மற்றவர்களும் அவசியம் படிக்கத் தக்க நூலாகும்.

இதற்குப் பிற்காலத்தில், 'பதுமனார்' என்னும் சிறந்த புலவரொருவர் பால், இயல், அதிகாரம் என்னும் பாகுபாடுகளைச் செய்து சிறந்த உரை யொன்றும் இயற்றி யிருக்கின்றார். வேறு சில சிறந்த புலவர்களும் சில உரைகள் எழுதியிருக்கின்றார்கள்.

இது, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களையும், பதினொரு இயல்களையும், நாற்பது அதிகாரங்களையும், நானூறு செய்யுட்களையு முடையது.

இந்நூலுக்கு, முன் பதுமனார் முதலியவர்களால் இயற்றப்பட்ட சில உரைகள் இருப்பினும், அவை சிறந்த கல்வி யறிவுடையாரே படித்துணரத் தக்க பழந்தமிழ் நடையில் அமைந்திருப்பதாலும், ஆரம்பக் கல்வி யுடையாரும், சாமானியக் கல்வி யுடையாரும் தக்க ஆசிரியரிடம் பாடங்கேட்டுத் தெரிந்து கொள்ளக் கூடியனவா யிருப்பதாலும் எவரும் தாமே படித்துணரத் தக்க விதத்தில் இக்காலத்துக்கேற்ப எளிய தமிழில் தெளிவான உரை யொன்று எழுதி வெளியிட வேண்டுமென்று பலர் எம்மிடம் கேட்டுக்கொண்டதற் கிசைந்து, அவர்கள் விரும்பிய விதமாகவே இவ்வுரை எழுதி வெளியிடப் பெற்றிருக்கிறது. இதில் பதவுரையும், கருத்துரையும், விசேடவுரையும் எவர்க்கும் சந்தேக முண்டாகாதபடி பொருள்களை நன்கு விளக்கிக்காட்டி மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. பழைய உரைப் பகுதிகள் மிகத் தெளிவாக விரித்தெழுதப்பட் டிருக்கின்றன. நூல் அமைப்பிற்கு விரோதமாகவும், முன்னுக்குப்பின் முரணாகவும் பொருள்பட்டுச் சந்தேகங்களை விளைவித்துக்கொண்டிருந்த உரைப்பகுதிகளில் ஐயம் நீங்குமாறு பொருத்தமான பொருள்கள் விளக்கப்பட் டிருக்கின்றன. புதிய உரைகளும் ஆங்காங்கே விரித்தெழுதப்பட் டிருக்கின்றன. சில செய்யுட்களின் சரியான பொருள் விளங்காமல் மயக்கத்தை உண்டாக்கிக் கொண்டிருந்த உரைகள், வேறு நூல்களின் ஆதாரங்களைக்கொண்டு சந்தேகம் நீங்கச் சரியான விதத்தில் அமைக்கப்பட் டிருக்கின்றன. வேறு நூல்களில் விளங்காதிருந்த பொருள்களும் இந்நூற் செய்யுளின் ஆதாரத்தைக்கொண்டு விளக்கப்பட் டிருக்கின்றன. இதுவரை இந்நூலுரைகளிற் காட்டப்படாத பற்பல சிறந்த கருத்துக்கள் இவ்வுரையில் நூதனமாக எழுதப்பட்டிருக்கின்றன. இந்நூல் முதற் செய்யுளுரையில் ஜைனமதக் கோட்பாடுகள் மிகத் தெளிவாக எடுத்தெழுதப் பட்டிருக்கின்றன. பல கல்விமான்களும், ஜைனர்களும் நாலடியில் சில பாடல்களுக்குத் தெரிவித்துவந்த அரிய உரைகளும் இப்புதிய வுரையில் காட்டப்பட்டிருக்கின்றன. இலக்கணக் குறிப்புக்களும், இலக்கியக் குறிப்புக்களும், தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல் சூத்திரங்களின் உதாரணங்களாலும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், கலித்தொகை, நீலகேசி, சூடாமணி நிகண்டு, பழமொழி, அறநெறிச்சாரம், திருநூற்றந்தாதி முதலிய இலக்கிய நூற் செய்யுட்களின் உதாரணங்களாலும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் இவ்வுரையில் செய்யப்பட்டிருக்கும் திருத்தமான வேலைகள் பல.

இதுவரை, நாலடியாருக்கு இத்தகைய தெளிவான உரை வெளிவந்ததில்லை என்பது இதைப் படித்துப் பார்ப்பவர்க்கு நன்கு விளங்கும். இது டபுள்கிரௌன் 16-பேஜ் அளவில் 51-பாரங்களுக்கு மேற்பட்டும் 820 பக்கமுள்ளதாயும் அச்சிடப்பட்டிருக்கிறது. தமிழர் ஒவ்வொருவரும் அவசியம் வாங்கிப் படிக்கத் தக்கது.

இதன் விலை ரூபா 2—8—0.

நாகரீகம்?

இரண்டாம் பதிப்பு.

கே. இராஜு செட்டியார், எம்.பி. பி.ஜி., அவர்கள் இயற்றியவை

'நாகரீகம்' என்ற உயர்ந்த பெயரை வைத்துக்கொண்டு இக்காலத்து நடைபெறும் பல போலி வழக்க ஒழுக்கங்களின் சீர்கேடுகளை ஒழிக்கவும், நீதியும், உண்மையும், அன்பும் நிலைகுலைந்து, மூலை முடுக்குகளில் தேங்கிக் கிடக்க, அநீதியும், பொய்யும் கொடுமையும் ஒருங்கு திரண்டு கரைகடந்து பெருகி வரும் பெரு வெள்ளத்தைத் தடுக்கும் அணைக்கட்டாக இக்காவல் வரையப்பட்டது. இதில் உள்ளதை உள்ளபடியே எடுத்துக் காட்டி இந்தியர் எல்லோரும் ஒன்று சேர்ந்து அன்புடன் வாழவேண்டுமென்று அரும் பெரும் நீதிகள் அடங்க பலதிறத்து மனிதர்களின் சுபாவத்தையும் போக்கையும் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது; இதில் ஜாதி சமூக கட்டுப்பாடுகளின் வழுக்களும், ஆத்மமித்திரனின் அருங்குணங்களும், கருத்தொருமித்த காதலர்களின் அந்தரங்கப் பிணைப்பும், மோசக்காரர்கள் இறுதியில் நாசமுறுவதும், பல அத்தாட்சிகளோடு எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இதை எல்லாரும் வாசித்து நற்பயனடைந்து இன்புறுவார்களாக. இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, சென்னை.

அம்பாலிகை

அல்லது

அதிசய மரணம்

அறிவைப் புகட்டும் ஓர் அருமையான துப்பறியும் நாவல் இதுவே. இதில் கொலைகளவுக் கஞ்சாப் பாதகனான கறுப்பண்ணன் என்பவன் தந்திர சாமர்த்தியமாய் அம்பாலிகை யென்னும் தன் உறவினளை அவள் ஆஸ்திக்காக மணம் புரியக்கருதி, அவளை இறந்தவள் போல யாவரும் நம்பும்படியான சூழ்ச்சிசெய்து, ஏற்கனவே அவனுக்குச் சகோதரன் முறையும் அவளால் காதலிக்கப்பட்டவனுமான மனோகரன் என்பவன் மேல் குற்றஞ்சுமத்தி, குற்றஞ் செய்தவனைக் கண்டுபிடிக்க தவறுதலாய், பல கொலை களவுகளைக் கண்டுபிடித்தும், ஜாஸூஸ சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவனும், மகா வீரதீர சிங்கமும், ஆபத்துகளை அணுவளவும் மதிக்காது நேர்முகமாக எதிர்த்து வெற்றிமாலை சூடுபவனுமாகிய துப்பறியும் ஆனந்த சிங்கை ஏற்படுத்துவதும், கடைசியில் ஆனந்தனின் உண்மையான குற்றவாளியை அதாவது கறுப்பண்ணனையே, பலவித தந்திர சாமர்த்தியங்களால் கண்டு பிடிப்பதும், அம்பாலிகையை உயிருடனேயே மீட்பதும், தவறுதலாக அம்பாலிகையால் கருதப்பட்ட மனோகரன் கடைசியில் அவளை மணம் செய்துகொண்டு இன்புற்று வாழ்வதும், கறுப்பண்ணன் தான் செய்த குற்றங்களுக்காக தேசாந்தரம் போய்விடுவதும் துப்பறியும் ஆனந்தசிங் வெற்றிமாலை சூடி தான் அமிர்தம்மாள் என்னும் கன்னிகையை மணஞ்செய்துகொண்டு மேலும் பிரக்யாதி அடைவதும் படிக்கப் படிக்க மிகவும் அறிவை வளர்க்கும் என்பது நிச்சயம்.

இதன் விலை அணா 12.

இதர ஆக்ட் புஸ்தகங்கள்

	ரூ.	அ.		ரூ.	அ.
இந்தியன் பினல் கோட் சட்டம்	3	0	பஞ்சாயத்துச் சட்டம்	1	[illegible]
கிரிமினல் லா	3	0	இந்துதேச சாட்சி ஆக்ட்	1	[illegible]
சிவில் லா	3	0	தேவஸ்தான சட்டம்	1	[illegible]
புது விவகார சிந்தாமணி	2	8	எஸ்டேட் லாண்டு ஆக்ட்	1	[illegible]
புது பெரிய ஹிந்து லா	2	0	ஸ்டாம்பு ஆக்ட்	0	12
மகம்மதியன் லா	2	0	ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்	0	12
கிராம முன்சீப் சட்டம்	1	8	டிரஸ்டிகள் சட்டம்	0	12
பரம்பரை கிராம உத்தியோகஸ்தர்கள் சட்டம்	1	0	கால நிர்ணயச் சட்டம்	0	8
இன்கம் டாக்ஸ் சட்டம்	1	0	நில ஆக்கிரமிப்பு என்குரோச்மெண்ட் சட்டம்	0	[illegible]
லோகல்போர்ட் ஆக்ட்	2	0	கிராமச் சுகாதாரம்	0	[illegible]

